தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை.)

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."—திருக்குறள்.

தொகுதி 1. } பிங்கள௵ மார்கழிமீ { பகுதி 3.

இரசாயன சாஸ்திரம்.

[திருநெல்வேலி ஹிந்து கலாசாலையின் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ க. சூ. வீரராகவையரவர்கள். M. A., F. C. S., எழுதியது]

(92-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

VI. வஸ்துக்களின் அமைப்பு.

பல கொள்கைகள்:—மிகப் பழைய காலங்களில் நாகரிகம் மலிந்த நன்னாடுகளாகிய சைனா, இந்தியா, பெர்ஷியா, கிரீஸ், ரோம் முதலிய இடங்களிலுள்ள மதவாதிகளும் தத்துவ சாஸ்திரிகளும், வஸ்துக்களின் அமைப்பு, அவைகளின் நித்தியாநித்தியங்கள் முதலியவற்றைப்பற்றி, ஆகமம் அநுமானம் பிரத்தியக்ஷமாகிய மூன்றளவைகளையும்பிரயோகித்து,பலவாறாய்ஆராய்ந்தறியமுயன்றனர். அவர்களில் ஒரு சாரார், 'வஸ்துக்கள் நுண்ணிய பொருளாகிய பல அணுக் கூட்டங்களாய்த் திகழ்கின்றன' என்றும், மற்றொரு சாரார் 'அணுவென்பதில்லை; பல அணுக்கள் கூட்டமாய்ச் சேர்ந்து வஸ்துக்கள் உண்டாவதில்லை; ஒரு வஸ்துவானது ஏதோ ஒன்றின் ஓரே நீட்டமாய்ப் பலவென்று பிரிக்கமுடியாததாயுள்ளது' என்றும், இன்னும் ஒரு சாரார், 'பொருள்களெல்லாம் மாயை, அநித்தியங்கள்; அவ்வைகளுக்கென்று ஒரு விசேஷமும் கிடையாது' என்றும் வெளியிட்டிருக்கின்றனர்.

அணுவாதம்:—இம்மூன்று கொள்கைகளில் முதலாவதே மேல் நாட்டுச் சாஸ்திர விற்பன்னர்களால் முழுதும் அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர், கிரீஸ்

தேசத்தில் விளங்கின ஞானிகளாகிய லூகிப்பஸ், டெமாக்கிரிட்டஸ் என்பவர்களால் இக்கொள்கை விஸ்தரிக்கப்பட்டது. அதற்கும் முன்னர், நம் இந்தியாவில் கணாதர் என்ற முனிவர் அணுக்களையும் அவைகளின் கூட்டமாகிய பொருள்களையும் அப் பொருள்களின் குணத்தையும் அவைகளின் வகைகளையும் பற்றி விஸ்தாரமாக வைசேஷிக தர்சனத்தில் எடுத்துரைத்திருக்கின்றனர். இம்மாதிரியான கொள்கை மகமதியர்களால் இந்தியா, கிரீஸ், ஈஜிப்டு முதலிய தேசங்களிலிருந்து ஸ்பெயின் ஜெர்மனி முதலான தேசங்களுக்குக் கொண்டுபோகப்பட்டது. அவ்வவ்விடங்களில் வேரூன்றி, அதுகடைசியாகக் கி. பி. 1808ம் வருஷத்தில் இங்கிலாந்திலுள்ள டால்டன் என்றசாஸ்திரஞ்ஞரால் கையாளப்பட்டு மேன்மை யடைந்தது. அக் காலமுதல் அக்கொள்கை வேறு பலர் கையில் திருத்தமடைந்து,இப் பொழுது இரசாயன சாஸ்திரிகளால் தங்கள் சாஸ்திரத்திற்கே அஃது ஒரு முக்கிய அடிப்படை யென்று கருதப்படுகிறது. அது ரசாயனிகளுக்குத் தெரிந்த பல விஷயங்களை நன்கு விளக்கிற்று; புதிதாய்த் தென்பட்ட விஷயப் பாகு பாடுகளையும் வஸ்துக்களின் கூறுகளையும் நன்கு விளக்கி வந்தது. இதைத்தான் 'டால்டன் அணுவாதக் கோட்பாடு' என்று சொல்வது.

அதன்சாராம்சங்கள்:—இவ்வணுவாதத்தின் முக்கியசாராம்சங்கள் பின் வருவனவாம்:—ஒவ்வொரு அணுவையும் வேறு இருஅணுவாகப் பிரித்தல் முடியாது; அணுக்களுக்குப் பரிமாண வேறுபாடுகளும், அவற்றால் நிறை வேறுபாடும் உண்டு; மிகக் குறுகிய அணுவே நிறையிலும் மிகச் சிறிய நிறை யுடைத்து; ஆனால் ஒரே ஜாதி அணுக்களுக்கு நிறை, பருமன், அளவு முதலியன சமமே; ஒன்றுக்குள் வேறொன்று புக முடியாது; இரண்டு அணுக்கள் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் இருக்க முடியாது; ஒன்றோடொன்று மோதுகையில் அவைகளுக்குள் சலனம் ஏற்பட்டு, அந்தச் சலனத்தினால் மற்றும் பக்கத்திலுள்ள அணுக்கள் பாதிக்கப்பட்டு, இப்படி முறை முறையாக் ஒரே இடத்தில் கூடியிருக்கிற எல்லா அணுக்களுக்கும் சலனம் உண்டாகிறது. இன்னும் அவைகளுக்குள் பரஸ்பர ஆகர்ஷணமும் உண்டு. அதனால் அணுக்கள் சேர்ந்து பல பதார்த்தங்கள் உண்டாகின்றன. நமக்குக் கடினமாகக் கிடைக்கிற கந்தகத்தைப் பிரித்துக்கொண்டே போனால், கடைசியாக, நமக்குத் தெரிந்துள்ள சோதனை வழிகளில் எதனாலும் வேறு இரண்டாகப் பிரிக்கமுடியாத கந்தக அணுவே கிடைக்கும். அதேமாதிரிதான் செம்பு இரும்பு முதலிய லோகங்களும். கந்தகத்தையும் இரும்பு அல்லது செம்பையும் சேர்த்து ஒரு கண்ணாடிக் குழலில் சுடவைத்தால், இரண்டு வஸ்துக்களும் சேர்ந்து ஒரு புதிய கரிய வஸ்துவாகிறது. இங்கே மூலத்தில் பார்க்கப் போனால் கந்தக அணுவும் செம்பு அணுவும் சேர்ந்து

இரண்டு அணுக்களாலாகிய செம்புகந்தஜம், (Copper Sulphide) உண்டாகிறது. இதே மாதிரி மற்ற அணுக்களும் சேர்கின்றன. இப்படிச் சேரும்போது அணுக்கள் சிறிய எண்கள் வீதமே அனேகமாய்ச் சேருகின்றன. உதாரணமாக, ஒரு கந்தக அணுவும் ஒரு செம்பு அணுவும் சேரும்; அல்லது ஒரு கந்தக அணுவும் இரண்டு செம்பு அணுவும் சேரும்; அல்லது இரண்டு கந்தக அணுவும் ஒரு செம்பு அணுவும் சேரும்; அல்லது இரண்டு கந்தக அணுவும் இரண்டு செம்பு அணுவும் சேரும். இம்மாதிரியான சேர்க்கைகளில் அணுவின் தொகை நாலு ஐந்துக்கு மேலிராது. இஃது அணுச் சேர்க்கையின் முக்கிய சாரம்.

மாலுக்கியூல்களும் அணுக்களும்:—இனி அணுக்களின் ஆதியும் அந்தமும் தெரிந்தில. அவைகளை அழிக்கவும் மாற்றவும் முடியாது. ஆனால் அவைகள் திரும்பத் திரும்ப ஒன்றுக் கொன்று சம்பந்தஞ் செய்து கொண்டு; வெவ்வேறு பொருள்களைத் தருகின்றன. ஒரு ஜாதி அணுவில் இரண்டு மூன்று சேர்ந்து ஒரு மாலுக்கியூல், (Molecule) ஆகும். இம்மாலுக்கியூலே கடைசியாகத் தன்னந்தனியாக விளங்குவது. மாலுக்கியூலிலுள்ள அணுக்களுக்குத் தங்களுக்கென்றேற்பட்ட ஒரு சுயேச்சையான வாழ்வு கிடையாது. எப்பொழுதும் தம்மினத்தையாவது பிற இனத்தையாவது அவை தழுவியே நிற்றல் கூடும். காற்றிலேயுள்ள பிராணவாயுவின் அணு இரண்டு சேர்ந்து ஒரு மாலுக்கியூலாகி, பிரபஞ்சத்தில் அப்படிப் பல மாலுக்கியூல்கள் சேர்ந்து பிராணவாயு என்ற பதார்த்தமாகிறது. இப்படியே ஜலவாயு முதலிய காற்றுக்களும், ஜல முதலிய திரவங்களும், கந்தகம் சீனிக்கார முதலிய கடினங்களும் ஆகின்றன. ஆகவே, பதார்த்தங்கள் பிரிக்கப் பட்டால், பௌதிகமாகக் காட்சியளவில் பதார்த்தங்களின் குணங்களை இன்னும் பெற்றிருக்கும் மாலுக்கியூல்கள் கிடைக்கும். பின்னும் இம்மாலுக்கியூல்களை இரசாயன வழியாகச் சோதித்துப் பிரித்தால், கடைசியில் பல அணுக்களே கிடைக்கும். இப்படிப்பட்ட அணுக்களே மூலப் பொருள்கள். ஆனால் இவ்வணுக்கள், பிரிவுபடும் தறுவாயில் மாத்திரம் தனித்திருக்குமே தவிர, மற்ற வேளையில் ஏதாவது தன்னின அணுவுடனாவது பிறவின அணுவிடனாவது கலந்து விடும்.

மாலுக்கியூல்களும் அவைகளின் உஷ்ண நிலையும்:—இனி முன் அதிகாரத்திற் சொல்லியபடி, ஒரு கடினமாகிய பனிக்கட்டி சூடுபட்டவுடன் இலகுவில் இளகி, பின் சூடு ஏற ஏற ஆவியாய் மாறி விடுகிறது. முதலாவது, ஜல மாலுக்கியூல்கள் பல சேர்ந்து இறுகிப் பனிக்கட்டியாகின்றன. சூடு கண்டவுடன் பொறுக்கமாட்டாமல் அவைகள் பிரிய ஆரம்பிக்கின்றன. திரவமா யிருக்கும்போது அம்மாலிக்கியூல்கள் சலித்துக்கொண்டு, கொண்ட பாத்திரத்தில் அடங்கியிருக்

கின்றன. இன்னும் சூடு ஏற ஏற அம்மாலுக்கியூல்களின் சம்பந்த மற்றுப் போய், அவைகள் இன்னும் ஒன்றோடொன்று சந்தியா வண்ணம் பிரிக்கப்பட்டுப் போய் விடுகின்றன. இம்மாதிரியான ஜலமாலுக்கியூல்கள் வாயு ஸ்திதியில் சதா ஓடுந் தன்மையை அடைந்து, கொண்ட பாத்திரத்தில் அடங்கா வண்ணம் சலித்துக் கொண்டிருக்கின்றன. இச்சலனம் மாலுக்கியூல்களின் ஒரு முக்கிய விசேஷம். இச்சலனம் குறையக் குறையப் பதார்த்தங்களுக்கு வாயு ஸ்திதி போய்த் திரவஸ்திதி வந்து, பின்னும் குறைந்தால் கடின ஸ்திதியும் வந்துவிடும். சாதாரணமாய் வாயு ஸ்திதியிலிருக்கும் எல்லாப் பதார்த்தங்களுக்கும் இந்த மாதிரியான மாலுக்கியூல்கள் உண்டு. அவைகள், வில்போன்றன: வளையுமே யன்றி ஒடியா; ஒன்றோடொன்று மோதுகையில் சப்பையாதல் இல்லை. ஒரு புறமாய் நேர் முகமாக ஓடிக்கொண்டிருக்கும் மாலுக்கியூல் அடிபட்டவுடன், பருமனிலாவது வடிவிலாவது பங்கம் ஏற்படாமல், மற்றோர் பக்கம் ஓடும். அப்படி ஓடிப் பாத்திரத்தின்மேல் அடிக்கும் போது முன் சொன்ன மாதிரி நேர் வழியில் இன்னொரு பக்கம் திரும்பி ஓடும். இவைகளுக்கு நடுவே இவைகளினால் நிறைக்கப்படாத வெளிஇடம் உண்டு. இவ்விடத்தில் இவைகள் தாராளமாய் ஓடிக்கொண்டிருக்கும்.

மேற்சொன்ன வாயுஸ்திதியிலிருக்கும் பதார்த்தம் ஒன்றை ஒரு கண்ணாடிக்கலத்திலிட்டுக் குளிர வைத்தால் (அஃதாவது அதன் சூட்டை வெளிப்படுத்தினால்) அம்மாலுக்கியூல்களெல்லாம் சலனம் குன்றி, ஒன்றுக்கொன்று சமீபமாய் இழுக்கப்பட்டு, அதனாலே நடுவேயுள்ள இடையிடங்களும் சுருங்கி, கடைசியாகத் திரவஸ்திதியை அடையும். இப்பொழுதும் மாலுக்கியூல்களுக்குச் சலனம் உண்டு; ஆனால் வாயுஸ்திதியிலிருந்த அளவு கிடையாது. இம்மாதிரி திரவஸ்திதியிலுள்ளது ஜலமென்றே வைத்துக் கொள்வோம். இப்பொழுது இந்த ஜலமிருக்கும் கண்ணாடிக் கலத்தை உப்பும் பனிக்கட்டியும் நிறைந்த தொட்டியின் மத்தியில் வைத்தால், உள்ளேயிருக்கிற ஜலம் உறைந்துவிடுகிறது. அஃதாவது, அந்தத் திரவத்திலுள்ள சூட்டை வெளியேயுள்ள பனிக்கட்டி உப்பு இவைகளினால் நாம் இன்னும் வாங்கி விடுகிறோம். சூடு போய்விடவே, மாலுக்கியூல்கள் முன்னை விட இன்னும் சமீபத்தி லிழுக்கப்பட்டுத் தங்கள் சுயேச்சையான சலனத்தை முற்று மிழந்து, இறுகிற பதார்த்தமாகி, கடினமாகி விடுகின்றன. இம்மாதிரியே மற்றப் பதார்த்தங்களின் மாலுக்கியூல்களும் சூட்டின் வேறுபாட்டுக்குத் தகுந்தபடி பலவித ஸ்திதிகளை அடைகின்றன.

மாலுக்கியூல்களும் அவைகளின் பாரமும்—பாயில் தரை கோட்பாடு:—மாலுக்கியூலின் சலனம் சூட்டினால் பாதிக்கப் படுவதுபோல, அஃது, அதன்மேல் ஏற்றப்படும் பாரத்தினாலும் பாதிக்கப்படும்,

உதாரணமாக, உழக்குக் கரியமிலவாயு அல்லது கந்தகதுவி ஆக்ஸி ஜன்வாயு (Sulphur dioxide) வை ஒரு கண்ணாடிக் குழலில் எடுத்துக் கொள்வோம். முன்பு தெரிந்து கொண்டபடி, அதற்கு ஒரு மூடி போட்டாலொழிய, அஃது அக்குழலில் நில்லாது. ஆகவே, ஒரு சமயத்தில் அவ்வாயுவின் மீது ஒரு பார மிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். பின்பு அப் பாரத்தை இரட்டிக்கப் பண்ணி னல் அவ்வுழக்கு வாயுவும் அரைக்காற்படியாய்விடும். இன்னும் பாரத் தை நாலு மடங்கு அதிகமாக்கினல், அதன் அளவும் மாகாணிப்படி யாய் விடும். இனி இப்படிப் பாரத்தை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக அரைப் பங்காகக் குறைத்து ஆக்கிவிட்டால், அவ்வாயுவின் அளவு இரட்டித்து விடும். பாரத்தைக் கால் பங்கு ஆக்கினல் அளவு நாலுபங்காய் விடும். இதுதான் ஒரு வாயுவின் மீதுள்ள பாரத்திற்கும் அதன் அளவுக்குமுள்ள சம்பந்தம். பாரம் குறைவதற்குத் தக்கபடி அதன் ஆகிருதி ஜாஸ்தியாகும்; பாரம் அதிகமானல் ஆகிருதி குறையும். இந்தச் சம்பந்தந்தான் இங்கிலீஷில் 'Inverse Ratio' எனப்படும். அஃதாவது, நேர் விகித மில்லா மல் தலை கீழான விகிதம். இது 'பாயில் துரை சித்தாந்தம்' (Boyle's Law) என்று வழங்குகிறது. இந்த மாதிரி ஒரு வாயுவின் பாரத்தி ற்கும் ஆகிருதிக்குமுள்ள சம்பந்தம், அதன் சீதோஷ்ண நிலை ஒரே தன்மையாக இருக்கும்போது தான் உண்மையாகும். சீதோஷ்ணம் மாறுபடவே, முன்பந்திகளிற் சொல்லிய வண்ணம் ஒரு வாயுவின் ஆகிருதிக்கு வேறுபாடுகள் தோன்றிவிடும். ஆகவே, ஒரு வாயுவின் ஆகிருதியானது தன்மேலிருக்கும் பாரத்தினுலும், தன் சீதோஷ்ண நிலையினுலும், தலை கீழாகவும் நேர் வழியாகவும் முறையே பாதிக்கப் படுகிறது. ஒரு வாயுவின் குறிப்பிட்ட ஆகிருதி பலவேறு மாறுதல் களுக்குத் தகுந்தபடி மாறுபாடடைவதைக் கணக்கிட்டுப் பார்க் கலாம்.

இந்த விஷயத்தில் பாரம் ஜாஸ்திப்படவே வாயுவின் மாலுக் கியூல்கள் எண்ணத்தில் குறைவுபடாமல் ஒரு சிறிய ஆகிருதி அள வில் அடங்கிவிடுகின்றன. அஃதாவது முன்னைவிட அவைகள் ஒன்றோ டொன்று சந்திப்பதும் பாத்திரப் பக்கங்களில் மோதுவதும் ஜாஸ்தி யாகின்றன. அதனுல், பக்கங்களில் பாரம் அதிகரிக்கின்றன. உழக்கு இடத்திலிருந்த மாலுக்கியூல்களே பாரம் அதிகப்படும்போது ஆழா க்கு இடத்துக்குள் உலாவுகின்றன. ஆகவே, முன்னைவிட அவைகளின் இடையே யுள்ள இடையிடங்கள் சுருக்கமாகி விடுகின்றன. இன்னும் பாரம் அதிகப்படவே, இடையிடம் மிகச் சுருங்கும். கடைசியாக, போதுமான பாரம் ஏறியவுடன், மாலுக்கியூல்கள் வெகு சமீபத்தில் உலாவி ஆகர்ஷிக்கப்பட்டு, திரவமாகலாம். அதே சமயத் தில் அவ்வாயுவிலுள்ள உஷ்ணத்தை வெளியாக்குவதற்குத்

தகுந்த ஏற்பாடுகளைச் செய்தால், நாம் முன்பு கண்டு கொண்டபடி உடனே அவ்வாயு திரவமாகி விடும். இம்மாதிரி தான் ஆகாயத்திலுள்ள காற்று, காற்றுத்திரவமாய்ச் செய்யப் படுகிறது. இனி, ஒரு வாயுவின் பாரத்தை அதிகப்படுத்து வதற்குப் பதிலாக, ஒரே சிதோஷ்ண நிலையில் அதைப் பாதியாக்கி னால் அவ்வாயுவின் ஆகிருதி உழக்கிலிருந்து அரைப்படியாய்விடும். அப்பொழுது மாலுக்கியூல்கள் உலாவ ஜாஸ்தி இடம் ஏற்பட்டு விடு கிறது; இடையிடங்களும் ஜாஸ்தியாகி விடுகின்றன; ஒன்றன் மேலொ ன்று ஒரு க்ஷணத்தில் மோதுவதும், பாத்திரப் பக்கங்களில் அடிக் கிறதும், முன்னையவிடப் பாதிதான் சாத்தியமாகிறது; ஆகவே, பார மும் பாதி தானிருக்க முடியும். ஏனெனின் மாலுக்கியூல்களின் தாக்குதலே (மோதுகையே) பாரத்திற்குக் காரணமாகும்; தவிரவும் மாலுக்கியூல்கள் முன்னைய விட இப்பொழுது இரட்டிப்புத் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இம்மாதிரியாக வாயுக்களின் குண குணங்களையும், அவைகள் பற்பல நிலைமையில் ஏற்கும் ஸ்திதியையும் இப்பதார்த்தங்களின் அமைப்புக் கோட்பாட்டி லடங்கிய மாலுக்கி யூல் அணு முதலியவைகளின் உதவியைக் கொண்டு நன்றாய் விளக்கிக் காட்ட முடியும்.

நமது நோக்கம்:—இதுவரையும் பதார்த்தங்களின் லக்ஷணங் களையும் அவைகளின் ஸ்திதியையும் அமைப்பையும் பற்றி ஒருவாறு தெரிந்துகொண்டோம். இனி இவ்வியாசங்களை வாசிப்பவர்களுக்கு நாம் சொல்லவேண்டிய தொன்றுண்டு. அஃதாவது, நாம் இப்பொ ழுது தமிழில் எழுதுவதும், இதன் மூலமாய்த் தமிழ் மக்கள் அறிய வேண்டுமென்று விரும்புவதும் ஒரு புதிய விஷயம்; இது தற்கால நாகரிகர்களால் ரசாயன சாஸ்திரம் என்றழைக்கப்படுவது; இதன் முற்போக்கையும் முக்கிய லக்ஷணங்களையும் அவைகளை இலகுவாய் அறியச் செய்யும் கோட்பாடு சித்தாந்தங்களையும் தெரியப்படுத்து வதே நம்முடைய முக்கிய நோக்கம்; இவைகளின் வழியாய் மனிதர் களுக்குப் பல விதத்திலும் சுகத்தையும் சௌக்கியத்தையும் மற்றப் பிரயோஜனங்களையும் கொடுத்து வருவனவும் கொடுக்க வல்லனவு மாகிய விஷயங்களைப் பற்றியும் பதார்த்த விமரிசைகளைப் பற்றியும் சொல்ல நாம் கொஞ்சங் கூடத்துணிய வில்லை; ஏனெனின், அது விரிவுடைத்து; எழுதி எடுத்துக் காட்டுவதற்குக் கஷ்ட முடைத்து; அபூர்வத்தையும் சிக்கலையும உடைத்து; கடைசியாக, இப்பொழுது எண்ணித் துணிந்திருக்கும் அடிப்படையின்றி, அது சாலவுமியலா தது, என்பதே.

வியாசங்களைப் படிப்பதில் உள்ள கஷ்டங்கள்:—இவ்விரசாய னத்தைப்பற்றி எழுதுவதை நன்றுதெரிந்து கொள்ள விரும்புகிறவர்

களுக்கு இவ்விஷயத்தில் கொஞ்சம் ஊக்கமும் ஆசையும் பொறுமையுமிருக்கவேண்டும். புதிதுபுதிதான பதங்கள் உபயோகிக்கப்படும். தமிழில்சரியானபதங்களில்லை யானால், இங்கிலீஷ் பதங்களையே உபயோகிக்க வேண்டி வரும். அப்பொழுது கொஞ்சம் கஷ்டமாயும் கர்ணகடூரமாயு மிருக்கும். ஆனால் பழக பழகச் சரியாய் விடும்; அநேகமாய் ஆங்கில நூல்களிற் கண்ட மாதிரி தமிழிலும் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் நண்பர்கள், பொறுமையுடன், நம் வருத்தத்தை மறவாமல், நமக்கு ஒத்தாசை செய்வாராயின், நாம் அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டவராவோம்.

மற்றப் படிப்பிற்கும் சாஸ்திரப் படிப்பிற்கும் உள்ளவித்தியாசம்:- மற்றொரு விஷயம்: சரித்திரம், கதைப் புஸ்தகங்கள், காவியங்கள் முதலியவைகளைக் கட்டிலில் படுத்துக்கொண்டு எளிதில் தெரிந்துகொள்வது போல, இச்சாஸ்திரத்தையும் இதுபோன்ற பௌதிக சாஸ்திரம் அல்லது சக்தி நூல், தாவர சாஸ்திரம், உயிர் நூல் முதலியவைகளையும் தெரிந்து கொள்ளல் முடியாது. கொல்லன், கன்னான் முதலியவர்களுக்கு உலை, துருத்தி, சம்மட்டி, போலவும்; தட்டாருக்கு, உமியோடு, குறடு, சுத்தி முதலியன போலவும்; படம் வரைவோர்களுக்குத் துணி கடிதம், எழுதுகோல், வர்ணம்முதலியன போலவும்; இரசாயனிகளுக்குத் தங்கள் ஆராய்ச்சியில் உபயோகிக்கக்கூடிய பல உபகரணங்கள் உண்டு. அவைகளின்றி இரசாயனத்தைப் படிக்க முயல்வது,பேய்த் தேரின் (கானல் நீரின்) தண்ணீரைப் பருகித் தாகவிடாய் தணிக்க முயல்வது போலாகும். அவ் வுபகரணங்களிற் பல, மேல் எழுதுந்தோறும் அவசியமான இடங்களில் குறித்துக் காட்டப்படும். இவைகளெல்லாவற்றையு முடைய சாலை தான் இரசாயனிகளின் சோதனைச் சாலை (Laboratory) எனப் படும். இவ்விடத்தில் தான் பதார்த்தங்களைப் பாகுபாடுகள் செய்வதும், சேர்க்கை செய்வதும், இன்னும் அவைகளின் குணாகுணங்களையும் உபயோகங்களையும் கண்டறிவதுமாகிய வேலைகளை நடத்துவது. இச் சோதனைச் சாலைகளும் அவைகளின் முக்கிய அம்சமாகிய துணைக் கருவிகளு மிருந்தாலன்றி, ரசாயன சாஸ்திரத்தை நன்கு யறிதல் முடியாது. ஆகையினாலே தான், தற்காலத்தில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இது விஷயமான சில சாமான்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு, அவைகளின் மூலமாய்ச் சாஸ்திர பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. பதார்த்தங்களைக் கண்கூடாகப் பார்ப்பதினாலேயும், அவைகளைத் தங்கள் கையால் எடுத்தாண்டு வேண்டிய சோதனைகளைச் செய்வதினாலேயும், மனிதர் மனத்தில் அவை சம்பந்தமான விஷயங்கள், பசுமரத்தாணி அறைந்தாற்போலப் பதியு மென்று கருதப்படுகின்றது. இந்த உத்தேசங் கொண்டே, தற்காலச் சிறுவர்கள், சிறுவயதிலேயே அவைகளைப்பற

றித் தங்கள் பள்ளிக்கூடச் சோதனைச் சாலைகளில் நேர்முக மாகப் பார்த்து அறிவை மிகுதிப்படுத்திக் கொள்கிறார்கள். இப்படி யிருக்க, வருஷத்தில் ஐந்தாறு முறை வெளிவரும் பத்திரிகைகளிற் பிரசுரமாகும் வியாசங்கள் மூலமாய் இரசாயனத்தைப்பற்றி ஜாஸ்தியாய்க் கற்றுவிடலா மென்று நினைப்பது வீண் எண்ணம். ஆயினும், அவைகளைப் படிப்பதனால் யாரேனும் சிலர் அப்படிப்பில் ஊக்கமடைந்து, அது விஷயத்தில் மேற் செல்லவேண்டியதினிமித்தம் அறிவோரை யடைந்து, தங்களைப் பக்குவப் படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையைக்கொண்டே இவ்வியாசங்கள் எழுதப்படுகின்றன.

வியாசங்களை வாசிப்பவர்க்கு விண்ணப்பம்:—கடைசியாக ஒரு விண்ணப்பம்: தற்காலமாணவர்கள், இரசாயன வித்தையை நன்றாய்த் தெரியும் பொருட்டு ஆறு ஏழு வருஷம் படித்து முயலுகிறார்கள். அப்பொழுதும் அவர்கள் முழுப் பாண்டித்திய மடைந்தவர்களாகிறதில்லை. உண்மையில், அவர்கள் இத்தனை வருஷங்களில் வேறு பல பாடங்களையும் படிக்கின்றனர். இருந்தாலும், இது விஷயத்திற்கு ஐந்திலொரு பங்காவது நேரத்தையும் சக்தியையும் செலவிடுவார்களென்பதிற் சந்தேகமில்லை. ஆகையினாலே, இவ் வியாசங்களை வாசிப்பவர்கள், ஏதாவது இடுக்கண் வரும்போது அதனை விட்டு ஓடாது, அதனை விடா முயற்சியினால் மேற்கொண்டு, செல்வத்துட் செல்வமாகிய கேள்விச் செல்வத்தைப் பெருக்கி, கசடறக் கற்று, 'தொட்டனைத் தூறு மணற் கேணி' போல அறிவிற் பெருகி, பிறமனிதர்களுக்கும் அறிவைப்புகட்ட வேண்டுமென்று விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேல்வருவன:—இவ்வதிகாரத்தில் ரசாயன சாஸ்திரத்தைக் கற்பதில் ஏற்படும் நிர்ப்பந்தங்களையும், அதற்கு வேண்டிய சாதனங்களையும், அதைக் கற்போருக்கு இருக்க வேண்டிய மனத்திடத்தையும் பற்றிச் சொல்லுவது அவசிய மாயிற்று. இனி, அடுத்த அதிகாரத்தில், இரசாயனிகளின் பரிபாஷையையும், அவர்கள் உபயோகிக்கும் சில முக்கிய கருவிகளையும், அவைகளின் மூலமாய்ச் செய்யும் கிரியைகளையும் சிறிது ஆராய்வோம்.

(இன்னும் வரும்.)

பின்வருவது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்திய ரசாயனசாஸ்திரியாகிய நாகார்ஜுனனது பிரார்த்தனை:—"அம்பிகே! பன்னிரண்டு வருஷங்களாக உன் ஆலயத்தில் நான் உன்னை ஆராதனை செய்கிறேன்:—இசனால் உன் மனம் மகிழ்ந்து, உனக்கு என் மீது கருணையுண்டானால், அபூர்வமான ரசாயன வித்தையை உன் பக்தனுக்கு அருள் செய்வாயாக" [From Dr. P. C. Ray's Lecture on *Chemistry in Ancient India.*]

பதார்த்த குணாதிசயக் குறிப்புகள்.

[சைதாப்பேட்டை ஆசிரியர் கலாசாலைப் போதகர் ம-ா-ா-ஸ்ரீ M. C. S. அனந்தபத்மநாபராவ் அவர்கள் M.A., L.T., எழுதியது.]

(114-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

3. ஒளி ஊடுருவுதல்.

விளக்கு முதலான சுய ஒளியை யுடையவைகளிலிருந்து வெளி வரும் கிரணங்கள் நாலா பக்கமும் நேர் நேராகச் சென்று பார்ப்பவர் கண்களில் பட்டு அவைகளைத் தெரியும்படிச் செய்கின்றன. தம்மி டத்தில் சுயமாய் வெளிச்சம் இல்லாதவைகளோ, சூரியன் தீபம் முதலான சுய ஒளிகளினின்று வெளிவரும் கிரணங்கள் தங்கள்மேல் பட்டுச் சிதறி கண்ணில் பட்டால்தான் நமக்குத் தோன்றுகின்றன. நமது கண்ணுக்கும் ஒரு வஸ்துவுக்கும் இடையில் ஒளி ஊடுருவிச் செல்லாத சுவர் முதலான தடைகள், இருந்தால் அவ்வழிச் செல் லும் கிரணங்கள் தடைப்பட்டு கண்ணில் படாததால் வஸ்து தென் படுவதில்லை. ஒளியை ஊடுருவவிடாத வஸ்துக்களுக்கு ஒளித் தடை களென்று பெயர். பலகை, கல், உலோகத் தகடுகள் முதலானவை கள் ஒளித் தடைகள். பார்ப்பவர்க்கும் வஸ்துவுக்கும் இடையே ஒரு கண்ணாடித் தகடாவது, ஜலம் நிரம்பிய ஒரு கிளாஸ் டம்ளராவது இருந்தால், அவ்வஸ்து மறைக்கப்படுவதில்லை. தெளிவானகண்ணாடித் தகட்டின் வழியாகச் சற்றேறக் குறைய எல்லாக்கிரணங்களும், மங்க லாகும்படி தேய்த்த அல்லது வர்ணம் பூசிய கண்ணாடிகளின் வழியே வெளிச்சத்தின் கொஞ்சப் பாகமும் செல்லும். பின்கூறிய வற்றில் ஒளிமழுங்குகிறவஸ்து தெளிவாய்த் தெரியாது. மங்கலான வெளிச்சம் மாத்திரம் தெரியும். இப்படி கிரணங்களை யெல்லாம் நேரேவிடாமல், ஒளியைக் கொஞ்சம் மங்கலாக வெளிவிடும் வஸ் துக்களுக்கு ஒளிமழுக்கிகள் என்று பெயர். கிரணங்களைத் தடை செய்யாமல் நேரேவிடும் ஆகாயம் கண்ணாடிபோன்ற வஸ்துக்களை ஒளி ஊடுருவிகள் என்னலாம். பாத்திரத்தில் ஜலம் நிறைந்திருக்கவும், அதன் அடிப்பாகம் கண்ணுக்குத் தெரிவதால், ஜலம் ஒளி ஊடுரு விப் பொருளாகும். மின்காற்றில் செய்து,பிரகாசமான விளக்குக்களில்



படம் 1.

ஜலம் நிறைந்த பாத்திரம்

பி அடித்தட்டின் பிம்பம் உயர்ந்து காணுதல்.

சிம்னியைச் சுற்றி மூடியிருக்கும் அரைக்கோள வடிவமுள்ள டோம் என்று சொல்லப்படும் மூடிகள், கிரணங்களை வாசிப்பவர் கண்ணில்பட்டு கூசச் செய்யாதபடி தடுத்து, வெளிச்சத்தை மங்கலாக வெளி விடுவதால், ஒளி மழுக்கி வகையைச் சேர்ந்தன.

கிரணங்கள் நேராகக்கண்ணுக்கு வராமல், முகம்பார்க்கும் கண்ணாடிகளில் பட்டாவது, மூக்குக்கண்ணாடிகளின் வழிச்சென்றாவது, ஜலத்திலிருந்து வெளி வந்தாவது நமது கண்ணில் பட்டால், நாம் வஸ்துவையே நேராகக்காணமல், அதன் பிம்பத்தைப் பார்க்கிறோம். கண்ணாடிகளின் வடிவம், இடம் இவற்றின் அமைப்பால் நேத்திரானந்தமாயுள்ள அனேக மாய உருவங்களையும் செய்கைகளையும் நாடகத்தில் காட்டுவதைப்பற்றி முன் வியாசத்தில் விவரித்தோம். வேறுசில மாய உருவங்களைப்பற்றி இப்போது கவனிப்போம்.

பிம்பங்களின் இட வித்தியாசம்.

ஆழமான ட்ரம் என்னும் ஒரு இரும்புத்தொட்டியில் தண்ணீர் நிரப்பி (படம்-1 வதைப்பார்க்க) அதன் மேற்புறம் இருந்து கீழே நோக்கிப்பார்த்தால், அதன் அடித்தட்டு, பாத்திரம் வைத்த தரை மட்டத்துக்கு மேல் உயர்ந்து இருப்பதாகத்தோன்றும். ஜலம் அதிக ஆழமாகும்படி ஊற்ற ஊற்ற, பாத்திரத்தின் அடித்தட்டு மேன்மேல் உயர்ந்து கொண்டே வருவதாகக் காணப்படும். நாம் பார்ப்பது அடித்தட்டேயல்ல. வெளிப்புறம் தொட்டுப்பார்க்க, நிஜ அடித்தகடு ஜலத்தை ஊற்றுவதற்கு முன் இருந்த இடத்திலேயே இருக்கக்காணலாம். நாம் பார்ப்பது அதன் பிம்பமே. இலேசானவைகள் காற்றால் அடிபட்டுப் பறக்காமல் இருப்பதற்காகச் சாதாரணமாய் நாம் உபயோகிக்கும் காகிதப்பளு என்னும் மொத்தமான கண்ணாடிப்பளுவை, அச்சிட்ட அல்லது எழுதிய காகிதத்தின் மேல் வைத்துப்பார்த்தால், எழுத்துக்கள் முன்னிலும் உயர்ந்திருப்பதாகத்தோன்றும். தோன்றுவது எழுத்துகளின் பிம்பமே. கனம்வித்தியாசமுள்ள கண்ணாடித்தகடுகளை உபயோகித்தால் கனத்திற்குத்தக்கபடி பிம்பம் உயர்ந்து தோன்றுவது தெளிவாகும். இவ் இடவித்தியாசங்களைப் பரீக்ஷித்துக் கணக்கிட்டுச் சில பொதுவிதிகளைப் பூதத்துவ ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவற்றில் முக்கியமானவை இரண்டு பின்வருவன (1) ஜல மட்டத்திலிருந்து, அதில் இருக்கும் ஒரு வஸ்துவின் தூரத்தையும் அதன் பிம்பத்தின் தூரத்தையும் அளந்து, அவற்றின் தராதரம்

கண்டால், ஜலத்தின் பள்ளம் எவ்வளவாக இருந்தாலும், அத்தரம் ஜலத்திற்கு எப்போதும் ஒன்றே தான். அளந்துபார்க்கும் விதத்தை, படம் 1-வதில் காண்க. ஜலத்திற்கு ரேட் $\frac{3}{4}$-அதாவது 4-அடி ஆழத்தில் ஒரு வஸ்து இருந்தால் அதன் பிம்பம் 3 அடிப் பள்ளத்தில் தோன்றும். தெளிவான தண்ணீர் நிறைந்த ஒரு நீர் மடு என்னும் ஆற்றின் உட்பள்ளம் 4-அடி யுள்ளதானால் அது 3-அடிப் பள்ள முள்ளதாகத் தோன்றும். தெளிவான ஜலம் உள்ள சுனைகளிலும், மலையடிவாரங்களிலுள்ள ஊற்று நீர் ஓடும் மலையருவிகளிலும் இம்மாதிரியான மாயப் பள்ளத்தால் சிலர் ஏமாறி இறங்கியதை நாம் கண்டிருக்கிறோம். ஒரு கழியை முன்னதாக ஊன்றிப் பள்ளத்தை தெரிந்துகொண்டு, பின் இறங்கவேண்டுமே யொழிய, கண்ணால் பார்த்ததை நம்பியே ஜலத்தில் இறங்கினால் சில சமயங்களில் பிராணாபாயமும் நேரிடலாம். (2). முதல் விதியில் கண்ட தரம் வெவ்வேறு வஸ்துக்களுக்கு வித்தியாசப்படும். ஜலத்திற்குத் தரம் $\frac{3}{4}$. கண்ணாடிக்குத் தரம் $\frac{4}{3}$. ஒவ்வொரு ஒளி ஊடுருவிக்கும் ரேட் இன்னதென்று விஷய விசாரணை சாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். முற்கூறிய ரேட்டுக்களைக் கணக்கிட வஸ்துவிற்கு நேர் மேல் நின்று பார்க்கவேண்டும். தூரச் சென்று பார்க்க, பிம்பம் முன்னிலும் உயரமாகத் தோன்றும். ஆதலால், குளக்கரையிலிருந்து பார்க்க, பள்ளம் $\frac{3}{4}$ பங்கைவிட அதிகக் குறைவாகத் தோன்றும்.



படம் 2.

குச்சி ஜலத்தில் ஒடிந்ததுபோல் காணுதல்.

ம-ம—ஜலமட்டம்

இ—குச்சி ஒடிந்ததாகக் காணும் இடம்

அ'-இ—ஜலத்தில் தோன்றும் பிம்பம்

அ-இ—ஜலத்தில் இருக்கும் குச்சியின் பாகம்.

இத்தூர வித்தியாசத்தால், தொட்டியில் வைத் ததோண்டி கழுத்து நசுங்கித் தட்டையாய் போனதாகக் காணப்படுவதும்; நீந்து கிறவன், ஜலத்தில் இருக்கும் போது, அதிகக்குட்டையாகத்தோன்று வதும் உண்டு. உயரம் குறைவாகத் தோன்றுவதே தவிர அகலத்தின் அளவு வித்தியாசப்படுவதில்லை,

ஜலத்தில் சாய்வாக வைத்த ஒரு குச்சி, வாஸ்தவமாக நேராக இருக்க, ஜல மட்டத்தில் ஒடிந்து போனதாகத் தோன்றுவதும் இம் மாதிரி மாயமே (படம்-2வதை பார்க்க)

தண்ணீர்த் துறைகளிலுள்ள மீன்களைப் பிடிக்க, சிலர் அம்பினுல் எய்வது உண்டு; இச்செம்படவர்கள், வழக்கத்தினுலே, மீன் காணும் இடத்தைவிட எவ்வளவு கீழாக அம்பை எய்ய வேண்டுமென்பதைத் தெரிந்து கொண்டிருந்தால், மீன் உள்ளபடி இருக்குமிடத்திற்கு மேலேயே இருப்பதாகத் தோன்றினுலும், அதைச் சரியாக இலக்கு வைத்து எய்வார்கள். குருவி சுடுகிற வேடன், பறந்து கொண்டிருக்கும் குருவியை, அது காணும் இடத்திற்கு முன் னமே எய்து அதை வீழ்த்துவதும், இம்மாதிரியான பழக்கத் தால் தான். மீன் பாய்ந்து கொண்டிருந்தால், மேற் கூறிய இரண்டு வித அநுபவ ஞானம் உடையவன் தான், குறிதவருமல் அம்பின் பிரயோகத்தால் தன் இலக்கை அடையலாம்.

இதேமாதிரி ஜலத்தில் இருந்து வெளியே பார்த்தால் பக்ஷிகள் உள்ளதைவிட அதிக உயரத்தில் பறப்பதாகத் தோன்றும். மீன் கொத்திக் குருவி, ஜலத்திலுள்ள மீனின் நிஜ இடத்தை அறிந்து, அதற்குத் தக்கபடி யத்தனித்து, கீழே பாய்ந்து, அம்மீனைத் தவரு மல் பிடிப்பதற்கும்; சில மீன்கள் தமக்கு மேலே பாயும் குருவியின் கதியைத் தெரிந்துகொண்டு கீழே அமிழ்ந்து தப்பிப் போவதற்கும், ஸர்வேஸ்வரன் சுவபாவ ஞானம் அளித்திருக்கிருர்.

கிரணம்திசை மாறுதல். (Refraction)

இவ்வாறு பிம்பங்கள் இடம் வித்தியாசப்படுவதின் காரணத்தை லக்ஷித்துப் பார்க்கையில், ஜலத்திலிருந்து வாயுமண்டலத்துக்கும், கண் ணுடியிலிருந்து வாயுமண்டலத்துக்கும், இவற்றிற்கு எதிர்ப்புறமா யும் கிரணங்கள் செல்லுகையில், ஒன்றைவிட்டு மற்றென்றுக்குத் தாண்டும் சமயத்தில், தங்களுடைய நேரான திசைமாறி, ஒடிந்தன

போலச் செல்லுகின்றன என்றும், கண்ணாடிக்குள் செல்லுகையில், பொதுப் பரப்பைவிட்டு தள்ளியும், வாயுமண்டலத்துக்குள் வருகையில் பரப்பை நெருங்கியும் திசை மாறுகின்றனவென்றும் தெரியவருகின்றன. (படம் 3-வதில் இத்திசை மாறுதல்கள் தெளிவாய்த்



படம் 3.

ஜலத்தைவிட்டு வாயுமண்டலத்தில் செல்லும் ஒளிக்கிரணங்கள் திசை மாறுதல்.



படம் 4.

ஜலத்தில் தோன்றும் நாணயத்தின் பிம்பம்.

க—கண்
1—தடைபட்ட ரேகை (ஜலம் ஊற்றுவதற்குமுன்)
2—ஜலம் ஊற்றிய பிறகு கண்ணில் படும் ரேகை
வ—நாணயம். வ'-அதன் பிம்பம்.

தோன்றும்.) இந்த நிரூபிப்பதற்காக, பின்வரும் பரீக்ஷையைச் செய்துபார்க்கலாம். படம் 4-வதில் காட்டியபடி ஒரு பாத்திரத்தில் ஒரு நாணயத்தை வைத்து, அது கண்ணில் படாதவாறு பக்கங்களால் மறைந்து போகும்படி கொஞ்சதூரம் சென்றபிறகு, அப்பாத்திரத்தில் தண்ணீரை ஊற்ற, அந்நாணயம் தென்படும். தண்ணீர் ஊற்றும்போது நாணயம் இடம் பேராதபடி மெதுவாய் ஊற்றவேண்டும். 2-வது ரேகை ஜல மட்டத்தில் வந்து ஒடிந்து கண்ணில் வந்து விழுவதைப் படத்தில் காண்க

கனவித்தியாசமுள்ள வாயு, கண்ணாடி, ஜலம் முதலான ஒளி ஊடுருவிகளின் வழிச்சென்று ஒன்றைவிட்டு ஒன்றுக்குள் செல்லுகையில் கிரணங்கள் திசை மாறுவது போலவே, உஷ்ண தீக்ஷணிய (டெம்பரேச்சர்) வித்தியாசத்தால் வாயுவின் அடுக்குகள் திடவித்தியாசப்படும்போதும் உஷ்ணமான வாயுவிலிருந்து குளிர்ந்த வாயுவுக்குச் செல்லும்போதும் கிரணங்கள் திசைமாறுகின்றனவென்றும், அதனால் சில மாய உருவங்கள் காண்போர் திகைக்கும்படியாகத் தோன்றுகின்றனவென்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஜலம் இல்லாமல் வறண்ட சில இடங்களில், நடு மத்தியானத்தில், தரையில்பட்ட காற்றின் அடுக்குக்கள் சூடாவும், அதன் மேல் ஜலத்தின்மேல் பட்டு அடித்து வரும் காற்று அடுக்குக்கள் குளிர்ச்சியாயும் இருந்து திடவித்தியாசப்படுவதால், அந்த இடங்களிலுள்ள மரம் செடிகளின் உருவம், ஜலத்தில் தோன்றுவதுபோல் தலைகீழாகத் தோன்ற, பார்ப்பவர்களுக்கு அவ்விடத்தில் ஜலம் நிறைந்து இருப்பது போலவும், பக்கத்தில் சென்று பார்க்கையில் ஜலம் இல்லாமல் பூமி வறண்டிருப்பதாகவும் மனம் தடுமாறத் தோன்றுவதுண்டென்பது, சமுத்திரக் கரையோரங்களில் மத்தியான வேளையில் ரஸ்தா வழியே செல்பவர்களுக்குத் தெரியும். இம்மாதிரித் தோற்றம் படம் 5 வதில் காண்க. மணல் காடுகளில் பிரயாணம் செய்யும் ஒட்டகக்கூட்ட வர்த்தகர்களும், ஜலம் இருக்கும் என்று எண்ணும்படி இம்மாதிரி நேரும் போலித் தோற்றங்களால் மயங்கி அலைவார்



படம் 5.

1-1. ரஸ்தா ஜலத்தில் நிறைந்ததாகத் தோன்றும் மாயை.

2. தென்னைமரம்.

3 2-வதன் மாயநிழல்.

4. பார்ப்பவர் கண்.

5-9. ரஸ்தாவின் மேல்பட்டு சூடுண்டவும் மேல் செல்லச்செல்ல குளிர்ந்தவுமான வாயுவின் அடுக்குகள்.

அ-அ அடுச்குக்களின் கன வித்தியாசத்தால் மடிந்துச்செல்லும் ஒரு கிரணத்தின் வழி.

ஆ!-ஆ! பிம்பம் தோன்றும் திசை.

கள் என்று வாசித்திருக்கிறோம். நடுக்கடலிலும்இக்காரணத்தாலேயே தூரத்திலுள்ள கப்பல்களின் மேல், தலைகீழாக அவற்றின் பிம்பங்கள் தோன்றுகின்றன வென்று மாலுமிகள் சொல்லுகிறார்கள்.



படம் 6.

1. பார்ப்பவர்க்கு அடிவானத்திசை.
2,4. நட்சத்திரங்கள்.
2,4. அவை தோன்று மிடம்.
வா-வா வாயுமண்டலம்.
3. பார்ப்பவருக்கு உச்சம்.

சூரிய கிரணங்கள், பூமியைச்சுற்றியுள்ளவாயுமண்டலம் என்னும் ஆகாய அடுக்குக்களில் புகுந்து, உஷ்ணமும் திடமும் வித்தியாசப் படும் அடுக்குகளின் வழிச்சென்று, அங்கங்கே கொஞ்சம் கொஞ்ச மாகத்திசை மாறுவதால், சூரியன் உதயமாகையில், இரண்டு நிமிஷம் முன்னதாகவும் அஸ்தமன காலத்தில் இரண்டு நிமிஷம் பின்னிட்டும், கண்ணுக்கு நேரே இருப்பது போல் தோன்றுகிறதென்றும், வான சாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். இத்திசை வேற்றுமையை 6-வது படத்தில் காண்க. இக்காரணத்தால் நமக்கு அகஸ் என்னும் பகற்காலம் 4 நிமிஷம் அதிகமாய்த் தோன்றுகிறதாம். (இன்னும் வரும்)

ஆன்றோர் ஆற்றுப்படை.

"நமது வாழ்நாளில் அரிய செய்கைகளைச் செய்து நாமும் மேன்மையாக வாழலாம்; அவ்வாறு ஒழுகும் நமது அடிச்சுவடுகள் காலம் என்னும் பாதையில் பதிய, நமக்குப் பின்னால் வருபவர் எவரேனும், உலக வாழ்க்கையில் நெறி தவறித் தத்தளிக்கும்பொழுது, நாம் முன் சென்ற அந்தச்சுவடுகளைக் கண்டு, மனம் தைரியங்கொண்டு, அவ்வழியில் நடந்து, நன்மை பெறலாகும் என்னும் உண்மையை, பெரியோரது சிலிய சரித்திரங்கள் நமக்கு நினைப்பூட்டுகின்றன."

3. ஜி. சுப்பிரமணிய ஐயர்.*

"இராஜ்ய பரிபாலனம் என்னும் நாற்கால் மண்டபத்துக்கு, அரசன், இராஜ்ய மதத்திருச்சபை, பார்லிமெண்டு சபை என்னும் மூன்றோடு, பத்திரிகைகளே நான்காவது காலாகும்" என்பது ஆங்கில வசனம். சுய ஆட்சி நடைபெறும் இங்கிலாந்திலேயே அவ்வாறாயின், சாதி மதம் பாஷை தேசம் ஆசார அநுஷ்டானங்கள் முதலிய பலவாற்றானும் நமக்கு அந்நியரும், நமது நடையுடை பாவனைகளையும் உள்ளப் போக்குக்களையும் கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நன்மை தீமைகளையும் ஒரு சிறிதும் அறிய வல்லாதாருமான பிறருடைய நாயகத்துக் குட்பட்ட இந்நாட்டிலே, குடிகளது குறைகளையும் மனோபீஷ்டங்களையும் இராசாங்கத்தாருக்கு அறிவிக்கும் ஒரே வாயிலாகும் பத்திரிகைகளின் முக்கியத்தை எடுத்துரைக்க வேண்டுவதில்லை. ஆங்கிலேயர் இந்நாட்டினை ஆளுவதில், எத்தனை மேலான கொள்கைகளைக் கைப்பற்றி ஒழுகினும், மனித சுவபாவத்தாலும் அறியாமையாலும், நமது நன்மையைவிடத் தமது நன்மையையே பெரிது மதித்து அடிக்கடி வினை சூழ்ந்து முடித்தல் இன்றியமையாததாகும். ஆகவே, ஆளும் ஆங்கிலேயரது சுய நலத்தை மட்டும் எடுத்துக் கூறும் அவரது பத்திரிகைகள் சில நடைபெற்று, ஆளப்படும்

---

* ஸ்ரீமான் குருமலை சுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியுள்ள "ஸ்ரீ ஜி. ப்பிரமணிய ஐயர் சரித்திரம்" என்பதையே பெரும்பான்மையும் தழுவி ழுதப்பட்டது இது. சிறந்த கருத்துகளை நல்ல தமிழ் நடையில் மிக்க திறமைடன் எடுத்தோதும் அந்நூல், தமிழர் அனைவராலும் பாராட்டிப் படிக்கத் க்கது.



ஜி. சுப்பிரமணிய ஐயர்.

1855-1916.

“எகிப்து பாபிலோனியா, அதிகார மாட்சிமையையும்; ஜபான், ஜூடியா, ஆசார சீலத்தையும்; கிரீஸ், நாகரிகத்துவத்தையும்; ரோம், நியாயத்தின் மேன்மையையும்; இங்கிலாந்து, மனிதர் ஸ்வாதீனத்தையும், பிரான்ஸ், ஜனஸமூகத்திற்குள் ஸமத்துவத்தையும்; அமெரிக்கா, ஸ்வாதீன ஸமத்துவ ஸ்வதந்தரங்கள் பூரணமுற்ற நாகரிகவாழ்க்கையையுமே, இவ்வுலகத்தில் நாம் அடைதற்குரிய பெரும்பேறாக நிலைநாட்டுவ. ஆனால், இந்தியாவோ, இவற்றையெல்லாம் உள்ளடக்கி, . இவற்றுக்கெல்லாம் மேலாக, அனைவரும் ஒரேகடவுளின் மக்களாதலின், மனிதர், பரஸ்பர சகோதர வாஞ்சையோடும் மனநிறைவோடும், அழியாத ஆத்மலாபத்தையே லௌகீக சுகங்களினும் பெரிதுமதித்து, உலகமெங்கும் ஒத்து வாழும் ஸமாதான வாழ்க்கையையே ஜன்ம ஸாபல்யமாக நிலை நிறுத்தும்.”

இந்தியரது க்ஷேமலாபங்களை அறியாமை மிக்க குடிகளுக்கும் இராசாங்கத்தாருக்கும் எடுத்தோதி, அவருக்காகப் பரிந்து பேசி வாதாடும் பத்திரிகைகள் ஒன்றுமே இல்லாத காலத்திலே, நம்மவர்கள், கண்ணிலாக் குருடர் போலும் வாயில்லா ஊமைகள் போலும் எவ்வளவு பரிதபித்து வருந்தியிருப்பர் என்பது எளிதில் ஊகிக்கத் தக்கது. நமது சென்னை மாகாணம் அவ்வண்ணம் துன்புற்றுழலுங் காலத்தில் தோன்றி, நமது கலியைத் தீர்த்தருளிய தேசபக்தராவர் ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய ஐயர்.

"புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி, அறிவு
அழிந்திட்டு, ஐ மேல் உந்தி,
அலமந்தபோது ஆக, "அஞ்சேல்!" என்று அருள்
செய்வான் அமரும் கோயில்,
வலம்வந்த மடவார்கள் நடம் ஆட, முழவு அதிர,
மழை என்று அஞ்சி,
சிலமந்தி, அலமந்து, மரம் ஏறி, முகில் பார்க்கும்
திருவையாறே."

என்று புகழ்ப் பெற்ற பஞ்சநத க்ஷேத்திரத்தில், கணபதி ஐயர் என்ற வக்கீல் ஒருவரிருந்தார். அவருக்கு இங்கிலீஷ் தெரியாது; அவர் வைதீகப்பற்றும் நல்லொழுக்கமும் கூடியவர்; ஜீவனோபாயமாக வக்கீல் தொழிலைக் கைப்பற்றி வாழினும், ஆத்மார்த்தமாக யாகங்கள் இயற்றி, கணபதி தீக்ஷிதர் என்னும் பட்டமும் பெற்றிருந்தார். அவர் வைகறையில் நாலு மணிக்கே எழுந்து தமது பிராமண கர்மாநுஷ்டானங்களைத் தொடங்கியும், சில விசேஷ தினங்களில், அவை, கோர்ட்டுக்குச் செல்லும் நேரமான 11 மணிக்குள் முடிவு பெறுமல் போகுமாம்; அந்த நாள்களில், நியாயாதிபதி, கணபதி தீக்ஷிதர் மீதுள்ள நன்மதிப்பினால், அவருடைய விவாதங்களை ஒத்திவைத்துக் கொள்வாராம். அவருக்கும், அவர் பத்தினியார் தருமாம்பாள் அம்மாளுக்கும், ஏழு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனர்; அவர்களுள், கி. பி. 1855-ம் ஆடு ஜனவரி மீ' த்தில் நான்காவது குமாரராகப் பிறந்தவரே நமது ஜி. சுப்பிரமணிய ஐயர். இவர், முதலில் திருவையாற்றிலுள்ள தாலூகாப் பாடசாலையில் கல்வி கற்று, பிறகு தஞ்சாவூர் சென்று கிறிஸ்துவ மிஷன் கலாசாலையைச்சேர்ந்து, 1871-ல் பிரவேசப் பரீக்ஷையும், 1873-ல் எப். ஏ. பரீக்ஷையும் தேறினர். இதனிடையில் 1869ம் வருஷத்தில், இவ

ரது. பதினான்காவது பிராயத்தில் இவருடைய தந்தையார் உலகவாழ்வை நீத்தார். அப்பொழுது இவரது மூத்த தமையனாரான வேங்கடராமையர் குடும்ப நிர்வாகத்தை மேற்கொண்டு வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்து, சிறிது காலத்தில் குடும்பத்துக்குரிய தாயச் சொத்தையும் கணபதி தீக்ஷிதர்தேடிய நிதியையும் அழித்து விட்டனராக, பெரிதான ஏழைக்குடும்பத்தை எவ்வாறோ பரிபாலிப்பது இவரது அன்னையார் தருமாம்பாள் அம்மாள் பொறுப்பாயிற்று. அந்த அம்மாள் தம் சாமர்த்தியத்தினாலும் செட்டினாலும் தம்மக்களை பேணிப் பாதுகாத்து வந்தாரெனினும், பி. ஏ. பரீக்ஷைக்குத் தொடர்ந்து வாசிக்கவேண்டுமென்று சுப்பிரமணிய ஐயர் விரும்பியதை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. கூடிய சீக்கிரத்தில் இவர் ஒரு தொழிலிற் புகுந்து பணம்சம்பாதிப்பது அவசியமாயிற்று. அக்காலத்திலே எப். ஏ. பரீக்ஷைதேறினவர்தாமும் ஸர்க்கார் சேவகத்தில் உயர்ந்த பதவியை அடையக்கூடும். அங்ஙன மிருந்தும் நமது ஐயர் ஸ்வாதீனத்தையே நன்கு மதித்து, பிறர் ஊழியத்தை வெறுத்து, கல்விபுகட்டும் உபாத்தியாயராக விரும்பி, அதன்பொருட்டு 1874ல் சென்னை சென்று உபகாரச்சம்பளத்துடன் போதனா முறைப்பாடசாலையைச் சேர்ந்து படிக்கலானார். அப்பாடசாலையின் தலைவரான பிக்கிள் என்னும் துரை, இவரது மதிவலியையும் சிறந்த குணங்களையும் கண்டு மகிழ்ந்து, இவருக்குக் கூட ஓராண்டு உபகாரச் சம்பளம் உதவும்படி செய்தார். இவ்வாறு உபாத்திமை முறைகளை உணர்ந்து தேறிய பின் சுப்பிரமணிய ஐயர் 1875ல் ஒரு கிறிஸ்தவ மிஷன் பள்ளிக்கூடத்தில் மாதம் 40 ரூபா நிவேதனத்துடன் உபாத்தியாயராக முதலில் அமர்ந்து பிறகு 1877ல் பச்சையப்பமுதலியார் கலாசாலையில் உபாத்தியாயரானார். அப்பொழுது அதேகலாசாலையில் பி. ஏ. பரீக்ஷைக்கு வாசித்துக் கொண்டிருந்த எம். வீரராகவாசாரியாருக்கும் இவருக்கும் மிக்க நட்பு உண்டாயிற்று. இவரும் பி. ஏ. பரீக்ஷைக்கு ஒழிவு நேரங்களில் படித்து, 1877-78ல் பி. ஏ. பரீக்ஷையில் தேறி பட்டமும் பெற்றார். அடுத்தவருஷத்தில், (1879) இவர், இப்பொழுது திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் என்று வழங்கும் பள்ளிக்கூடத்துக்குத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

அதற்குமுன் இரண்டொரு இந்தியப் பத்திரிகைகள் வால் வெள்ளி போல் சிறிது காலம் தோன்றி மறைந்தன வெனினும், அப்

பொழுது நம்மவருக்கு அறிவூட்டவும் நம்மவருடைய நன்மை தீமைகளை நாடாளும் நாயகருக்கு எடுத்தோதவும் யாதொரு பத்திரிகையுமே இல்லை. வாலிபருக்குப் பள்ளிக்கூடத்தில் கல்வி போதிப்பதால் மட்டும் மனத்திருப்தியடையாத ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் இக்குறையை நிரப்பும பேரவாவுற்று, முக்கியமாய்த் தமது உரிய நண்பர் வீரராகவாசாரியரின் உதவியையும் வேறு சிலர் உதவியையும் கொண்டு, 20-9-1878 அன்று, இப்பொழுது நம் நாடெங்கும் புகழ் பெற்று விளங்கும் ஹிந்து என்னும் பத்திரிகையை ஒரு வாரப்பத்திரிகையாக முதலில் வெளியிட்டார். முதல் சஞ்சிகையின் பிரதிகளைத் தபாலில் அனுப்பவும் பணமின்றி எவரிடமோ ஒன்றே முக்கால் ரூபா கடன் வாங்கினரென்றால், இவருடைய மனோதிடத்தையும் ஊக்கத்தையும் யாவரே வியவாதார்.

உலக மதிப்பையும் செல்வத்தையும் செல்வாக்கையும் ஒருவனுக்குச் சேர்ந்தளிக்கவல்ல ஸர்க்கார் சேவகத்தைவிட ஸ்வாதீனமே மேலெனக் கருதித் தன்மானத்தினால் உபாத்திமைத் தொழிலைக் கைக்கொண்ட ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், தேசாபிமானத்தினால் தூண்டப்பட்டுப் பொது நலத்தின் பொருட்டுழைக்கும் பத்திரிகையினை ஸ்தாபனஞ் செய்தது முதல், அதனைக் கேவலம் ஒரு ஜீவனோபாயமாக வேனும், செல்வாக்கையும் கௌரவத்தையும் சம்பாதிக்கும் வழியாக வேனும் கருதாமல், உண்மையான தேச பக்தியால் செய்யும் பொது ஜன ஊழியமாகவே மதித்து, தமக்கு அவகாசமான நேரம் அனைத்தையும் எஞ்சிய பொருளையும் அதில் செலவிட்டு வந்தார். இவ்வாறு தொடங்கிய பத்திரிகைக்கு விரைவில் காலானுகூலமும் ஏற்பட்டது:- காலஞ் சென்ற ஸர். டி. முத்துஸாமி ஐயரை அப்பொழுதே ஹைகோர்ட்டு ஜட்ஜாக முதலில் நியமித்ததற்கு விரோதமாக ஆங்கிலப் பத்திரிகைகள் முறையிட்டதைக் கண்டித்து நியாயம் காட்டியதனாலும்; செங்கற்பட்டு ஜில்லாவில் அக்கிரமஸ்தராயிருந்த ஒரு தாசில்தார்மீது சில குடிகள் கொண்டுவந்த பிரியாதுகளை விசாரித்த ஸர்க்கார் அதிகாரி அவற்றைத் தள்ளிவிட்டதுமன்றி, பிள்ளை வரம் வேண்டிச்சென்ற கோயிலில் புருஷனை இழந்த மனையாட்டியின் கதைபோல, பிரியாதுக்காரரையே தண்டித்துவிட்டதைக் கண்டித்தெழுதி, அந்தத் தாசில்தாரின் அநியாயங்களை எடுத்துக் கூறி, அவரைச் சிக்ஷைக்குட்படுத்திக் குடிகளைக் காப்பாற்றியதனாலும்; சேலத்திலே நடந்த

ஹிந்து மகமதியக் கலகத்தைப்பற்றிய விசாரணையில், இப்பொழுது பல்லாண்டுகளாக இராஜப் பிரதிநிதியின் சட்ட சபை அங்கத்தினராக உழைத்து உத்தம தேச பக்தராக விளங்கும் ஸ்ரீ வி. விஜயராகவாசாரியாருக்குப் பத்து வருஷம் கடுஞ் சிறையும், வேறு சில கனவான்களுக்குக் கடுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்ட விஷயமாக நியாயத்தை எடுத்துக் கூறி மன்றாடி, அவர்களை விடுதலை செய்வித்ததனாலும், பிறந்த மூவாண்டுகளுக்குள், 'ஹிந்து' பத்திரிகை, ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரின் தலைமையின் கீழ், அளப்பரிய பொது ஜனப் பெரு மதிப்பையும் புகழையும் சம்பாதித்துக்கொண்டது.

செவ்வனே நடத்தப்படும் பத்திரிகையினால் தேசத்துக்குச் சித்திக்கும் க்ஷேம லாபங்களை இவ்வாறு கண்கூடாகக் கண்டறிந்த ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், ஆங்கிலம் அறிவார் மிகச் சிலரும் அறியார் மிகப்பலருமா யிருத்தலையும், இவருக்கு இராஜரீகக் கல்வி புகட்டவேண்டிய அவசியத்தையும் உட்கொண்டு, 1882-ம் வருஷம் ஏப்பிரல் மாதத்தில், இப்பொழுது தமிழகம் முழுவதும், ரெங்கூன், தென் ஆப்பிரிக்கா, பினாங்கு, மலாக்கா, கொழும்பு முதலிய அயல்நாடுகளிலும் விசேஷ பிரசித்தி பெற்று விளங்காநிற்கும் "சுதேசமித்திரன்" என்னும் தமிழ்ப் பத்திரிகையை ஸ்தாபித்தார். ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரின் சரித்திரத்தை எழுதியுள்ள குருமலை ஸ்ரீ சுதந்தரம்பிள்ளை, 1878-ல் பிரசுரித்த பத்திரிகைக்கு (மதச்சார்பான) 'ஹிந்து' என்னும் பெயரையும், 1882-ல் வெளியிட்ட பத்திரிகைக்கு (தேச பக்தியை விளக்கும்) 'சுதேசமித்திரன்' என்னும் பெயரையும் இவர் இட்டது, இடை நிகழ்ந்த நான்கு வருஷங்களுள் இவர் அடைந்த மனோவிசாலத்தைக் குறிப்பதாகக் கூறி யிருப்பது கவனிக்கத்தக்கது. முதலில் வாரம்ஒரு முறையாக வெளிவந்த "ஹிந்து", 1884 முதல் வாரம் மும்முறை வெளிவரலாகி, பின்பு, 1888-ல் தினசரி வெளிவரத் தொடங்கியது. "சுதேசமித்திர"னும், அவ்வண்ணமே, நாளடைவில், தினப்பதிப்பாகியது. ஆனால், 1898-ம்வருஷம்வரை, இவருடைய பராமரிப்பின் கீழ் பிறரால் நடத்தப்பட்டு வந்ததேயன்றி, இவரே நேரில் இதையும் நடத்தக்கூடவில்லை.

பொது தர்ம விஷயங்களிலும் இராஜரீக விஷயங்களிலும் ஜனங்களுக்கு அறிவு புகட்டவும், ஜனங்களுடைய கஷ்ட நஷ்டங்களை இராஜாங்கத்தாருக்கு எடுத்துரைக்கவும், இராஜாங்கத்தாரது

கருத்துக்களையும் சட்டதிட்டங்களையும் குடிகளுக்குத் தெரியப்படுத்தவும் பத்திரிகைகள் ஒப்புயர்வற்ற கருவிகளே யெனினும், ஒருவன் வயிற்றுப் பசி மற்றொருவன் உண்டதால் தீராததுபோல, ஜனங்கள் தாமாகவே கூடியாலோசித்துத் தீர்மானித்து மேல் நடத்த வேண்டிய விஷயங்கள் பலவுள. இதை நன்கறிந்த ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், சென்னைப் பிரமுகர்கள் வேறு சிலருடன் கூடி "சென்னை மகாஜன சபை"யை ஸ்தாபித்தார். இச்சபையால் விளைந்த பொது நலங்கள் மிகப் பல. இந்தச்சபையின் முக்கியஸ்தருள் ஒருவராக இவர் உழைத்து வருகையில், "உள்ளூர்ச் சுய ஆட்சி (Local Self-Government) என்பதின்ன தென்பதையும், இந்த ஸ்வதந்தரத்தினால் உண்டாகும் நன்மைகளிவை என்பதையும், அதைப் பிரஜைகள் உபயோகிக்க வேண்டிய விதத்தையும் பற்றிப் பொது ஜனங்களுக்கு அறிவிப்பதற்காகச் சென்னை மாகாணம் முழுவதும் ஒரு பிரசங்க யாத்திரை செய்தார். மதாசாரியார்கள் தங்கள் மதம் பரவுவதற்காக மதப் பிரசங்க யாத்திரை செய்வது போல, ஜனத்தலைவர்கள் இராஜரீக சம்பந்தமான விஷயங்களைப் பொது ஜனங்களுக்கு உபதேசிப்பதற்காகப் பிரசங்க யாத்திரை செய்யும் வழக்கத்தை இவரே இச்சென்னை மாகாணத்தில் முதலில் உண்டாக்கியவர்". அக்காலமுதல், அவ்வழக்கத்தை, பல்லாண்டுகளாக, ரோகத்தினால் தம்மால் முடியாது போகும் வரை, இவர் இடைவிடாது அநுசரித்தும் வந்தார்.

இராசப்பிரதிநிதிகள் யாவரிலும் குடிகளின் அன்பையும் பெருமதிப்பையும் அதிகம் கொள்ளை கொண்டு விளங்கினவரான லார்டு ரிப்பன் பிரபு 1884-ம் வருஷத்தில் தமது வேலை நீங்கி இங்கிலாந்து செல்லும்பொழுது, அவரைக் கௌரவஞ் செய்து வழியனுப்பும்படி, இந்தியாவின் பல மாகாணங்களிலுமுள்ள பெரியோர்கள் பம்பாய் நகரத்துக்கு அனுப்பப்பட்டனர். நமது சென்னையிலிருந்து அனுப்பப்பட்டவருள் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் ஒருவர். இவ்வாறு இந்தியாவின் தலைவாயிலான பம்பாய் நகரத்தில் கூடிய இந்திய தேச பக்தர்களும் ஜனத்தலைவரும் சேர்ந்து, மிஸ்டர் ஏ. ஒ. ஹியூம் முதலிய ஐரோப்பிய நண்பரோடு செய்த ஆலோசனையின் சிறந்த பலனே "இந்தியன் நாஷனல் காங்கிரஸ்" என்னும் மகா சபை. அதை ஸ்தாபித்த முக்கியஸ்தருள் ஒருவரான ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரே, அடுத்த வருஷம் இச்சபை முதல் முதல் பம்பாய் நகரத்தில் கூடியபொழுது,

அந்த முதலாவது காங்கிரஸில் முதலாவது தீர்மானத்தைப் பிரேரேபிக்கும் அதி கௌரவத்தைப்பெற்றது வியப்பன்றே. அது முதல் தமது வாழ்நாள் முடியும் வரை, இவர், தம்மாலியன்றமட்டும், பலவாற்றானும், இந்தியன் நாஷனல் காங்கிரஸுக்காக உழைத்துவந்தார்.

ஸ்வாதீனத்தை விரும்பியும் பரோபகாரச் சிந்தையோடும் முதற்கண் உபாத்திமைத் தொழிலைக் கைக்கொண்ட ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், சில வருஷங்களுக்கு அதனுடன் பத்திரிகையாசிரியத் தொழிலையும் செய்து வந்து, பின்பு, அவகாசக்குறைவாலும், விளையும் பெரு நன்மையை நினைத்தும், உபாத்திமைத் தொழிலைக் கைவிட்டுத் தமது கவனம் முழுவதையும் பத்திரிகைகள் பொதுஜன சங்கங்கள் முதலிய விஷயங்களிலேயே செலவிட்டு வந்தாரெனினும், மேனாட்டுக் கல்வி அறிவை வகைக் கேடாகப் புகட்டுவதால் மாணாக்கர் சுதேசப் பற்றொழிந்து, கல்விப்பயிற்சியின் உண்மைக் கருத்தை மறந்து, தமக்கேனும் தமது தாய்நாட்டுக்கேனும் நற்பயனின்றிப் பாழுறக்கூடும் என்பதை அடிக்கடி தமது பிரசங்கங்களில் எடுத்துப் பேசி, கல்விப் போதனா முறையைச் சீர்திருத்த முயன்றதுமன்றி, "ஆரியப் பாடசாலை" என்று திருவல்லிக்கேணியிலிருந்த பாடசாலையின் நிர்வாகத்தில் தலையிட்டுப் பல வருஷங்களாக அதன் பொருட்டு உழைத்துக் கைப்பொருளையும் ஏராளமாய்ச் செலவிட்டும்; கூலி வேலை செய்து பிழைக்கும் ஏழை ஜனங்களின் உபயோகத்துக்காக, "ஆரிய இராப் பாடசாலை" என்ற ஒரு தருமப் பாடசாலையைப் பரோபகாரிகளுக்குச் சிறந்ததோர் முன் மாதிரியாக ஸ்தாபித்து, அதில் இராக்காலத்தில் கூலிகளுக்குக் கல்விபோதித்தும்; சுதேசிய உணர்ச்சியையும் கைத்தொழிற் பயிற்சியையும் விருத்தி செய்யும் பொருட்டு "சுதேச நிதியும் கைத்தொழிற் சங்கமும்" என்ற சபையை ஸ்தாபித்து நடத்தியும், பலவாறாக உழைத்து வந்தார். இந்தியாவின் வரவு செலவு கணக்குகளையும், இராஜாங்க முறைகளையும் கைத்தொழில்களின் நிலைமையையும் இவரினும் அதிகம் உணர்ந்தவர் துர்லபம் என்பது பலர் துணிவு. ஆகவே, நமது தேச நிலைமையைப்பற்றி 1897ல் "வெல்பி கமிஷன்" சபையாரால் இங்கிலாந்தில் நடத்தப்பட்ட விசாரணையில் இவர் சென்று கூறிய சாக்ஷியமும், நமது நாட்டின் கஷ்டநிஷ்டூரங்களையும் குறைப்பாடுகளையும் இவர் தெளிவாய்ப் பல ஆதாரங்களோடு பயமின்றி எடுத்தோதிய திறமையும் யாவராலும் வியந்து மெச்சப்பட்டன.

1898-ல், இருபது ஆண்டுகளாக இவர் தலைமை வகித்து நடத்தி வந்த "ஹிந்து" பத்திரிகையைவிட்டு நீங்கும்படி நேர்ந்தது. அப்பால், இவர், "யூனைடெட் இந்தியா" என்னும் பத்திரிகையை வெளிப்படுத்திச் சில காலம் நடத்தியும்; "மதராஸ் ஸ்டாண்டர்ட்" என்னும் பத்திரிகைத் தலைமையைச் சிலகாலம் வகித்தும்; தமது சொந்தப் பத்திரிகையாயிருந்த "சுதேசமித்திரன்" விஷயத்தில் நேரில் தமது கவனத்தைச் செலுத்திப் பாடுபட்டுத் தமிழ் நாட்டிலும் தமிழருள்ள பிறநாடுகளிலும் அது பரந்தோங்கிக் கிளர்ந்து தழைக்கும்படி செய்தும், வேறு பத்திரிகைகளுக்குத் தமது அபிப்பிராயங்களை எழுதியனுப்பியும், வேண்டியபடி, வேண்டிய பொழுது, பல்வேறு துறைகளில் நமது நாட்டுக்காக உழைத்துத்தமது காலத்தைக்கழித்து வந்தார். அன்றியும், இவர், ஒன்பது வருஷங்கள், (1894-1903) சென்னை முனிசிபல் கார்பொரேஷனில் மெம்பராயிருந்து, சென்னைமாநகரத்துக்காக உழைத்தார். 1902-ல் கூடிய "சென்னை மாகாணக் கான்பரன்ஸ்" மகா சபையின் அக்கிராசனத்தை வகித்து அரிய பெரிய பிரசங்கம் ஒன்று செய்து, அதை நடத்தினர். பிறகு, காக்கிநாடாவிலும் சித்தூரிலும் கூடின சபைகளின் அக்கிராசனத்தை வகித்து, சிறந்த உபந்நியாசங்கள் செய்தார். தென்னிந்தியாவில் ஆங்காங்குச் சிறிது சிறிது தலை நீட்டும் சுதேசிய உணர்ச்சிக்கு, இவர் இடைவிடாது ஊரூராய்ச் சென்று செய்த பிரசங்கங்களே முக்கிய காரணம். இவர் பத்திரிகையில் எழுதிய சில வியாசங்கள் இராஜ நிந்தனையாகுமென்று ஸர்க்காரால் கருதப்பட்டன; ஆயினும், இவருடைய குணசீலத்தையும், பொது ஜனங்களுக்கு இவர் மீதுள்ள பெருமதிப்பையும், இவருடைய தேக ஆரோக்கியத்தையும் முன்னிட்டு, இவரிடம் ஜாமீன் வாங்குவதைத்தவிர, மற்று மேல் நடத்தப்படவில்லை.

கடுகைத் துளைத்து ஒரு கடலையடைக்க முயல்வதுபோல, பல வேறு துறைகளில் இடைவிடாதியற்றிய பேருழைப்புக்கள் நிறைந்த இம்மகானது அரிய பெரிய ஆயுள் விருத்தாந்தத்தை மிகச்சுருக்கி இதுகாறும் கூறியதில், ஓர் அம்சத்தை மட்டும், கடைசியிற் கூறுவதற்கென்றே தவிர்த்திருந்தோம். அஃதாவது, ஆசாரச் சீர்திருத்த விஷயமாக இவரது முயற்சியும், இவர் ஒழுகிக்காட்டிய முன்மாதிரியுமே. ஊன்றி நோக்குமிடத்து, இவரது தந்தையார் கணபதி தீக்ஷிதர், தமது ஜீவனோபாயமான வக்கீல் தொழிலையும் அதன் வருமானத்தையும்விட முக்கியமாகத் தமது வருணாசிரம தர்ம நித்திய

கர்மானுஷ்டானங்களையும், ஆத்மலாபத்துக்குரிய யாகம் முதலிய கிரியைகளையும் பெரிது மதித்து ஒழுகி வந்ததும்; அவரது புத்திரராகிய இம்மகான், ஸ்வாதீனத்தையும் பரோபகாரத்தையும் சுதேச நலத்தையுமே மற்றெவ்விதச் சுயநயத்திலும் மேலாகக் கருதி, ஆலய தரிசனம் வைதீக கர்மானுஷ்டானம் முதலிய 'மதவேஷங்களை'த் தவிர்ந்து, பிறவியால் உயர்குலப் பிராமணரே எனினும் ஜாதி பேதத்தை ஒழிந்து இங்கிலாந்து முதலிய பிறநாடுகளுக்குச் சென்றதுமன்றி, தமது குடும்பத்திலேயே அவசியம் நேர்ந்த காலத்தில் விதவா விவாகத்தைச் செய்து முடித்து, 'மனச்சான்றே பிரத்தியக்ஷ தெய்வம், மக்களெல்லாம் சகோதரர், பரோபகாரமே உத்தம மதம்,' என மதித்து ஒழுகி வந்ததும், இக்காலத்திலே சீரழிந்து காணும் நமது ஹிந்துமதச் சார்பான ஒழுக்கச் சிறப்பையும் மேனாட்டு நாகரிகப் பயிற்சியால் ஏற்படும் ஒழுக்கச் சிறப்பையும் ஒருவாறு பாகுபடுத்திக் காட்டாநிற்கும்.

ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரின் சரித்திரத்தில் இப்பாகத்தை, குருமலை ஸ்ரீ சுந்தரம்பிள்ளை வெகு திறமையோடு எழுதியிருப்பதால் இதை, அவர் வாக்கிலேயே கூற விரும்புகிறோம்:—

"ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரின் மனத்தில் எக்காலத்தில் தேச பக்தியென்னும் உணர்ச்சி தோன்றிற்றோ அக்காலத்திலேயே அத்தேசபக்தி, கேவலம் ராஜாங்க விஷயத்தில் மட்டும் அடங்கி நில்லாமல், எல்லாவிதமான தேச க்ஷேமத்திலும் பரவி நின்றது. எல்லா மனிதர்களும் உயர்குலம் தாழ்குலமென்ற வேற்றுமையின்றியும், வலியவர் எளியவர் என்ற வேற்றுமையின்றியும், ஆண்பால் பெண்பால் என்ற வேற்றுமையின்றியும் ஸமரஸமான ஸ்வதந்தரங்களையும் சௌக்கியங்களையு மடையவேண்டு மென்பதே ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயருடைய கொள்கையாகும்.

"ஒரு சிறு குழந்தை, தனக்கு நாடோறும் இனிய தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்துத் தன்னை மடிமேல் வைத்து உச்சி மோந்து முத்தமிட்டு வளர்க்கும் அருமைத் தாய்மீது அளவற்ற அன்பும் ஆசையும் காட்டினும், ஒரு சமயத்தில் அது பிரியமுடன் வாரித் தின்றுகொண்டிருந்த மண்ணையும் சாம்பரையும் அத்தாய் அதன் கையைவிட்டுப் பிடுங்கி அப்பாலெறிந்து, மண்ணையும் சாம்பரையும் தின்ற குற்றத்திற்காகப் பலமாய் உச்சியிற் குட்டியும் கன்னத்திலடித்தும் தண்டிப்பளாயின், அது அவள்மீது மிகுந்த கோபத்தையும் வெறுப்பையு மடைகின்றது போல, ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் இராஜாங்க விஷயத்தில் செய்த நன்மைகளைக் கண்டு ஆனந்தமடைந்த பொதுஜனங்கள், அவர் தங்

ளுக்கு நன்மையே செய்கின்றாரென்பதை உணர்ந்தாலும், அவர் செய்த ஆசாரச் சீர்திருத்தங்களும் தங்களுடைய நன்மைக்கே யென்பதை உணரக் கூடிய கல்வியு மறிவுமின்றி, அவர் தங்களுக்குத் தீமை செய்வதாய் எண்ணி வெறுப்பாராயினர்.

"இந்தியா தேசத்தின் இராஜாங்க சம்பந்தமான சீர் திருத்தங்களினால், அதாவது இந்திய இராஜ்யாதிகாரத்தில் சுதேசிகளும் அதிக ஸ்வதந்திரங்களை யுடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யும் சீர் திருத்தங்களினால், இந்தியரல்லாத அந்நிய நாட்டாருக்குத் தான் நஷ்டமேயன்றி இந்தியர் ஒவ்வொருவருக்கும் லாபம் தவிர நஷ்டம் சிறிதுமின்று. ஆதலால்இராஜாங்கச் சீர்திருத்தங்களை இந்தியாவிலுள்ள கற்றார்கல்லாதாரனைவரும் மிகுந்தஆனந்தத்துடன் வரவேற்றார்கள். ஆனால் இந்தியாவில் செய்யப்படும் ஆசாரச் சீர்திருத்தங்களினால் இந்தியாவுக் குள்ளேயே ஒரு வகுப்பார்க்கு நஷ்டமும் ஒரு வகுப்பார்க்கு லாபமும் ஏற்பட்டபடியால், ஆசாரச் சீர்திருத்தங்கள் செய்தல் கடினமாயிற்று. எல்லா ஜாதிகளும் மெல்ல மெல்ல ஒன்றாய்க் கலக்க வேண்டுமென்பதைக் கேட்டவுடன், உயர் ஜாதியார்களனைவரும் தங்களுடைய பெருமைபோய் விடுமென்று பயந்தார்கள். பால்ய விதவைகளுக்கு மறு விவாகம் செய்யவேண்டுமென்ற சப்தத்தைக் கேட்டவுடன், புருஷரெல்லாரும் தங்களுடைய மதிப்பும் அதிகாரமும் போய் விடுமெனப் பயந்தனர். இதனாற்றான் சிறிது கற்றறிந்தவர்களும் கூடத் தங்களுடைய சுய நயத்தைக் கருதி ஆசாரச் சீர்திருத்தங்களுக்கு எதிராய் நின்றார்கள். ஆனால், தான் பெற்றுவளர்த்த குழந்தையின் மீது உள்ளன்பு பாராட்டும் தாயொருத்தி, அக்குழந்தை அபாயகரமான நோயினால் வருந்துவதைக் கண்டால், அந்நோயை நீக்கத்தக்க மருந்து எதுவாயினும் அதை எவ்வாற்றாலும் குழந்தையின் வாயில் புகட்டுவாளே யன்றித் தன் அருமைக் குழந்தை மிகவும் கசப்பான மருந்தை குடித்தற்கு வருந்திப் பயப்படுதற்காக இரங்கியாவது, அம்மருந்தைக் குழந்தையின் இஷ்டத்திற்கு மாறாய்ப் பலவந்தமாய்ப் புகட்டுதலினால் குழந்தைக்குத் தன் மீதுள்ள பிரியம்போய் வெறுப்புண்டாய் விடுமென அஞ்சியாவது, மருந்து கொடாமல் சும்மா இருந்துவிடமாட்டாள்; அல்லது குழந்தைக்கு அறிவும் நற்புத்தியும் வந்து அது தானே மருந்தைக் குடிக்க விரும்பும்பொழுது கொடுக்கலாமெனக் காத்திருக்கவும் மாட்டாள். அது போலவே, பொது ஜனங்களனைவரும் தமது உடன் பிறந்த சகோதரர்களெனவும், அவர்களுடைய க்ஷேமமே தமது சொந்த க்ஷேமமெனவும், அவர்களுடைய க்ஷேமத்தை நாடி யுழைத்தலே தாம் உலகில் வாழும் காலமுழுதும் செய்ய வேண்டிய பரிசுத்தமான கடமை யெனவும் கருதிய தேசபக்தராகிய ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரும்,தாம் உபதேசித்த ஆசாரச் சீர் திருத்தங்களைப் பற்றிப் பொது ஜனங்கள் எவ்வித அபிப்பிராயம் கொள்ளினும், அவர்கள் தம்மை அவமதித்து வெறுப்பினும் தாம் தமது மனச் சாக்ஷியின்படிநியாய மென்றும் அவசியமென்றும் உணர்ந்த

எல்லாச் சீர் திருத்தங்களையும் செய்து கொண்டே போனாரே யொழியச் சிறிதும் அச்சமேனும் கூச்சமேனு மடையவில்லை.

"இவ்வாறு ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது சொந்த சுகத்தை யேனும் லாபத்தை யேனும் கீர்த்தியை யேனும் சிறிதும் கருதாதவராய்த் தேச க்ஷேமமொன்றையே தமது மனத்திற் குறிக்கொண்டு தம்மனச் சாக்ஷியின்படி செய்து கொண்டு வந்த ஆசாரச் சீர்திருத்தங்களைக் கண்டு ஒரு பக்கம் ஆச்சரியமும், ஒரு பக்கம் வெறுப்பும், இன்னொருபக்கம் சந்தேகமும் கொண்டவர்கள் சாதாரண ஜனங்களே யன்றி, நமது ஐயரைப் போலவே கல்வி யறிவு படைத்த அறிஞர்கள் அவருடைய செயல்களை அந்தரங்கத்தில் புகழ்ந்திருப்பார்க ளென்பதிற் சந்தேகமின்று. அன்றியும் இந்தியர்களுடைய தேச க்ஷேமத்திற்கு ஆசாரச் சீர்திருத்தங்கள் இன்றியமையாதன வென்பதை நமது ஐயருணர்ந்தது போலவே அவரைப்போன்ற வேறுபல விவேகிகளும் உணர்ந்திருப்பார்க ளென்பதிலும் ஐயமின்று. ஆனால் ஐயர் தமது சித்தாந்தங்களைப் பகிரங்கமாயும் தைரியமாயும் வெளியிட்டது போல் மற்றவர்களும் வெளியிடுவதற்கு அஞ்சிப் பின்வாங்கிவிட்டார்க ளென்பதே அவர்க்கும் மற்றவர்க்கு முள்ள பேதம். போர்க்களத்தில் எதிர்த்து நிற்கும் பகைவனைக் கொல்வது மிகவும் மெச்சத்தக்க செயல்தானென்று அபிப்பிராயம் கொடுத்துவிடுமெல்லாரும் வீரராகமாட்டார். வாயினாற் சொன்னது போலவே அஞ்சாது போர்க்களத்தில் புகுந்து பகைவனைத் தன் கையினாற் கொன்று வெற்றிக்கொடி நாட்டுபவரெவரோ அவரே சுத்த வீரராவர். ஏழைகளுக்கு அமுதிட்டுக் காத்தல் புண்ணியச் செயல்தானென்று வாயினால் சொல்பவன் தருமவானாய்விட மாட்டான். பொருளைத் திரணமாய் எண்ணிக் கேட்பவர்களுக்கெல்லாம் இல்லை யென்னாமல் திரிகரண சுத்தியாய் அன்னமிடுபவனே தருமவானாவான். அது போலவே இந்தியாவின் க்ஷேமத்திற்கு ஆசாரச் சீர்திருத்தங்களும்அவசியம் தானென்று வாயினால் பிரசங்கம் செய்யும் மனிதர்கள் எத்தனைபேரிருப்பினும், வாயினாற் கூறியபடியே செய்து காட்டக்கூடிய தைரியமும் மனவிசாலமு முடையவனே தேசபக்தனாவான்.

"1889-ஆம் வருஷத்தில் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரின் புத்திரிகள் மூவருள் மூத்தவரும், அவருடைய முதற் குழந்தையும், திருச்சினாப்பள்ளி ஜில்லா லால்குடி யென்னும் ஊரில் விவாகம் செய்யப்பட்டிருந்தவரு மாகிய காலஞ்சென்ற சிவப்பிரியை அம்மாள் தமது பன்னிரண்டாம் வயதாகிய அதிபால்யமான இளம் பருவத்தில் தமது கணவரை யிழந்து வைதவ்ய மடைந்தார்.

"துன்பமே யுருவெடுத்தாற்போன்ற இப்பிரபஞ்சத்தில் மனித ஜன்மம் பெற்றவர்க்கு நேரும் துக்கங்கள் இன்னின்ன வெனவும் இத்தனை யெனவும் கணக்கிடல் அசாத்தியமே யெனினும், இத்துக்கங்களிலெல்லாம் ஒரு மாதுக்கு, அதுவும் அவளுடைய இளம்பிராயத்தில், நேரும் வைதவ்விய துக்கமே மகா கொடியது. இதிலும் கொடிய துக்கம் இவ்

"வுலகில் பிறிதொன்றிருக்கக் கூடுமென என்னால் நினைக்க முடியவில்லை, மற்றத் துக்கங்கள் சேர்ந்த பொழுதெல்லாம் இறந்தவர்கள் கதியை நினைந்து அழுகின்ற நாம், இந்த வைதவ்விய துக்கத்தில் மட்டும் உயிரோடிருப்பவர் கதியை நினைந்தே யழுகின்றோம்! அதாவது, வேறு யார் இறந்தாலும், இறந்துபோனவர்கள் பிரிவாற்றாது அழுகின்றோம்; ஆனால் ஒரு புருஷன் இறந்து அவன் மனைவி வைதவ்விய மடைந்தால், உலகினர், இறந்து போன புருஷனுக்காய்ப் படும் துக்கத்தைப் பார்க்கிலும் உயிரோடிருக்கும் விதந்துவின் கதியை நினைந்துதான் அதிக துக்கத்தை யடைகின்றார்கள். இன்னும், இக்கொடிய துக்கமானது உலகத்திலுள்ள சாதாரண ஜனங்களுக்கு நேர்ந்திருந்தால் அவர்களுடைய மனத்தில் உண்டாக்கியிருக்கும் வருத்தத்தை விட, ஸ்ரீ ஜி, சுப்பிரமணிய ஐயர் போன்ற அறிஞர்களுடைய மனத்தில் அதிக துக்கத்தையும் வருத்தத்தையும் விளைவித்திருக்கும். ஏனெனில் சாதாரண ஜனங்கள் இந்தத் துக்கத்தையும், இதுபோன்ற வேறு துக்கங்களையும் கேவலம் விதிவசத்தால் நேர்ந்தன வென்றும், மனிதர்கள் கருப்பத்தில் ஜனிக்கும் பொழுதே பிரமதேவனால் அவர்களுடைய மண்டை யோட்டில் இத்துக்கங்கள் எழுதப்பட்டிருந்தன வெனவும், இவ்வுலகத்தில் தங்களுக்குண்டாம் எல்லாவிதத் துக்கங்களுக்கும் தாங்கள் பூர்வ ஜன்மத்தில் செய்த பாவ புண்ணியங்களே காரண மாதலால், அவ்விதத் துக்கங்களினின்று ஒருவராலும் தப்ப முடியாதெனவும், பற்பல பாமர சமாதானங்களைத் தமக்குத் தாமே கூறிச் சிறிது ஆறுதலடைவார்கள். ஆனால் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் போன்ற மெய்யறிஞர்கள், தெய்வத்தினிடமும் தெய்வச்செயல்களிலும் முற்றும் நம்பிக்கை யற்றவரல்ல ரெனினும், உலகத்தில் மனிதர்க்கு நேரும் எல்லாவித சுக துக்கங்களும் எல்லா சம்பவங்களும் தெய்வத்தின் ஆக்ஞையினாலும், விதிவசத்தாலும், முன்வினையினாலுமே நேருகின்றன வென்றும், மனிதனுக்கு எவ்வித சுயேச்சையும் எவ்விதசக்தியும் இல்லையெனவும் கொள்ளும் மடக்கொள்கை யுடையவரல்லர். நினைத்திராமல் ஒருவன் தலைமீது வெள்ளிடி வீழ்தலும், அறியா வழியில் நடந்து செல்பவனை ஒரு சர்ப்பம் தீண்டுதலும், ஒருவாறு தெய்வச் செயல்களெனக் கொள்ளலாமேயன்றி, மனிதன் தன்னால் நிவர்த்தித்துத் தப்பிக்கொள்ளக் கூடிய காரியங்களிலும் கூட விதியென்றும் தெய்வச் செயலென்றும் கொள்ளுதலை அவர் ஒருபொழுதும் ஒப்பினவரல்லர். மனிதன் தன்னுடைய அறிவின் வலியினால் அநேக துக்கங்களினின்று தப்பிக்கொள்ளல் இயலுமாதலின், அவன் அறிவையும் சக்தியையும் மீறி நேரும் சம்பவங்கள் மட்டுமே தெய்வச்செயலெனவும் விதிவச மெனவும் கொள்ளவேண்டு மென்பதே அவருடைய சித்தாந்தம். இதுவு மன்றி உலகத்தில் தெய்வச் செயலாய் உண்டாகும் துக்கங்கள் காணாமல், மனிதர்களே தங்கள் மடமையாலும், சோம்பலாலும் அநேக புதிய துக்கங்களையும் உண்டாக்கிக்கொண்டார்க ளெனவும், இவ்வாறாக, உலகிலுள்ள துக்கங்களுள், தெய்வச் செயலால் நேர்வனவும் மனிதச் செயலால் நேர்வனவுமாக இருவகைத் துக்கங்

"களிருக்கின்றன வெனவும் அவர் பகுத்துணர்ந்தவர். தெய்வத்தால் நேரும் துக்கங்களை நிவர்த்திக்க மனிதனுக்கு சக்தியில்லாவிடினும், மனிதருடைய அறியாமையாலும் பிடிவாத குணத்தாலும் நேரும் துக்கங்களை நீக்கிக்கொள்ள வேண்டியது மனிதனுடைய கடமையென்பதும் அவருடைய கொள்கை. இவ்வாறாக ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது புத்திரியின் கணவர் காலஞ்சென்று விட்டதை மட்டும் தான் தெய்வச் செயலெனவோ, விதிவசமெனவோ, முன்வினையெனவோ, அல்லது மனிதன் அறிவையும் சக்தியையும் மீறிவரும் துக்கமெனவோ எண்ணி வருத்த மடைந்தாரேயன்றி, அவர் காலஞ்சென்று விட்டதற்காகத் தமது புத்திரி ஆயுள்பரியந்தம் கைம்பெண்ணாகவே இருக்கவேண்டுமென்று தங்கள் ஜாதியார் விதித்திருந்த விதியைத் தெய்வச்செயலல்லாத மனிதச் செயலெனவும், வைதவ்விய வாழ்க்கையை ஒரு பெண்மீது பலவந்தமாய்ச் சுமத்துவதனால் அவளடையும் துக்கமும் துன்பமும் தெய்வத்தால் விளையாமல் மனிதரின் அறியாமையினாலும், பாரபக்ஷமான அநீதியினாலும் விளைவதெனவுமே எண்ணினார்.

"அறிவற்ற ஜனங்கள்தான் தங்கள் சொந்த சௌக்கியத்தையும் சொந்த இன்பத்தையும் கருதும் மிருக ஸ்வபாவ முடையவர்களா யிருப்பார்களன்றி; ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரைப்போன்ற மெய்யறிவும் ஸ்வாதீன புத்தியுமுள்ள பெரியவர் உலகத்திலுள்ள ஸர்வ ஜனங்களுடைய சுக துக்கங்களையும் லாப நஷ்டங்களையும் தங்களுக்கு வந்தனவாகவே பாவிப்பார்கள். இதுபற்றியே, சாதாரண ஜனங்களெல்லாம் இன்பமாய்க் கருதும் இப்பிரபஞ்சத்தை மெய்யறிவுடையவர்களெல்லோரும் துன்பமெனக் கருதுகின்றார்கள். ஒருவனுடைய அறிவு வளர வளர அவன் தன் சுகத்தையும் பிறர் சுகத்தையும் ஒன்றாய் நினைக்கின்றான். தன் வயிற்றைமட்டும் நிரப்பிப் பிழைப்பவன் அடையும் துக்கத்தினும் பத்துப் பிள்ளைகளையும் பந்துக்களையும் காப்பாற்ற வேண்டிய பெரும்பொறுப்பை யுடையவன் அதிக துக்கத்தை யடைவது போலவே, தன் சுகத்தைக் கருதும் சாதாரண மனிதரினும், பிறர் சுகமெல்லாம் கருதும் அறிஞர் அதிக துக்கத்தை யடைகின்றார்கள். இவ்வுண்மையே கேவலமான கூலி வேலைசெய்து பிழைக்கும் அறிவிலிகளினுடைய முகத்திற் காணும் சந்தோஷக் குறியும் அக மகிழ்ச்சியும் தக்க நிலைமையிலிருக்கும் விவேகிகளின் முகத்திற் காணப்படாமைக்குக் காரணம். ஆதலால், தமது புத்திரி வைதவ்விய மடையு முன்னமே, நாட்டிலுள்ள பால்ய விதந்துக்களுக்கெல்லாம் மறுமணம் செய்யவேண்டுமென்றும், அவர்கள் ஆயுள்பரியந்தம் லௌகிக வாழ்க்கையின் சந்தோஷங்களொன்றையும் அநுபவிக்கப் படாதென்று பலவந்தமாய் விதித்திருக்கும் விதியானது மிகவும் கொடிய அநீதி யெனவும் தேசமெங்கும் உபதேசித்து வந்த தயாளுவும் அருளாளருமாகிய ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர், தமது புத்திரிக்கே அக்கொடிய வைதவ்வியம் நேர்ந்ததைக் கண்டவுடன் அவருடைய மனம் எவ்வளவு பதை பதைத்திருக்குமென்பதை நாமே ஊகித்துக் கொள்ளலாம். நாட்டிலுள்ள கணக்கற்ற பால்ய விதவைகளைக் கண்ணுற்று அவர்களின்

"பரிதாபமான நிலைமையைக் கண்டு கலங்கிய அவருடைய மெல்லிய உள்ளம் தாம் பெற்று வளர்த்த புத்திரியே அக்கொடிய நிலைமைக் காளானதைக்கண்ட பொழுது அனலிடை நீராய்க் கொதித்திருக்குமன்றோ? பிஞ்சுப் பிராயத்தில் வைதவ்விய மடைந்த தங்கள் பெண் மக்களை முழு மொட்டையிட்டு, வெள்ளு டை யுடுத்து அறைக்குள் அடைத்துப் பூட்டிவிட்டு அவர்களுடைய துர்ப்பாக் கியத்தைப் பற்றிச் சிறிதும் மனமிரங்காமல், அவர்கள் காணும்படி தாங்கள் தங்கள் மனைவிகளுடன் கூடிக் களித்துப் பிள்ளைகளும் பெற்றுக்கொண்டு வாழும் மற்ற இரக்கமற்ற பிராமணரைப்போல், ஸ்ரீ ஜி, சுப்பிரமணிய ஐயர், கேவலமான ஜாதிக் கட்டிற்கும், ஜாதி வழக்கத்துக்கும் பயந்து தமது அரு மைப் புத்திரிக்கு மேற்கூறிய கைம்பெண் வேஷம் போடவேணும், அல்லால் தமது புத்திரியை அவர் வயதினராகிய மற்ற மங்கலப் பெண்களுடையும் லௌகிக சந்தோஷங்களை யடையவொட்டாது வைதவ்வியக் கொடுஞ்சிறையி லடைத்து வைக்கவேணும் சகித்திலர்; ஸர்வ ஜீவன்களும் கடவுளுடையபடைப் பே யாதலால் எல்லா மனிதரும் ஆண் பெண் பேதமின்றி ஒரேவிதமான ஸ்வதந்திரங்களை யநுபவிக்க வேண்டுமென்று கூறும் சாஸ்திரங்களையும் சாஸ்திரிகளையும் தான் கவனிக்க வேண்டுமே யன்றி உயர் குலத்தோர் க்கு ஒரு விதியும் தாழ்குலத்தோர்க்கு ஒரு விதியும், ஆணுக்கொரு விதி யும் பெண்ணுக் கொரு விதியும், வலியவர்க் கொரு விதியும் எளியவர்க்கொரு விதியும் கூறுகின்ற மற்றெல்லா சாஸ்திரங்களும் சுத்தப்பிழையும், அநீதியும், பாரபக்ஷமுமே யாகுமென்று கழித்துத் தள்ளினர். இந்துக்களும். முக்கிய மாய்த் தமது குலத்தாரும், அநுஷ்டிக்கும் வேறெவ்வித ஆசாரத்தையும் ஒரு வித சமாதானம் செய்து சகித்தாலும், ஏது மறியாப் பால்ய விதவைகளைப் பலவந்தமாய்ச் சிறையிலடைத்து வேஷம் போடுவதாகிய கொடிய வழக்கத்தை எவ்வழியாலும் அடியோடொழித்து விடுதலே தரும நீதி யெனவும், அவ்வாறு செய்வதில் இனத்தாருக்கும் பந்துக்களுக்கும் பயப்படுதல் மிகவும் கேவலமான கோழைத்தனமெனவும் ஸ்ரீ ஜீ. சுப்பிரமணிய ஐயர் தீர்மானித்து விட்டார். தமது புத்திரிக்கு எவ்விதத்தாலும் மறு விவாகம் செய்துவிட வேண்டுமென் றும் நிச்சயித்து விட்டார்.

"இவர் குலத்தையும், இனத்தையும் சேர்ந்த மற்றப் பிராமணர்கள் இவர் தமது புத்திரிக்கு மறுமணம் செய்ய உத்தேசித்திருக்கும் சமாசாரத்தைக் கேட்டவுடன் ஏதோ தங்கள் குலத்தின் பெருமையைக் கெடுத்துத் தங்களை யெல்லாம் அகௌரவம் செய்யும் ஒரு பாபியென இவரைத் திட்டுவாராயினர். இவரால் தங்களுடைய குடும்பத்தின் பழமையான பரிசுத்தமும் தெய்வத்தன் மையும் கெட்டுவிடப் போகின்றபடியால், கேவலம் பறையர் குறவர் முதலிய இழிந்த ஜாதியார் போல் ஒரு பெண்ணுக்கு மறு விவாகம் செய்யத் துணிந்த ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரைத் தங்கள் ஜாதியை விட்டுத் தள்ளிவிடுவதே நியாயமென்று தீர்மானித்ததுமன்றி, இந்தத் தீர்மானத்தை அவர்க்கறிவித் துப் பயமுறுத்தவும் செய்தார்கள். ஆனால் தரும நீதிக்கும், மனச்சாக்ஷிக்கு

"மன்றி வேறு யமனுக்கும் அஞ்சாத தீரமும் மனோ நிச்சயமுமுடைய ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது இன பந்துக்கள் காட்டிய பயத்துக்குச் சிறிதும் அஞ்சாமல், தாம் என்ன கதியை அடையினும், தமக்கு என்ன துன்பங்கள் நேரினும் தமது மனச்சாக்ஷிக்கு நியாயமெனத் தோன்றிய புத்திரியின் மறுவிவாகத்தை நடத்தியே தீர்ப்பதென்று கடைப்பிடித்து, தமது புத்திரிக்கு மாப்பிள்ளையும் இன்னாரென்று தெரிந்தெடுத்துத் தீர்மானித்து விட்டார். காரியம் நிச்சயமாகும் வரை கணவருடைய உத்தேசத்திற்கும் அபிப்பிராயத்திற்கு மெதிராய்ப் பேசுவதற் கஞ்சியிருந்த தமது ஐயரின் மனைவியார் மீனாக்ஷியம்மையும், தமது புத்திரிக்கு மறுமணம் நடப்பது உறுதிதானென்பதையறியவும் அவரும் அளவற்ற வியாகுலமடைவாராயினர். இவர், வேண்டிய உத்தம குணங்களை யுடையவரா யிருந்திருப்பினும், மற்றப் பிராமண மாதரினும் விசேஷமான கல்வியை யேனும் அறிவையேனும் பெற்றிருந்தவ ரல்லராகையாலும், இதற்கு மேல், இவர் பெண்பாலாதலாலும், உலகத்திலுள்ள ஜனங்கள் சொல்வதுதான் நியாயமென்று எண்ணியிருப்பாரே யன்றித் தமது கணவரின் செயல் மெச்சத்தக்க ஒரு வீரச்செயல் என்பதையும், பொதுவாய் விதவா விவாகமென்ற ஆசாரச்சீர்திருத்தக் கொள்கையின் உட்கருத்தின்ன தென்பதையும் உற்றுணரும் புத்தி நுட்பம் இவரிடமிருந்திருக்க முடியாது. ஆதலால் மீனாக்ஷியம்மை தமது புத்திரி நாட்டாரைப்போல் வைதவ்வியச் சிறையிலிருப்பதை யாவது பொறுத்துக் கொள்ளலாமென் றெண்ணினரே யன்றி மறுபடியும் இன்னொரு புருஷனுக்கு விவாகம் செய்து கொடுத்தல் என்னும் சப்தத்தைக் கூட ஏதோ மகா பாதகமென்றெண்ணி, அதை நினைக்கும் பொழுதெல்லாம் உடல் நடுங்கக் கூடியவளவு வெறுப்படைந்தார். மற்றக் காரியங்களிலெல்லாம் இணையற்ற நிபுணரெனத் தமது கணவர் பெயரும் புகழும் பெற்றிருப்பதைக் கண்டு அவர்மீது அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டிருந்திருப்பினும் தமது புத்திரிக்கு மறு விவாகம் செய்ய வேண்டுமென்று தொடங்கி யிருக்கும் செயல் மட்டும் அவர் செய்யத்தகாத இழிதொழிலென வெறுக்கப்பட்டது. எனினும் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தம்முடைய மனச்சாக்ஷி ஒன்றை மட்டும் கவனித்தவராய், தமது இனத்தாரும், உற்ற பந்துமித்திரர்களும், இதற்கெல்லாம் மேலாய்த் தமது மனைவி முதலியவர்களும் செய்த புத்தியீனமான ஆக்ஷேபனைகளை யெல்லாம் ஒருபுற மொதுக்கிவிட்டு, தமது புத்திரியின் மறுமணம் நிறைவேற்றுதற்கு இடமும் காலமும் நிச்சயித்தார். 1887-ஆம் வருஷத்தில் பாம்பே நகரத்தில் ஐந்தாவது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் கூடிய புண்ணிய முகூர்த்தத்தையே தமது புத்திரியின் விவாக முகூர்த்தமாகவும், அந்தப் பாம்பே நகரத்தையே தமது புத்திரியின் விவாக ஸ்தலமாகவும், அம் மகாசபையில் கூடியிருந்த தேச பக்தர்களையே தமது புத்திரியின் விவாகத்தை நடத்திவைக்கும் புரோகிதர்களாகவும் நியமித்தார். இவ்வாறாக 1889-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ஆம் தேதியன்று பாம்பே நகரத்தின்கண், காலஞ்சென்ற தேசபக்தரும் நியாய துரந்தரரும், உண்மை

"யான பிராமணோத்தமரும், ஸ்ரீ கோபால கிருஷ்ண கோக்கலே முதலிய தேச பக்தர்களுக்கெல்லாம் உபதேச குருவாயிருந்த மகானுமாகிய மகாதேவ கோவிந்தரானடேயின் சந்நிதானத்தில், ஐந்தாவது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் சபா நாயகரும் ஆங்கிலோத்தமருமாகிய ஸர் உவில்லியம் வெட்டர்பர்ன், சார்லஸ் பிராட்லா, இந்திய பத்திராதிபர்களுள் சிறந்தவராகிய ஸ்ரீ B. M. மலபாரி முதலிய மகா கனவான்கள் கூடிய பெருஞ் சபையின் நடுவில், ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது புத்திரி சிவப்பிரியை அம்மாளின் இரண்டாவது விவாகோற்சவத்தைக் கொண்டாடினார்.

"ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் சென்னைக்குத் திரும்பிய பின், தமது புத்திரியை புருஷன் இறந்த பின் இன்னொரு புருஷனுக்கு இரண்டாவது விவாகம் செய்தபடியால் அப்படிப்பட்ட ஒருவரை இனி ஒரு நிமிஷமாவது தங்கள் ஜாதியில் வைத்துக்கொள்ளுதலினால் தங்கள் உயர்வும் பரிசுத்தமும் அடியோடு கெட்டு, தங்களுக்கும் ஈன ஜாதியாருக்கும் யாதொரு பேதமு மில்லாது போய் விடுமென்று அவருடைய இனபந்துக்களெல்லோரும் அவரைக் கழித்துத் தள்ளினார்கள். கொலை முதலிய பெரும் பாதகங்களைச் செய்த குற்றவாளிகள் பெறும் தூஷணைகளைவிட நூறுமடங்கதிகமான தூஷணையும் வெறுப்பும் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தலைமீது குவிந்தன. ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தம் புத்திரிக்கு மறு விவாகம் செய்ய உத்தேசித்த பொழுது அவருடைய உத்தேசத்தை அங்கீகரித்து அபிப்பிராயங் கொடுத்த அவருடைய நண்பர்களுங் கூட, பின் காரியம் முடிந்தவுடன் அவரைவிட்டு விலகி விட்டார்கள். இதற்குதாரணமாக ஒரு விஷயம் குறிப்பிட வேண்டுகின்றேன். ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது புத்திரிக்கு மறு விவாகம் செய்ய உத்தேசித்துக்கொண்டிருந்த சமயத்தில் அவருடைய சொந்த பந்துவான ஒருவர் தமது மனைவியையிழந்திருந்த படியால், ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் புத்திரியின் மறுவிவாகம் முடிந்தவுடன் தாமும் இவருடைய செயலைப் பின்பற்றி ஒரு விதந்துவை விவாகம் செய்யச் சித்தமாயிருப்பதாயும், ஆகையால் மற்றப் பிராமணர்கள் தங்களை ஜாதிப் பிரஷ்டம் செய்து விட்டாலுங் கூட, தாங்களாவது ஒருவர்க்கொருவர் உதவியாய் வாழலா மென்றும் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயருக்குத் தைரியம் கூறினார். ஆனால் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரை இனபந்துக்கள் படுத்திய பாட்டைக் கண்டவுடன் அவர் திடீரென்று பின் வாங்கிவிட்டார்.

"ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தம்மைத் தமது ஜாதியார் கேவலம் ஜாதிப் பிரஷ்டம் செய்து விட்டதைப் பற்றிச் சிறிதும் கவலை யடையவில்லை யென்றாலும், தமது மற்றப் புத்திரிகளிருவருக்கும் மாப்பிள்ளைமார் சரியாய் அமைவார்களோ என்னவோ என்ற கவலையை மட்டும் அடைந்தார். தாம் தமது முதலாவது புத்திரியின் க்ஷேமத்தைக் கருதியும், இதற்கு மேலாய்ப் பொதுவாய்ப் பால்ய விதந்துக்களின் க்ஷேமத்தைக் கருதியும் செய்த ஒரு செயல்

"தமது மற்றப் புத்திரிகளின் க்ஷேமத்திற்கு இடையூறாய் முடியுமோ வென்று வருந்ினார். தாம் இந்திய பொது ஜனங்களின் ஆசாரங்களைத் திருத்த வேண்டு மென்ற உட்கருத்துடன் செய்த செயலால் தம்மீது வெறுப்படைந்த பொது ஜனங்கள் தாம் கூறும் இராஜாங்க உபதேசங்களையும் அவமதித்து விடுவார்களோ வென்றஞ்சினார்.

"லோகோபகாரம் செய்ய வேண்டுமென்ற தருமசிந்தையுடன் முன்வந்த நமது ஐயருக்கு அவருடைய இனத்தாரும் ஜாதியாரும் பொது ஜனங்களும் செய்த சம்மானம் இங்ஙனமிருக்க, ஈசனாவது அவருக்குச் சிறிது ஆறுதலுண் டாகும்படி கிருபை செய்திருக்கப்படாதா? பிதாவாக்கிய பரிபாலனம் செய்த இராமனுக்கும், சத்திய விரதம்பூண்ட அரிச்சந்திரனுக்கும், இவர் போன்ற தரும சீலர்களுக்கும் ஒன்றன்பின் னொன்றாய்த் துன்பங்களையே கொடுத்த அவ் வொருவன் லோகோபகார தருமம் செய்ய வந்த நமது தேசபக்தருக்கு மட் டும் வேறொரு விதம் செய்வானா? அன்றியும் நன்மை செய்பவர்களையெல்லாம் துன்பம் வறுமை முதலியவற்றிற்காளாக்கி அவர்களின் உட்கருத்தைச் சோதி த்தறிந்த பின்பு தான் அவர்களுக்கு ஈசன் அருள்வானென்பதன்றோ இந்துக் களுடைய சம்பிரதாயம்? அவ்வாறே, ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயருக்கு மனிதர் இயற்றிய துன்பங்கள் காணாமல், அவரை ஈசனும் துன்புறுத்துவானாயினன். புத்திரியின் மறு விவாகம் நடைபெற்ற ஆறு மாதங்களுக்குள் தாயார் மீனாக்ஷி யம்மையார், அப்பொழுது சுமார் இரண்டு வயதுள்ளவராயிருந்த தமது கைக் குழந்தை ஸ்ரீ விசுவநாத ஐயரையும், முதலாவது புத்திரி சிவப்பிரியை யம்மை யையும், முறையே இரண்டாவது மூன்றாவது புத்திரிகளாகிய ஸ்ரீமதி கமலாம் பாள் ஸ்ரீமதி ஞானம்பாள் என்ற இரண்டு கன்னிகைப் பெண் மக்களையும், தமதுயிர்த் துணைவராகிய நமது ஐயரையும் விட்டுப்பிரிந்து, தாம் தமது முதற் புத்திரியின் சம்பந்தமாய் அடைந்த துன்பங்களும் கவலைகளும் ஓய்ந்து சுக மடையுமாறு, இவ்வுலகம் நீத்து வேறுலகம் செல்வாராயினர்.

"ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது மனச்சாக்ஷியின்படி தேசக்ஷேமத்திற் காவசியமானவை யெனத் தோன்றிய சீர்திருத்தங்களுள் அதி முக்கியமான விதவா விவாகமென்னும் வழக்கத்தை ஸ்தாபித்ததற்குத் தாமே உலகிற்கு முன்மாதிரி காட்ட வேண்டு மென்ற பொது நோக்கத்துடனும், தமது முன் னோர் அறியாமையால் அநுசரித்து வந்த வைதவ்வியக் கொடுஞ் சிறையினின்று தமது புத்திரியைத் தப்புவிக்க வேண்டிய பெருங்கடமை தம்முடையதே யென்ற அருளுணர்ச்சியோடும், தாம் தமது புத்திரிக்குச் செய்த மறு விவாக மானது தமது மற்றமக்களின் பிற்காலக்ஷேமத்திற்கும், தமது நற்பெயருக்கும் கேடாய் முடிந்தமையை யுணர்ந்து அடைந்த மனப்புண்ணை ஆறாதிருக்கும் சமயத்தில், தமது அருமை மனைவி நிலைத்திராமல் அகால மரணத்திற் காளா னமையையும், அம்மரணத்திற்குத் தமது சொந்தச் செயலே காரணமா மென ஊரினர் கூறுவதையும் கேட்டவுடன், அவர் மெல்லிய மனம்பட்டிருக்கக்கூடிய பாட்டை நான் விரித்துக் கூறுதல் அசாத்தியமாகும். சாதாரணமான கல்வி

"யறிவும் நிதானமான நற்குண நல்லுணர்ச்சிகளு முடைய மனிதர்களே தங்கள் சாதாரண மனைவியரை யௌவனபருவத்தி லிழக்கப்பெறுதலால் அடையும் துக்கம் பெரிது. இனி, தேசத்திலுள்ள எல்லா ஜனங்களுடைய எல்லாவித க்ஷேமத்தையும் நாடும் தரும குணமும், அதன் பொருட்டுழைத்தலே வாழ்க்கையின் பெரும்பயனுங் கடனுமென்ற பேருணர்ச்சியுமுடைய ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் போன்ற விசால நெஞ்சத்தினர் மேற்கூறிய சம்பவங்களால் அடையும் துக்கம் அதனிலும் பெரிது. இன்னும், தமது ஆக்ஞையை மீறிக் குறையளவும் கடந்தொழுகா உத்தமகுணங்கள் வாய்க்கப்பெற்ற தமது மனைவியை, நினைத்திராது கவர்ந்துகொண்டோடிய அகால மரணத்தையும், தாம் தமது மனைவியின் பிரிவுக்காக வருந்தும் வருத்தமும் போதாது தமது குழந்தைகள் சகித்தற்கரிய பிஞ்சுப் பருவத்தில் தாயையிழந்து வாடித் தமது முகத்தை அண்ணாந்து பார்த்து நின்ற பரிதாபத்தையும், அதனால் தமது குடும்பத்தினுடைய கட்டும் காவலும் களிப்பும் அடைந்த உலைவையும், இத்துடன் இவற்றிற்கெல்லாம் தாம் தமது புத்திரிக்குச் செய்த மறுவிவாகச் செயலே காரணமென ஊரிலுள்ளவர் பொய்யாகவோ மெய்யாகவோ தம் தலைமீது ஏற்றிவைத்த அபவாதத்தையும், இதன் பயனாய் விளைந்த பொதுஜன இகழ்ச்சியையும் வெறுப்பையும் ஒரே காலத்தில் உணர்ந்தநுபவித்த நமது ஐயரின் மனத்துள் மேற்கூறிய ஒவ்வொரு நினைவும் ஒவ்வொரு உணர்ச்சியும் ஒவ்வொரு பாணம்போல் ஊடுருவிச் சென்று துளைத்திருக்கு மென்பதில் ஐயமுண்டோ? தன் குழந்தை பசியால் வருந்துவதைக் கண்டு சகியாமல் அதற்கு அவசரமாய்ப் பால் புகட்டும்பொழுது அப்பாலே குழந்தையின் சிரத்துக்கேறி அதைக் கொல்லுமானால் ஒரு தாயின் மனம் எவ்வாறு கொதிக்கும்? தன் மனைவி மக்களை வறுமையின் கடிவாயினின்று தப்புவித்துக் காக்கும் பொருட்டு அயலூரொன்றிற் கழைத்துச் செல்லும் பொழுது அவர்களனைவரையும் நட்டாற்றில் இழந்த ஒருவன் மனம் எவ்வாறு பதைபதைக்கும்? அவ்வாறே பொதுவில் தேச நன்மையைக் கருதியும், குறிப்பில் தமது புத்திரியின் நன்மையைக் கருதியும் செய்த ஒரு செயல் தமது குடும்ப முழுமைக்கும் பெருங்கேடாய் முடிந்தமையை உணர்ந்தும், தமது ஜாதியார் தம் மூட்கருத்தை யுணராமல் தம்மீது பிரயோகித்த இகழ்ச்சி, கண்டனம், அவதூறு முதலிய வெவ்விய பாணங்களைக் கண்டும், அவருடைய மனம் கொதித்திருக்கக் கூடிய கொதிப்பையும் பதை பதைப்பையும் சிறிது உற்று நினைத்தால் எவருடைய கண்களில் தான் நீர் ததும்பாது! அந்தோ! தாய் நாட்டின் க்ஷேமத்திற்கென்று தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்த நமது ஐயரைப்போன்ற தேச பக்தர்களுக்கு இனத்தாரும் பொதுஜனங்களும் செய்யும் கைம்மாறு இது தானே! ஈசனுடைய படைப்பெல்லாம் தம் இன மெனக்கொண்ட பெரியார்க்கு ஈசன் திருவருள் புரிவது மிங்ஙனம் தானோ! தீப்பிடித்தெரிந்த வீட்டிற்குள்ளகப்பட்டு வெளியே ஓடிப் பிழைத்தவன் தன் சரீரத்திலுள்ள சூட்டைப் பொறுக்க வியலாவது பாழுங் கிணற்றில் வீழ்ந்தேனும் சிறிது குளிர்ச்சி பெறலாமா வென்றுஏங்குவது போல, ஸ்ரீ ஜி.

'சுப்பிரமணிய ஐயர் தமது பந்துக்களும் பொது ஜனங்களும் தம்மீது காட்டிய வெறுப்பையும் அவமதிப்பையும் பொறுக்க வியலாதவராய்த் தமக்கு அந்நிய மான கிறிஸ்து மதத்துள் பிரவேசித்தாவது தமக்கும் தமது மக்களுக்கும் சிறிது ஆறுதலும் மனவமைதியும் பெற முடியாதாவென்று நினைக்கக்கூடிய தூரம் சென்று திரும்பினாராயின், அவர் தமது இனத்தார்மீது எத்தனை வருத்தம் கொண்டிருப்பாரென்பது ஊகிக்கத் தக்கது. எனினும், தனது சொந்த சுகத்தையும் லாபத்தையும் கருதித் தன் மனச்சாக்ஷிக்கு விரோதமான துறையிலிறங்கி நடிப்புச் செய்யும் அற்ப குணத்துக்கும் அவருக்கும் வெகுதூர மாகையாலும், அவர் தாம் பிறந்து வளர்ந்த இந்து மதத்தைவிட வேறுமதங் கள் உயர்ந்தனவென்னும் எண்ணமற்றவ ராதலாலும், அவர் மேற்கூறிய வாறு செய்தற்கு—அவருடைய கன்றிய மனம் துணிந்திருப்பினும்—அவரு டைய மனச்சாக்ஷி துணிந்திலது. இப்பிரபஞ்ச வாழ்க்கைக் கியல்பாயும் இலக்ஷணமாயுமுள்ள குடும்ப துக்கங்களைப் பொறுக்கக்கூடிய மனோதிடமற்றுக் கேவலம் சௌகரியார்த்தமாய் நொடிக்கொரு மதத்திற் பிரவேசித்து மாறி மாறியுழலும் செயல் அதிகேவலமான பேடிகளின் செயலென வெறுத்தும், தம்மை இகழ்ந்து தூற்றிய மற்ற இந்துக்களுக்கு இந்து மதத்தில் எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை தமக்குமுண்டாதலால், மற்றவர்க்குப் பயந்து தாம் தமது மதத்தை விட்டு விலகுதல் மடமையான கோழைத்தன மென ஓர்ந்தும், அவர் தாய் மதமாகிய இந்து மதத்தை விட்டு அசைந்திலர். இவ்வாறாக ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது இனத்தார் செய்த கொடு மையால் அவருடன் கலந்து வாழ வழியின்றி வேறு மதங்களிற் சேரத் துணி யினும், தமது மனச் சாக்ஷியின் ஆக்ஞையால் இந்து மதத்தை விட்டுப்பிரிந்து சுகமடைய வியலாதவராய், இந்துக்களென்னும் உலகத்திற்றானே தமக் குத் தாமொருவரே துணையாய்க் கேவலம் சிறையிலடைபட்டவர் போல் நாட்களைக் கழிப்பாராயினர். இவற்றை யெல்லாம் நோக்கும் பொழுது ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரடைந்த துன்பங்களுக்கெல்லாம் அவருடைய மனச் சாக்ஷியே காரணமாமென வெளியாகின்றது. இக் கொடிய மனச்சாக்ஷி வேறு பல தருமவந்தர்களுக்குச் சத்துருவாயிருந்தது போல நமது ஐயருக்கும் பிராணசத்துருவாய் இருந்தது. மனச் சாக்ஷி யென்னும் இப்பகையை வென்று அதன் சொற்களைக் கேளாமல் சுயநய மென்னும் தேவதையைப் பூஜித்து வழிப்பட்டு, தமது கல்வியறிவை யெல்லாம் தமது லௌகிக சுகத்திற் கியைந் தவாறு செலவிட்டிருப்பாராயின் அவர் இது வரையும் மாடமாளிகை கூட கோபுரங்களுடன் சகல செல்வத்தையும் பெற்று மிருப்பார்.

"இராஜாங்க தேசபக்தர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்தைக் கழித்து வீட்டுக்குத் திரும்பிய பின்னரேனும் தங்கள் பந்து மித்திரர்களுடன் கூடி வாழலாமென்ற ஒரு நம்பிக்கையை வைத்தும், தாங்க ளடைந்த தண்டனையினால் தங்கள் புகழ் முன்னினுமதிகம் பரவி விட்ட தென்ற திருப்தியினாலும் சிறிது ஆறுதலடையக் கூடும். ஆனால் ஆசாரச் சீர்

திருத்தத் "தேச பக்தர்கள் தங்களுக்குத் தங்கள் பந்துக்களால் விதிக்கப்பட்ட தண்டனை எவ்வளவு காலம்வரை நீளுமென்ற நிச்சய மற்றவர்களாயும், தங்களுக்கு வேறு வழியாற் கிடைத்த நற்பெயரும் புகழும் போய் விட்டமைக்காக வருத்தமுடைய வர்களாகவுமே இருந்திருப்பார்கள். இராஜாங்க சீர்திருத்தங்களின் சம்பந்தமாய் ஸர்க்காரை எதிர்த்து நின்று அவர்கள் தண்டனையை லக்ஷியம் செய்யாமல் உழைத்த தேசபக்தர்கள் உலகமெங்கும் புகழப் பட்டார்கள்; ஆனால் ஆசாரச் சீர் திருத்தங்களின் சம்பந்தமாய்ப் பொது ஜன அபிப்பிராயத்தை எதிர்த்து நின்று பொது ஜனங்களின் தண்டனையை லக்ஷியம் செய்யாமல் உழைத்த தேசபக்தர்கள் தேசத்தாராலும் பந்துக்களாலும் இகழப்பட்டார்கள். இவ்வுண்மை ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் மட்டிலு மன்று, இவரைப் போன்ற ஆசாரச் சீர்திருத்த தேசபக்தர்களாகிய இராஜா ராம மோகனராய், ஈசுர சந்திர வித்யாசாகரர் முதலியவர்களுக்கும் பொருந்தியதேயாகும்."

ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரை நேரில் அறிந்து பழகும் பாக்கியத்தை யாம் பெற்றிலேமாதலின் அவரை நன்கு அறிந்தவரான மேற்படி சுந்தரம் பிள்ளை, அவரது குணாதிசயங்களைப்பற்றிக் கூறியிருப்பதை இங்கே வரைவது பொருந்தும்:—

தேசபக்தர்களுக்கு "லௌகிக அறிவு" அதாவது "லௌகிக சாமர்த்தியம்" இருக்கவேண்டியது அவசியமென்று சிலரும் அவசியமல்லவென்று சிலரும் கூறுவார்கள். இதில் நமது ஐயருக்கு இந்த "லௌகிக அறிவு" இல்லையென்றே சொல்லவேண்டும். ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி எல்லாரையும் எளிதாய் நம்பும் இயல்புடையவரா யிருந்தமையால் ஒருவன் ஒரு சமயம் அவரிடம் ஐயாயிரம் ரூபாயை மோசம் செய்து விட்டானென்று அவர் சரித்திரத்திற் கூறப்படுகின்றது. அதுபோலவே நமது ஐயரும் யாரையும் எளிதில் நம்பி விடுவார். சூரிய மண்டலத்தில் நிகழும் செயல்களையும் அறிந்து சொல்லும் "தூரதிருஷ்டிக் கண்ணாடி" என்னும் கருவி சமீபத்தில் நிகழும் செயல்களையறிவிக்க இயலாது போவதுபோல, கவர்ன்மெண்டாருடைய செயல்களையும் அவற்றின் உட்கருத்துகளையும் அவற்றால் விளைவனவற்றையும் முன்னறிந்து சொல்லும் தீர்க்க தரிசியாகிய நமது ஐயர் தம்முடன் பழகும் சாதாரண மனிதர்களின் இயல்பையும் செயல்களையும் அர்த்தம் செய்ய வலியற்றவராயினர். சொற்ப தினங்களுக்குமுன் இவருக்கு வேண்டுமென்று தீங்கிழைத்தவரே இவரிடம் வந்து காரியசித்தி பெறுவார்கள். இவருடைய சந்நிதானத்தில் நிற்பதற்குக்கூட அருகரல்லாத மனிதர் இவருடைய ஸ்நேகத்தை எளிதிற் பெறலாம். தம்முடைய பெருமையே இம்மட்டென்பது நமது ஐயருக்குத் தெரியாது. டாம்பீகம், தற்பெருமை, தற்புகழ்ச்சி முதலிய சொற்களின் பொருளையும் இவர் அறியார். கடல்போல் விரிந்த இந்தியா தேசத்தின் வரவு செலவு கணக்குகளையெல்லாம் கற்றுணர்ந்த இவருடைய நுட்ப புத்தியில்

"தமது சொந்த வரவுசெலவு கணக்கின் விவரம் நுழையாது. இக்குறையே இவர் "ஹிந்து" பத்திரிகையை விட்டு விலகினதற்குக் காரணமாகும். சென்னையைப் போன்ற மகா நகரத்தில் சென்ற முப்பது வருஷங்களுக்குமேல் வாழ்ந்தறிந்த இவர், ஒரு ரெயில்வேப் பிரயாணம் செய்யும்படி நேரிட்டால் டிக்கட்டு வாங்குவதற்கும், ஜனக்கூட்டத்தில் முதலாவது இரண்டாவது வகுப்பு வண்டிகளில் இனமறிந்து ஏறுவதற்கும் பிறருடைய உதவியையே நாடுவாராயின் இவருடைய லௌகிக ஞானத்தையும் சாமர்த்தியத்தையும் விரித்துக் கூறுதல் அவரைப் பரிஹஸித்தல்போலாகும். இவருடைய கம்பீரமான தோற்றத்தைக்கண்டும் சப்தத்தைக் கேட்டும் எவரும் அச்சமடைவார்களெனினும் சிறிதுநேரம் சம்பாஷணை செய்தவுடன் இவர் வெகு சாமான்யமான நண்பராய் விடுவர். மனிதருடைய வாய்ப்பேச்சினாலேயே அவர்களை மதித்துவிடும் ஸ்வபாவ குணம் இவரிடம் இருப்பதனால் இவருக்கு நேர்ந்த நஷ்டங்களும் பலவுள.

"எழுதும் விஷயங்களில் உள்ளதை உள்ளவாறே கண்டிப்பாயும் தாக்ஷிண்யமும் பயமுமின்றியும் எழுதலே இவரிடமுள்ள விசேஷ குணம். "ஊசி மிளகாயை அரைத்தாற்போல காரமாய் எழுதவேண்டும்" என்று தமது சீடர்களுக்குப் புத்திமதி கூறுவார். மிளகாயின் காரம் குறையும்படி உப்பையும் புளியையும் சேர்ப்பதுபோல தாக்ஷிண்ணியமான மொழிகளில் வழவழவென்று எழுதல் இவர்க்குச் சிறிதும் பிடியாது. இதுபற்றியே இவர் பிடிவாதமும் நிர்தாக்ஷிண்யமுமுடையவரெனப் பலர் குறை கூறுவர். ஆனால் இவர் தம் மனச்சாக்ஷிக்கு ஒவ்வாதவற்றை வேண்டுமென்று கபடமாய் எழுதமாட்டார். தாக்ஷிண்யமென்பது சில சமயங்களில் நல்லகுணமெனக் கொள்ளப்படினும் அது ஒரு உயர்குணமாகாதாதலின் அக்குணம் இவரிட மில்லாமை ஒரு பெருங் குறையாகாது.

"இவர் பெயரளவில் இந்துவே யாயினும் இவருடைய இந்து மதமானது ஆலயதரிசனம், கருமானுஷ்டான முதலிய மதவேஷங்களுடன் அமைந்ததன்று. ஸர்வஜீவஸமரஸம் என்னும் இந்துமத மூலக்கொள்கையே இவருடைய உண்மை மதம். ஸர்வ ஜீவன்களுக்கும் மனச்சாக்ஷியின் ஆஞ்ஞையின்படி இயன்றவரை நன்மைபுரிதலால் உண்டாம் புண்ணியமே மோக்ஷசாதனமாதலின், கேவலமான அவயவாதிகளால் செய்து நடிக்கப்படும் கிரியைகளில் இவர் அவ்வளவு பற்றுடையவரல்லர். காலதேச வர்த்தமானங்களுக்கியைந்தவாறு மதங்களும் மதாசாரங்களும் மாறவேண்டுமென்பதும், சமைத்தபொழுது உருசியாயிருந்த தின்பண்டங்கள் நாளானபின் ஊசிப்புழுத்து உண்போர்க்குத் தீமை விளைத்தல்போல, புராதன இந்துக்களால் தழுவப்பட்ட வழக்கங்களுள் இப்பொழுது தீமைக்கேதுவாய் இருப்பனவற்றைக் கழித்துத் தள்ள வேண்டுமென்பதும் இவருடைய மதத்தின் உட்கருத்து. மனிதர்கள் எம்மதத்தினராயினும், எக்குலத்தினரெனினும், எத்தொழிலினரெனினும் அவர்கள்

"இவ்வுலகில் செய்யும் நற்செயல்களனைத்தும் ஒரு பரம்பொருளாற் கவனிக்கப் படுகின்றன வெனவும், அப்பொருளின் மனத்திருப்தியே மோக்ஷமெனவும் நமது ஐயர் நம்பியிருக்கின்றார். இதுவே இவருடைய மதம்."

தென்னிந்தியாவிலே, ஆங்கிலத்தில் ஆகுக தமிழில் ஆகுக, இந்தியப் பத்திரிகைகள் முன் வருதற்கும்; சுதேசியம் என்னும் உத்தம உணர்ச்சி முளைகிளம்பித் தழைத்தற்கும்; ஆசாரச் சீர்திருத்தம் இப்பொழுது உள்ள சிறிது அளவேனும் நடைபெறுதற்கும்; தேசபக்தி பரவுதற்கும் மூல புருஷராயிருந்த இந்த மகான், 18-4-1916-ல், இவ்வுலக வாழ்வை நீங்கினர்.

இவர் தொடங்கிய முயற்சிகள் அனைத்தும் நாளுக்கு நாள் தழைத்தோங்கி வளர்ந்து கொண்டே வருகின்றன. சுதேசியக் கல்வியும் விதவா விவாகமும் மட்டும் இதுகாறும் அவ்வளவு மேலிட்டுப் பெருகவில்லை யெனினும், இவ்விரண்டனுள் முன்னது தலையெடுக்கத்தொடங்கிவிட்டது. இவர் விஷயமாய் ஏற்படுத்தப்படும் ஞாபகச்சின்னம், விதவாவிவாக சம்பந்தமாயும் பத்திரிகைகளின் சம்பந்தமாயும் இருத்தல் ஏற்புடைத்தாகு மென்று தோற்றுகின்றது. அஃது எங்ஙனமாயினும், நமது நாட்டுக்கு, முக்கியமாய்த் தென்னிந்தியாவுக்கும் தமிழராவார்க்கும், இவர் செய்துள்ள அளப்பரிய நன்மைகள், நம்மவரால் ஒரு பொழுதும் மறக்கற்பாலனவல்ல. செல்வமும் செல்வாக்கும் மிக்குறும் துறைகளில் இவர் புகாமையினாலும், ஆசாரச் சீர்திருத்தத் துறையில் புகுந்துழைத்தமையினாலும், நம்மவர்களுக்குள், இம்மகான், தமது தகுதிக்கேற்ற அளவு கௌரவத்தைப் பெற்றில ரெனினும், நமது சந்ததியார், இவரை உத்தம இந்திய தேச பக்தர்களின் முதல் வரிசையில் வைத்துக்கொண்டாடுவர் என்பது விவாதீதமான உண்மையே.

உண்மை ஒழுக்கம்.—"சரியோ, தவறோ, எனக்கு என்ன நேருவதாயிருப்பினுமே, மனச்சாக்ஷியின்படி ஒழுகுவந்த என் வாழ்க்கையின் கடைப்பிடி காங்கிரஸ் சபையில், பல்லாண்டுகளாக ஒரு ஜில்லாவின் பிரதிநிதியாக நான் இருந்திருக்கிறேன்; என்னை அவ்வாறு தெரிந்தெடுத்தவர்கள் என் செயல்களை அங்கீகரிக்கவேண்டுமென்பது என் பேரவா; ஆயினும்,—நானே சொல்லிக்கொள்வது தற்புகழ்ச்சிபோல் தோற்றலாம்,—என் மனச்சாக்ஷி என் செயல்களை மெச்சுவதையே, நான் அதனினும் மேலாக விரும்பினேன். என் மனச்சாக்ஷியோடன்றோ நான் உண்பதும், உறங்குவதும், சதாக் கூடி வாழ்வதும்? அவ்வாறு கனவிலும் நனவிலும் என்னைவிட்டு நீங்காமல் உடனிருக்கும் ஒன்று என்னை இகழ்ந்து வெறுத்தால், நான் மனவமைதியோடு உயிர்வாழ்வதெப்படி?" *President General Garfield*

பிரகிருதியில் மனிதனுடைய ஸ்தானம்.

[பாலக்காடு விக்டோரியா கலாசாலையில் போதகரான
ம-ா-ா-ஸ்ரீ மா. ஏகாம்பரநாதன் அவர்கள் M. A; L. T; எழுதியது.]

3. பிராணதாரப் போராட்டம்.

(122-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஜீவவர்க்கங்களின் வாழ்க்கையில் உள்ள சில நியமங்களைப்பற்றிப் போன சஞ்சிகையில் கூறினோம். அதில், பாரம்பர்யக் கிரமப்பிரகாரம் ஒவ்வொரு பிராணியும் அதன் முன்னோரைப்போல் இருப்பதாகவும், அதே சமயத்தில் வித்தியாசக் கிரமத்தை அனுசரித்துச் சந்ததிக்கும் முன்னோருக்கும் வேற்றுமைகள் இருப்பனவாகவும், இவ்வித வேற்றுமைகளுக்குக் காரணங்கள் என்னவென்றும், இவ்வேற்றுமைகள் தாம் ஜீவவர்க்கங்களின் பரிணாமத்திற்கு மூலமாகின்றனவென்றும் கூறப்பட்டன. இவ்வேற்றுமைகள் எவ்விதத்தில் பரிணாமத்திற்கு மூலமாகின்றனவென்று விவரிக்குமுன், இவ்வுலகின்கண் உள்ள பிராணதாரப் போராட்ட(Struggle for existence)த்தைப்பற்றிச் சற்றுத் தெரிந்து கொள்ளுவோம்.

நான்கு பேர்களே சௌகரியமாகச் சாப்பிட்டு ஜீவனம் செய்து வரும்படியான ஐவேஜியுள்ள ஒரு குடும்பத்தில் சந்ததி விருத்தியாகிப் பத்து, பன்னிரண்டு பேர் இருந்தால், அவர்களெல்லோரும் வயிற்றுக்குப் போதுமான ஆகாரமில்லாமல் கஷ்டப்படுவார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். "இராமுவுடைய பாட்டனார் இராமசுவாமி ஐயரும், நாணுவுடைய பாட்டனார் நாராயணையரும் சொந்த அண்ணன் தம்பிகள்; பாகம் பிரித்துக் கொள்ளும் போது இரண்டு பேருக்கும் சாப்பாட்டுக்கு நிறையச்சொத்து இருந்தது; இராமசுவாமி ஐயருக்கு இராமுவுடைய அப்பா ஒரே பிள்ளைதான்; இராமுவுடன் கூடப்பிறந்தவர்களும் யாருமில்லை; அதனால் அவன் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படாமல் சுகமாக இருக்கிறான். ஆனால் நாணுவுடைய பாட்டனார் நாராயணையருக்கோ நாலு பிள்ளைகளும் நாலு பெண்களும் உண்டு; நாணுவோடே கூடப்பிறந்த சகோதரர்கள். ஐந்து பேர்; அதனால் அவன் பாட்டனுக்கு வந்த ஆஸ்தியெல்லாம் பிரிஞ்சுபோய் சம்

சாரம் அதிகமாகி நாணுவுக்கு இந்தக்கஷ்டம் வந்திருக்கு" என்றுகோ பாலேயர் என்பவர் சாப்பிட்டுவிட்டு வேறொருவருடன் தெருத்திண்ணை யில் சொல்லிக் கொண்டிருந்ததன் உண்மையைக் கவனித்தால், ஒரு குடும்பத்தில் (உணவுக்கு வேண்டிய பொருள் ஒரே ஸ்திதியில் இருக்கையில்) ஜனவிருத்தி பெருகும் காரணமத்தினுல், முன்போல் சௌகரியமாக ஜீவனம் செய்யமுடியாமல்கஷ்டம் நேரிடும் என்று தெரிய வருகிறதல்லவா? இவர்களுக்குத் தகுந்த ஆகாரம் இல்லாக் காரணத்தால் தேக சௌக்கியத்திற்குக் குறைவுண்டாகி, இவர்களு டையசந்ததியில் ஜனித்தோரும் பலம்குன்றித்தேகம் மெலிந்து இரு ப்பார்கள் என்று சொல்லலாம்.

இம்மாதிரியாகவே, ஒரே வியாபாரி, சில்லரைப்பலசரக்குக்கடை வைத்து, அதிலிருந்து வரும் இலாபத்தைக்கொண்டு ஜீவனஞ் செய்து வரும் சிறு கிராமத்தில், வேறு இரண்டு வியாபாரிகள் கடைகள் வைத்தால், முதல் வியாபாரிக்கு வரும்படி குறைந்து, மூவரும் கஷ் டப்படுவார்கள் என்றும்; அவர்களுள் அதிக சாமர்த்திய முள்ளவ னுக்கே அதிக இலாபம் கிடைக்குமென்றும் சொல்லலாமல்லவா? இதில், ஒரே தொழிலில் அதிக ஜனங்கள் போட்டிக்கு வரும் காரண மாகக் கஷ்டம் நேரிடுகிறது. இதுபோலவே, கவர்ன்மெண்ட் உத்தி யோகம் ஒன்று காலி என்று கேட்டவுடன், அதற்கு அனேகர் அப்ளி கேஷன் போடுவதும், இப்போட்டியில், பரீக்ஷையில் மற்றையோ ரைக் காட்டிலும் உயர்தரமாகத் தேறின காரணமாகவோ, அல்லது சிபார்சு பெரிய உத்தியோகஸ்தர்களுடைய தயவு முதலானவை இருக்குங் காரணமாகவோ, ஒருவனுக்கு அவ் வுத்தியோகம் கிடைப் பதும் நாம் தினந்தோறும் பார்த்து வருபவை தாமன்றோ? இப்படி ஜன விருத்தியாலோ, ஒரே தொழிலில் அதிக ஜனங்கள் புகுத லாலோ, மனித வர்க்கத்தில் ஜீவனம் கழிப்பதற்கு ஒரு போராட்டம் இருக்கிறதென்றும், அதில், சரீரபலமும், பசிபிணி முதலானவற்றைச் சகிக்கக்கூடிய சக்தியும் உள்ளவன் வாழ்க்கையிலும், அதிக சாமர்த்திய முள்ளவன் வியாபாரத்திலும், புத்திக் கூர்மையுள்ளவன் உத்தியோகத் திலும் முன்னுக்கு வருவான் என்றும் தெரிந்து கொள்ளுகிறோம்.

மனித வர்க்கத்தில் உள்ளதுபோலவே, மற்ற ஜீவவர்க்கத்தில் எல்லா ஜந்துக்களுள்ளும் ஓஷதிகளுள்ளும், இவ்விதப் போராட்டம் இருக்கிறதென்று உயிர்நூலோர் பரிசோதித்தறிந்திருக்கின்றனர்,

தெருக்களில் திரியும் நாய்கள் ஆகாரத்திற்குப் படும் கஷ்டம் யாவர்க்கும் தெரிந்ததே: ஒரு வீட்டிலிருந்து ஒரு ஸ்திரீ எச்சில் இலையை வெளியே போட்டவுடன், அதற்காக நாலு நாய்கள் ஓடிவந்து ஒன்றன்மேலொன்று பாய்ந்துசண்டை போடுவதையும், அச்சண்டையில் பலமுள்ள நாய்மற்றைய மெலிந்த நாய்களைத் துரத்திவிட்டு இலையிலுள்ளதைத்தின்று விட்டுப்போவதையும் பார்த்திருப்போர்கள், அந்நாய்களுக்குள்ளிருக்கும் கஷ்டத்தை நன்கு உணரலாம். முன்பு கூறியதுபோல் இரட்டிப்பு உயிர்ப்பெருக்க முறைப்படி, இந்நாய்கள் ஒரு தடவையில் நாலு அல்லது ஐந்து குட்டிகள் போட்டுச் சந்ததி விருத்தியாகுந்தோறும் அவற்றுள் ஜீவனத்திற்கு இருக்கும் கஷ்டம் அதிகமே ஆகுமல்லவா? இம்மாதிரியாகச் சந்ததி விருத்தி யாகுந்தோறும் எல்லா நாய்களுக்கும் அவற்றின் சந்ததியாகிய நாய்க் குட்டிகளுக்கும் போதுமான ஆகாரம் சரியாகக் கிடைக்காமல், அனேகம் நாய்கள், ஆகாரமில்லாமல், பிணிக்குள்ளாகி மடிந்து போகின்றன. இவ்விதமாக ஜீவவர்க்கங்களுள் வாழ்நாள் கழிப்பதில் உண்டாகும் ச்சச்சரவைத்தான் "பிராணாதாரப் போராட்டம்" (Struggle for existence) என்று மேலே குறிப்பிட்டோம். இப்பிராணாதாரப் போராட்டத்தில் அனேகம் ஜீவராசிகள் மடிகின்றன; அதில் வெற்றி பெற்று வாழ்வதற்குத் தகுந்த விசேஷ குணங்கள் பொருந்திய ஜந்துக்கள் தாம் மடியாது தங்கி நிற்கின்றன.

மற்ற ஜந்துக்களின் வாழ்க்கையைச் சற்றுக் கவனித்தால், அவற்றிற்கும், நாய்களுக்குள் இருப்பதைப் போலவே, அனேக துன்பங்கள் உளவென்பது விளங்கும். ஆகார விஷயமாக ஒரே ஜாதி ஜந்துக்களுள் சண்டையிருப்பதுபோலவே பலவித ஜந்துக்களுள்ளும், அவற்றிற்குப் பொதுவாக இருக்கும் ஆகாரத்திற்காக, சண்டையிருப்பது சாதாரணமாகும். வயல்களில் பயிர்செய்து நாம் வீட்டிற்குக் கொண்டு போய்ச்சேர்க்கும் நெற்பயிர், வெட்டுக்கிளி எலி முதலான பிராணிகள் தின்ற மிகுதியேதானல்லவா? கிளிவெட்டினால் அதிக நஷ்டம் ஏற்பட்டு விளைவுகுன்றிப் பஞ்சம் நேரிட்டது என்று சில வேளைகளில் பயிர் செய்வோர் சொல்லக் கேட்டிருக்கலாம். இங்கு, நெல்லாகிய பொது உணவிற்காக, மனிதனுக்கும், எலி வெட்டுக்கிளி முதலான ஜந்துக்களுக்கும் சண்டையிருக்கிறதென்று சொல்லலாம்.

தவிர, தாழ்ந்த ஜந்துக்களில் அனேகம் ஒன்றையொன்று தின்று ஜீவிக்கின்றன. புலி சிங்கம் முதலான மிருகங்கள் மற்ற ஜந்துக்களைத் தின்பதும், கழுகு சிறு பக்ஷிகளைத் தின்பதும், பாம்புகள் தவளைகளைத் தின்பதும், தவளைகளும் பக்ஷிகளும் சிறு பூச்சிகளைத் தின்பதும், சிறு பூச்சிகள் செடிகளைத் தின்பதும் எல்லோரும் அறிந்த விஷயங்களே. இவ்விதமாகப் பிராணிகளுக்குள் ஒன்றற்கொன்று தீங்கிழைப்பதும், அதே சமயத்தில் தங்களுடைய பிராணனும் அபாயத்துக்குள்ளாக இருப்பதும் சகஜமாக இருக்கிறதென்று சொல்லலாம்.

ஜந்து வர்க்கத்தில் உள்ளதுபோலவே ஓஷதிவர்க்கத்திலும் எப்போதும் பிராணாதாரப்போராட்டம் இருந்துகொண்டே தான் இருக்கிறது என்று கண்டறிந்துளர். ஓஷதிகளுக்கு ஜந்துவர்க்கத்தினால் உண்டாகும் கெடுதல்கள் எல்லோரும் அறிந்தனவே. ஓஷதிகளுக்கு இவ்விதமாக உண்டாகும் ஆபத்தைத் தவிர, அவற்றினுள்ளேயே சண்டைகள் அனேகம் இருக்கின்றன. தோட்டத்தில் குடியானவன் களை பிடுங்குதலை நீங்கள் பார்த்திருக்கலாம். குடியானவன் விதைத்த விதைகளிலிருந்து வளர்ந்துள்ள செடிகளைத் தவிர முளைக்கும் இதர செடிகள் புல் பூண்டு முதலானவைகளைப் பிடுங்கி யெறியாவிட்டால், பூமியிலுள்ள சுவல்ப ஆகாரத்தை எல்லாச் செடிகளும் பங்கு போட்டுக்கொண்டு, போதுமான ஆகாரமின்றி வளர்ச்சி குன்றியிருக்குமல்லவா? இவ்விதமாகச் செடிகளுக்குள், பூமியிலுள்ள ஆகாரத்திற்காக ஒரு சண்டை நடக்கிறது. ஓரிடத்தில் பயிர்கள் அதிநெருக்கமாக வளர்ந்திருந்தால் அவற்றைப்பிரித்து வைப்பதற்குக் காரணம் இது தான்.

ஓஷதிகளுக்கு மேற்கூறிய இருவகைப் போராட்டங்களைத் தவிர, மற்றும் சில இடையூறுகள் உண்டு. செடிகளின் வாழ்க்கைக்குச் சூரிய வெளிச்சம் அதிக அவசியமாகும். ஒரு வேலியில் முளைத்திருக்கும் செடிகளைச் சற்றுக் கவனித்தால், அவற்றுள் ஒவ்வொன்றும் எப்படிச் சூரிய வெளிச்சத்தை நாடுகிறதென்பதையும், சூரிய வெளிச்சம் சரியாக எட்டாத காரணமாக அனேகம் ஓஷதிகள் வளர்ச்சி குன்றியிருப்பதையும் காணலாம். தவிர, மழையில்லாக் காரணமாகப் பயிர் காய்ந்துவிட்டதென்றும், அல்லது அதிக மழையினால் பயிருக்குச் சேதம் நேரிட்டதென்றும், அதிகப் பனியினால் உருளைக் கிழங்குச் செடிகளெல்லாம் பாழாய் விட்டனவென்றும் சொல்லுவதி

லிருந்து, ஓஷதிகளின் சரியான வாழ்க்கைக்குச் சீதோஷ்ண வருஷ ஸ்திதிகளும் சகாயம் செய்ய வேண்டுவததவசியம் என்று காண்கிறோம்.

மேலே படித்ததிலிருந்து ஜீவவர்க்கங்கள் சுகமாக வாழ்ந்து வருவதற்கு அனேக இடையூறுகள் இருக்கின்றனவென்றும், அவற்றிற்குக் காரணங்கள் இரட்டிப்பு உயிர்ப்பெருக்க முறையும் அதற்குச் சரியாக ஆகார விருத்தியில் பெருக்கமின்மையும் என்றும் கண்டோம். பூமியின் விஸ்தீரணம், அதன் விளையும் சக்தி, அதன் உணவுப் பொருள்களின் அளவு, அதில் உள்ள சுத்த ஆகாயம்—இவையெல்லாம் ஓரளவில் அடங்கியுள்ளனவாக இருக்கின்றன. இரட்டிப்பு உயிர்ப்பெருக்க முறைப்படி ஜீவவர்க்கங்கள் விருத்தியாகுந்தோறும் அவற்றிற்கெல்லாம் இவ்வுலகில் இருப்பிடம் இல்லாது, தகுந்த ஆகாரம் போதாது, சுகவாழ்விற்கு இடையூறுகள் நேரிடுகின்றன. இம்மாதிரியாக, ஜீவவர்க்கங்கள் இவ்விடையூறுகளுடன் செய்யும் சண்டையைத்தான் பிராணாதாரப் போராட்டம் என்று சொன்னோம். பிராணாதாரப் போராட்டம் என்று சொல்லும்போது, ஜந்துக்கள் மரணத்தினின்று தப்பி உயிர் பிழைப்பதற்குள்ள பிரயத்தனம் என்பது மாத்திரமல்ல கருத்து; உயிருடன் வாழ்வதுடன் ஒவ்வொரு ஜந்து வர்க்கமும் தம்மினம் அற்றுப்போகாமல் சந்ததி விருத்தி செய்ய இருக்கும் ஏற்பாடும் இதில் அடங்கியுள்ளது இப்பிராணாதாரப் போராட்டத்தின் வேகம் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு விதமாகவும், அதன் கொடுமை சமயத்திற்குத் தகுந்தபடியும், சிறிதேனும் தயவு, ஈவு, இரக்கம் முதலானவை இல்லாமலுமே நடக்கிறதென்று சொல்லலாம். டார்வின் என்பவர் பரிசோதனைக்காக மூன்று அடி நீளமும் இரண்டு அடி அகலமும் உள்ள பூமியை நன்றாக உழுது, அதில் தாமாகவே முளைத்து வந்த செடிகளையெல்லாம் பரீக்ஷித்ததில், 357 செடிகள் முளைத்தனவென்றும், அவற்றுள் 295 செடிகள் நத்தைகளாலும் மற்றப் பூச்சிகளாலும் அழிக்கப்பட்டு நசித்தனவென்றும் கூறியிருப்பதிலிருந்து, பிராணாதாரப் போராட்டத்தின் கொடுமை இவ்வளவென்று தெரிந்து கொள்ளலாம்.

இப்பிராணாதாரப்போராட்டம் இல்லாத இடம் இவ்வுலகில் இல்லை. மனித சஞ்சாரமில்லாத காடுகளுக்குச் சென்று அங்குள்ள இயற்கையழகையும், பக்ஷிகளின் கானத்தையும், மான்களின் விளையாட்டையும் பார்க்கும் ஒருவன், மனித சஞ்சாரமுள்ள இடங்களில்

உள்ளனபோல் சண்டை சச்சரவு கலகம் கொலை முதலான தீச்செயல்கள் அங்கு இல்லையென்றும், எப்போதும் சமாதானமே அங்கு வியாபித்திருக்கிறதென்றும் நினைக்கக்கூடும். ஆனால் சற்றுக் கவனித்து பார்த்தால், "அங்கு பார்க்கக்கூடிய ஒவ்வொரு பரிசுத்த ஜீவாலயத்திலும் கொலை பாதகத்தனமான போராட்டத்தின் அடையாளங்களாகிய இரத்தம் சிந்திய பாதவடிகளைக் காணலாம்" என்று ஒருவர் கூறுகிறார். இப்பிராணாதாரப் போராட்டம் இயற்கையில் எங்கும் உளது; இஃது இல்லாவிட்டால் மனிதன் இவ்வுலகில் தோன்றியிருக்க மாட்டான். இப்பிராணாதாரப் போராட்டமே வெவ்வேறு ஜீவவர்க்கங்கள் இவ்வுலகில் உற்பவித்ததற்குக் காரணமாகும். இதன் கொடுமை சாதாரணமாக இளமைப் பருவத்தில் அதிகமாக இருக்கும்; மனிதவர்க்கத்தில், குழந்தைப் பருவத்தில் அதிகமாக மரணங்கள் இருப்பதும், தாழ்ந்த ஜந்துக்கள் இடும் முட்டைகளுள், அனேகம் சேதமடைந்து, அம்முட்டைகளினின்று வரும் குஞ்சுகள் அனேகமாய் இளமையிலேயே மடிவதும்; ஒஷதிகளுள், வித்துக்களிலிருந்து முளை கிளம்பி வளர்ந்து வரும் செடிகள் இளமையிலே பிழைப்பது கஷ்டமாகவிருப்பதும், தெரிந்த விஷயங்களேயாகும்.

இப்போராட்டத்தின் பலனாகச் சில வேளைகளில் ஜீவவர்க்கங்களுள் எதிர்பாராத அனேக மாறுபாடுகள் உண்டாவதாகப் பரிசோதித்தறிந்துளர். பிராணாதாரப் போராட்டத்துக்குட்பட்ட ஜீவவர்க்கங்களுக்குள் இருக்கும் பாந்தவ்யம் எவ்வளவு சிக்கலாகவும் எதிர்பாராத விதமாகவும் இருக்கின்றதென்று டார்வின் என்பவர் ஒரே பிரதேசத்திலிருந்து எடுத்துக்கூறிய சில உதாரணங்களினால் தெரிந்து கொள்ளலாம்:—

இங்கிலாந்தில் ஸ்டாப்போர்ட்ஷைர் (Staffordshire) என்ற ஜில்லாவில் 'ஹீத்'(heath) என்ற பூண்டுகள் முளைத்த விஸ்தாரமான பாழ்பூமி ஒன்று இருந்தது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் அதுபோன்ற அநேக ஏகரா விஸ்தீரணமுள்ள வேறொரு பாழ்பூமியில் 'பர்'(fur) என்று சொல்லும் ஒருவிதச் செடியைப் பயிர் செய்து வேலிகட்டி வந்தனர். இம்மாதிரியான 'பர்' செடியைப் பயிர் செய்ததனால் உள்ளூரில் பயிர் செய்த 'ஹீத்' செடியினும், மற்றும், உண்டான வேற்றுமைகள் அதிக ஆச்சரியமாக விருந்தன. அப்பூமியில் முன்னிராத பன்னிரண்டு ஜாதிப் புதிய செடி

கள் முளைத்திருந்தனவாம்; தவிர, அனேக விதமான புதிய பூச்சிகள் (Insects) தோன்றின; இவற்றுடன், இப் பூச்சிகளைத் தின்று ஜீவிக்கும் ஆறு விதமான புதிய பக்ஷிகளும் அங்குத் தோன்றின. ஒரு விதமான புதிய செடியை ஓரிடத்தில் பயிர்செய்த காரணமாக எவ்வளவு மாற்றங்கள் தோன்றினவென்று இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இத்துடன், 'பர்' செடியின் விருத்தி எவ்வளவு தூரம் ஆடுமாடுகளின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருக்கிறதென்று பரிசோதித்தார். வேலி யில்லாத பூமியிலுள்ள 'பர்' செடிகள் தலை கிளம்புந்தோறும் அவற்றை ஆடுமாடுகள் அழிப்பனவாகவும் கண்டார்; ஆடுமாடுகளின் விருத்தி எவ்வளவு தூரம் பூச்சிகளின் விருத்தியை அனுசரித்திருக்கிறதென்றும் பரிசோதித்தார். இங்கு ஆடுமாடுகள் எவ்விதத்தில்'பர்' செடியைத் தடுத்து வந்தனவென்பதும், 'பர்' செடியை நாடி அது காரணமாக அநேக பூச்சிகள் வந்ததும், அப்பூச்சிகளை நாடிக்கொண்டு பக்ஷிகள் வந்ததும், இன்னும் புதிய செடிகள் தோன்றியதும் ஐந்து வர்க்கங்களுக்குள் உள்ள பாந்தவ்யச் சிக்கலைக் காட்டுகின்றன.

ஓஷதி வர்க்கங்களில் சிற்சில புஷ்பங்களின் மகரந்த ஸ்பர்சம் (Pollination) சிற்சில பூச்சிகளினாலே தான் ஆகும் என்பது தெரிந்த விஷயம். வையோளா என்று சொல்லும் ஒருவித புஷ்பமானது தேனீயினால் மகரந்த ஸ்பர்சம் ஆவதாகவும், மற்றப் பூச்சிகள் அப்புஷ்பத்தினிடம் செல்லுவதில்லையென்றும் கண்டறிந்துளர். இதிலிருந்து தேனீக்கள் இல்லாவிடின் அப்புஷ்பங்களுக்கு மகரந்த ஸ்பர்சமின்றி அது காரணமாகக்கனியும் வித்தும் உண்டாக இடமில்லாமல் போகுமென்று சொல்லலாமல்லவா? இது நிற்க: தேனீக்களின் கூண்டுகளை எலிகள் அழிப்பனவாகவும், இங்கிலாந்தில் நூற்றுக்கு அறுபது வீதம் தேனீக்கள் எலிகளால் அழிக்கப் படுகின்றனவென்றும் கர்னல் நியூமன் என்பவர் கூறுகிறார். எலிகளின் தொகையானது அவற்றின் பகைவர்களாகிய பூனைகளால் நியமிக்கப்படுகின்றனவென்று ஒரு விதமாகச் சொல்லலாமல்லவா? அதிகமாக விவரிக்காமல், பூனைக்கும் ஓர் ஊரிலுள்ள செடியில் கனியுண்டாவதற்கும் சம்பந்தம் இருக்கிறதென்று சொல்வது முதலில் நகைப்பிற்கிடமாகவிருந்தாலும், அஃது உண்மைதானுவென்று இதைப் படிப்போர் ஆலோசித்தறியலாம். இதிலிருந்து பிராணுதாரப் போராட்டத்தின் வரம்பு எவ்வளவு தூரம் எட்டுகிறதென்று இதைப்படிப்போர் தெரிந்து கொள்ளலாம்.

இதுவரையில் (1) இவ்வுலகின்கண் இரட்டிப்பு உயிர்ப் பெருக்க

முறைப்படி ஜீவவர்க்கங்கள் அதிவிரைவில் விருத்தியாகின்றனவென்றும் (2) பூமியின் விஸ்தீரணம், விளையும் சக்தி, அதன் உணவுப் பொருள்களின் அளவு, அதிலுள்ள சுத்த ஆகாயம் முதலானவை ஒரே அளவினவாக இருக்கின்றனவென்றும் (3) விருத்தியாகும் ஜீவ வர்க்கங்களுள் உணவிற்காகவும், வாசஸ்தலத்திற்காகவும், சுகஜீவனத்திற்காகவும் போராட்டம் இருக்கிறதென்றும் (4) இப்பிராணாதாரப் போராட்டம் (a) ஒரே ஜாதி ஜந்துக்களுள்ளோ (அல்லது செடிகளுள்ளோ) அல்லது (b) வெவ்வேறு ஜாதி ஜந்துக்களுள்ளோ (அல்லது செடிகளுள்ளோ) அல்லது (c) ஜந்துக்களுக்கும் (அல்லது ஓஷதிகளுக்கும்) சீதோஷ்ண ஸ்திதி முதலான சுற்றுவட்ட நிலைமைகளுக்குமோ இருக்கலாமென்றும் கண்டோம்.

இப்பிராணாதாரப் போராட்டத்தில் எவ்வெஜ்ஜந்துக்கள் முன்னுக்கு வருகின்றன? மாம்சபக்ஷணிகளாகிய புலி சிங்கம் முதலான விலங்குகளுள் சூக்ஷ்மமான பார்வையுடையனவும், நன்றாகப் பாய்ந்து ஜந்துக்களை எதிர்க்கக் கூடியனவுந்தாமல்லவா ஆகாரத்தை அடைந்து ஜீவிக்கும்? பஞ்சகாலங்களில் பசி பிணிமுதலானவற்றைப்பொறுத்துச் சகிக்கக்கூடியனவும்,ஓரிடம் விட்டு மற்றோரிடம் சென்று ஆகாரத்தைச் சம்பாதிக்க க்கூடியனவுந்தாமல்லவா பிழைத்து நிற்கும்? குளிர், மழை, பனி முதலானவற்றைத் தாங்கக்கூடிய ஜந்துக்கள் அவ்விதம் தாங்க முடியாதனவற்றைக் காட்டிலும் போராட்டத்தில் தங்கி நிற்குமென்றும், வியாதிக் காலங்களில் அரோக திடகாத்திரமுள்ளவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் சுகமாக இருப்பார்களென்றும், சொல்லலாமல்லவா? இம்மாதிரியாகவே, ஓஷதிவர்க்கத்தில், பூச்சிகளால் மகரந்த ஸ்பர்சமாகும் செடிகளுள் அழகான நிறங்கள் பொருந்தினவும் அதிகத் தேன் அடங்கியுள்ளனவுமான புஷ்பங்கள்தாம் கனிகளாக மாறி, சந்ததி விருத்திக்கு ஏற்பாடு அதிகமாக அடையுமென்றும் கூறலாம்; முட்களுள்ள செடிகள் ஆடுமாடுகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளுமென்றும், அவ்வித இரக்ஷிப்புக்கு ஏற்பாடில்லாத மற்றச் செடிகள் நசித்துபோகக் கூடுமென்றும் சொல்லலாமல்லவா? இவ்விதமாக, இப்பிராணாதாரப் போராட்டத்தில் வாழ்க்கை நியமங்களுக்குத் தகுந்த சில விசேஷ குணங்களையுடையனவே தங்கி நிற்கின்றன; மற்றவை இயற்கை இணக்க முறைப்படி மடிகின்றன; இதையே, "தகுந்தவை தங்கி நிற்றல்" (Survival of the fittest) என்று சொல்வோம்.

(இன்னும் வரும்.)

மாடுகளை விருத்தியாக்கி வளர்த்தல்.

[ம-ா-ா-ஸ்ரீ, வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்
G. B. V. C. எழுதியது.]

(138-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

மேற்குறித்த சில சுலபமான அம்சங்கள் கவனித்துப் பின்பற்றப்பட்டால், கால்நடைகள் செழிப்பாக வளரும். மிகவும் அபூர்வமாகத்தான் வியாதிக்குள்ளாகும். ஆயினும், தொற்று வியாதிகள் சம்பந்தப்பட்டமட்டில், கால்நடைகள் எவ்வளவு சரீர சுகமுடையவைகளாயும் பலமுடையவைகளாயுமிருந்தாலும், தொற்றுக்குட்பட்டபோது, அவ்வியாதிகளை அடையக்கூடியவைகளா யிருக்கின்றன. இது, சுசமும் பலமுமுள்ள மனிதர்கள் வாந்திபேதி முதலிய தொற்று வியாதிகளை அடைவதுபோலும். நன்றாய்ப் பராமரிக்கப்பெற்ற பிராணிகள், அவைகளுடைய தேக தைரியத்தினால், மேற்கண்ட வியாதிகள் நேர்ந்தபோது, கேவலமாகப் பாதுகாக்கப்பட்ட பிராணிகள் அவ்வியாதிகளைத் தாங்குவதைக் காட்டிலும் அதிகமாகத் தாங்கக் கூடும். தொற்று வியாதிகள் அணுகாமலிருப்பதற்கு *"இந்தியாவில் கால் நடைகளுக்குக் காணுகிற அதிகப்பிராணாபாயமான வியாதிகளைப்பற்றிய புஸ்தகம்" 1-ம் அத்தியாயத்திற் குறித்திருக்கிற விதிகளை அனுசரிக்கவேண்டும். மேற்படி புஸ்தகத்தில் தொற்று வியாதிகளே யன்றிக் கால் நடைகளுக்குச் சாதாரணமாக உண்டாகும் அநேக வியாதிகளைத் தடுக்கும் முறைகளும் சிகிச்சைகளும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கிராமத்தில் கால் நடைகளுக்கு வெக்கை என்ற வெதுப்பு, அடைப்பான், சப்பை நோய், கோமாரி என்ற கால்நோய் வாய்நோய் போன்ற பெருவாரித் தொற்று நோய் ஏதாவது வந்தால், உடனே மேற்கூறிய புஸ்தகத்தின் 1-ம் அத்தியாய விதிகளை அநுசரிப்பதேயல்லாமல், அந்த வியாதியைத் தடுப்பதற்கும் அதைக்குணப்படுத்த வேண்டிய சிகிச்சை செய்வதற்கும் ஒரு வெட்டெறிநெறி அஸிஸ்டெண்டை அனுப்பவேண்டுமென்று தாசில்தாருக்கு தெரிவிக்கும்படி, கிராம முன்சீபைக் கேட்டுக்கொள்ள வேண்டும். வெட்டெறிநெறி

* இதன் விலை மூன்று அணா. இது இங்கிலீஷிலிருந்து என்னால் மொழி பெயர்க்கப்பட்டுக் கவர்ன்மெண்டாரால் பிரசுரம் செய்யப்பட்டுத் தமிழ் ஜில்லாக்களில் உள்ள ஒவ்வொரு கிராம முன்சீபுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் சென்னப்பட்டினம் கவர்ன்மெண்டு அச்சுக்கூடத்துச் சூப்பிரின்டெண்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

அஸிஸ்டண்டு வரத்தாமதப் பட்டால், சென்னபட்டணம் 'வெட்டெறிநெறி சூப்பிரிண்டண்டு'க்கு எழுதவோ தந்தி கொடுக்கவோ செய்யலாம்.

சாதாரணமாகப் பிராணிகளைப் பராமரிப்பதற்கு மேற்கூறியவை முக்கிய மானவை. பின்வரும் குறிப்புக்கள் பிராணிகளை விருத்திபண்ணுவதைப் பற்றி யவைகள். நல்ல மாட்டு மந்தையை யுடையவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புவோர் பின்வரும் மூன்று முறைகளில் ஒன்றைக் கைப்பற்றலாம்.

I. கோயமுத்தூர் ஜில்லா திருப்பூர்க் கண்காட்சிக்கு வரும் காங்கேய மாடுகள், குண்டூர் ஜில்லா ஒங்கோல் கண்காட்சிக்கு வரும் நெல்லூர் மாடுகள் போன்ற பிரபலமான ஏதாவது ஒரு மாட்டு வர்க்கத்தில் சிறந்த பசுக்களையும் பொலி காளைகளையும் வாங்கி, ஒன்றுசேர்த்து மந்தையாக்கி விடுதல். இது உடனே பலிதமாகும் முறை.

II. யாதாயினும் ஒரு நல்ல மாட்டு வர்க்கத்தில் காளைக் கன்று கிடாரிக் கன்றுகளை வாங்கி வளர்த்தல். இதுI-ம் முறையினும் தாமதமானமுறை.

III-வது,மேற்கூறிய இருமுறைகளிலும் தாமதமானது; ஆயினும்,செலவு குறைவாயும் விவசாயிகளுக்கு மிகப்பெரும்பான்மை ஏற்றதாயும் உள்ளது. இந்த முறை, விவசாயிகள் தங்களிடத்துள்ள மாட்டு மந்தையை விருத்தி பண்ணுவதற்கு, அந்த மந்தையிலுள்ள காளைகளைப் பொலிஎருதுகளாக உபயோகியாமல், வேறு பொலிஎருது பெரிதும் நல்ல உருவ லக்ஷணமுமுடையதாகப் பார்த்து வாங்கி உபயோகிப்பது.

சேலம் ஜில்லா அநந்தபுரம் ஜில்லா முதலிய மைசூர் ராச்சியத்துப் பக்கத்து நாட்டு மாடுகளை விருத்தி செய்வதற்கு மைசூர்ஜாதிப் பொலிகாளைகளையும், நெல்லூர் குண்டூர் முதலிய ஒங்கோல் பக்கத்து நாட்டு மாடுகளை விருத்தி செய்வதற்கு ஒங்கோல்ஜாதிப் பொலிகாளைகளையும், தென்தமிழ் ஜில்லாக்களின் நாட்டு மாடுகளை விருத்தி செய்வதற்குக் காங்கேயம் ஜாதிப்பொலி காளைகளையும் உபயோகிக்கலாம்.

கால் நடைகளை விருத்தி பண்ண உத்தேசிக்கும் பிரதேசத்துக் கால் நடைகளிலேயே சிறந்த தேக லக்ஷணமும் பெருத்த காத்திரமு முள்ளவைகளைத் தெரிந்தெடுத்து, அவைகளில் மிகச்சிறந்த பசுக்களை மிகச் சிறந்த காளைகள் சேரவிடுவதினாலும், செழிப்பாகத் தீவனம் கொடுப்பதினாலும் அவைகளிலிருந்து உற்பத்தியாகும் மாடுகள் பருமையிலும் உருவ லக்ஷணத்திலும் சிறந்தவைகளாக விருத்தி பண்ணலாம். இப்படித்தான் ஆதியில் நல்ல ஜாதி மாடுகளை உண்டு பண்ணியவர்கள் செய்திருப்பார்களென்று தோன்றுகிறது.

ஒரு விவசாயி தன்னிடத்துள்ள மாட்டுமந்தையைப் பெருத்த காத்திரமும் உறுதியான உறுப்புக்களும் லக்ஷணமும் உடையதாக விருத்தி பண்ணுவதற்கு, மேலேசொல்லியபடி, அதற்கேற்ற ஜாதி மாடுகளிற் சிறந்த பொலிகாளை ஒன்றைவாங்கி, அதைத்தன் பசுக்களோடு சேரவிட்டு, வேறுகாளைகள் அணுக வொட்டாமல் ஏற்பாடு செய்து, காளையையும் பசுக்களையும் கன்றுகளையும்

நன்றாகப் போஷிக்கவேண்டும். பொலிகாளைகள் மூன்று வயசுக்குக் குறையாமல் பத்து வயசுக்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும்.

முதல் வாங்கிய காளை பத்து வயசுக்கு அதிகப்படுமுன் அதைமாற்றி, அது போன்ற அதே ஜாதிப் பொலிகாளையை வாங்கி உபயோகிக்கவேண்டும். இவ்வாறாக மூன்று அல்லது நான்கு காளைகளை வாங்கி உபயோகித்தால், அப்படி உபயோகிக்கப்பட்ட மந்தையிலுள்ள மாடுகளெல்லாம் ஒரே மாதிரியான உருவ அமைப்பும் பருமையும் பலமும் உடையவைகளாகும். அப்படியான பின், அந்த மந்தையிலேயே சிறந்த பொலி காளைகளைத் தெரிந்தெடுத்து உபயோகித்து வரலாம். ஆயினும், மந்தையின் சிலாக்கியத்தைக் குறையாமல் அதிகப்படுத்துவதற்காகவும், நெருங்கிய இரத்த சம்பந்தமுடைய ஆண் பெண்கள் கலத்தலாகிய உள்ளுக்குள் சம்பந்த (In and in breeding)த்தினால் விளையும் கெடுதிகள் நேராமல் விலக்குவதற்காகவும், ஊடே ஊடே தக்க புதுப் பொலிகாளை வாங்கி மந்தையில் விடுவது நல்லது. பொலிகாளை சரியான தேக நிலைமையோடு இருக்கும்படி பார்த்துவரவேண்டும். அதை மெலிய விடவும் கூடாது; கொழுப்படைய விடவுங் கூடாது. அதை நிதானமாக வேலை செய்விக்கலாம். அப்படிப்பட்ட வேலை அதனுடைய கன்றுகள் உண்டாக்கும் சக்தியை அதிகப்படுத்துகிறது; ஆயினும், அதைக்களைக்கும்படியான அவ்வளவு வேலை செய்விக்கக் கூடாது. ஒரு பொலி எருது அறுபது பசுக்களுக்குப் போதும்.

மேற்கூறிய மூன்று முறைகளில் எதிலாயினும் கால்நடைகளை விருத்தி பண்ணுவதற்கு, அப்படி விருத்திபண்ண உத்தேசிக்கிற பிரதேசத்திற்கு மாறுபட்ட நிலம் சீதோஷ்ண நிலை முதலியவைகள் உள்ள பிரதேசத்து மாடுகளை வாங்கக்கூடாது.

முதல் இரண்டு முறைகளுக்கும் விவசாயிகளிடம் இயல்பாக இருக்கிற மாடுகளின் விருத்திக்கும் சம்பந்தமில்லை; மூன்றாவது முறைதான் இந்த மாடுகளை விருத்தி பண்ணுவதற்கேற்றது. இந்த முறையைப் பற்றி விவரிக்குமுன், தென்னிந்தியக் கால் நடைகளின் தற்கால நிலைமையையும், கால் நடைகளை விருத்தி செய்து வளர்க்கும் விஷயமாக விவசாயிகளுக்குள்ள அறிவையும் பற்றிச் சொல்வது உசிதமாகத் தோன்றுகிறது.

தென்னிந்தியாவிலுள்ள மாடுகளெல்லாவற்றையும் பெரிய தரத்து மாடுகள் சிறிய தரத்து மாடுகள் என்று இரண்டு பிரிவாகப்பிரிக்கலாம்.

பெரிய தரத்து மாடுகள் எல்லாருக்கும் தெரிந்த பிரபலமான ஜாதிமாடுகளாயும், உருவத்தில் பெரியவைகளாயும், எண்ணில்குறைந்தவைகளாயும், நல்ல லக்ஷணமுள்ளவைகளாயும், அந்தந்த ஜாதிக்குரிய உறுப்பிலக்கணம்நிறம் சாயல் முதலியவைகளில் ஒற்றுமையுடையவைகளாயும், மிகுந்த வலியுடையவைகளாயும் இருக்கின்றன. இந்தப் பெருந்தர மாடுகள் அவை அவை உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களிலும், பல ஜில்லாக்களிலும் உள்ள தனவந்தர்களிடத்திலும்

காணப்படுகின்றன. அவைகள் பார வண்டி மாடுகளாகவும் சவாரி வண்டி மாடுகளாகவும் உபயோகிக்கப்படுகின்றன; கரிசல் நிலங்கள் (Black Cotton soil) தவிர மற்ற நிலங்களில் மிக அபூர்வமாகத்தான் உழவு மாடுகளாக உபயோகிக்கப்படுகின்றன; வருஷம் ஒரு முறை கூடும் பெரிய மாட்டுச்சந்தைகளில் ஏராளமாகவும், வாரச் சந்தைகளில் மிக அபூர்வமாகவும் விற்பதற்காகக் கொண்டுவரப்படுகின்றன.

சிறியதர மாடுகள் சாதாரணமாகக் கிராமங்களில் காணப்படுகிற நாட்டு மாடு அல்லது உள்நாட்டு மாடு என்று சொல்லப்படுகிறவைகளே. இவைகள் உருவிற் சிறியவைகளாயும் இறுகிய தேகக் கட்டுடையவைகளாயும் இருக்கின்றன. இவைகள் நல்ல ஜாதி மாடுகள் உற்பத்தி செய்யப்படும் இடங்கள் உள்பட எல்லா இடங்களிலும் திரளாகக்காணப்படுகின்றன. இவைகளே விவசாயிகளின் மாடுகளில் பெரும்பான்மையானவையாயும், வாரச்சந்தைகளே யல்லாமல் வருஷச் சந்தைகளிலும் பெருத்த கூட்டங்களாக விலைக்குக் கொண்டுவரப் படுபவைகளாயும் இருக்கின்றன.

முதல் வகுப்பாகிய பெருந்தர மாடுகளில் முக்கியமான ஜாதிமாடுகள், மைசூர் அல்லது ஆலம்பாடி, நெல்லூர் அல்லது ஒங்கோல், கொங்கு அல்லது காங்கேயம் என்ற வகுப்பு மாடுகள்.

இரண்டாம் வகுப்பாகிய சிறுதரமாடுகள் பரிமாணத்தில் சிறியவைகளாயிருந்தாலும், அவைகள் உள்ள பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் முதல் வகுப்பைச் சேர்ந்த பெருந்தரமான சாதிமாடுகளின் உருவ லக்ஷணங்களை உடையவைகளாயிருக்கின்றன. உதாரணமாக, மைசூர் ஜாதி மாடுகள் உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்குப் பக்கங்களில் உள்ள சிறுதர மாடுகள் அந்த ஜாதி மாட்டை உருவலக்ஷணத்தில் ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. இப்படியே நெல்லூர் காங்கேயத்துப் பக்கங்களிலுள்ள சிறுதர மாடுகள் அந்தப் பக்கத்து ஜாதி மாடுகளை ஒத்திருக்கின்றன. சிறுதரமாடுகள், ஜாதி மாடுகள் உற்பத்தி செய்யப்படும் இடங்களிலிருந்து எவ்வளவு எவ்வளவு தூரத்திற்கப்பால் காணப்படுகின்றனவோ அவ்வளவு அவ்வளவு அந்த ஜாதி மாடுகளினின்றும் உருவலக்ஷண ஒற்றுமை குறைகின்றது. ஜாதி மாடுகள் விருத்தி செய்யப்படு மிடங்களிலிருந்து வெகு தூரத்தில் உள்ள மாடுகள் உருவ லக்ஷணமே யின்னதென்று வரையறுக்கக் கூடாதவைகளாயிருக்கின்றன. இப்படி யிருப்பதனால் தான் ஆதியில் நல்ல ஜாதி மாட்டு வர்க்கங்களை உண்டு பண்ணினவர்கள் அந்த அந்தப் பிரதேசத்து மாடுகளில் உருவ லக்ஷணப் பெருங்காத்திரமுடைய காளைகள் கடாரிகளைத் தெரிந்தெடுத்து அவைகளை நன்றாகப் போஷித்தும், தங்கள் பசுக்களை வேறு கேவலமான காளைகள் சேரவொட்டாமற் செய்தும் இருப்பார்களென்று தோன்றுவதாக முன்னே சொன்னேன்.

(இன்னும் வரும்)

வானசாஸ்திரம்.

(சரித்திர வரலாறு)

[ம-ா-ஸ்ரீ P. N. அப்புஸ்வாமி ஐயர் B. A; B. L; எழுதியது.]

ஈசுவர சிருஷ்டிக்குள்ளடங்கிய வஸ்துக்கள் யாவற்றிலும் பெரியனவாய், தங்கள் அளவின் பெருமையால் மனிதனுடைய மனத்தைக் கவர்ந்து பிரமிக்கச் செய்வனவாய், பகலிலும் இரவிலும் ஒளியையும் அழகையும் கொடுப்பனவாய், எண்ணிறந்தனவாய், எல்லையற்றனவாய், எக்காலத்தும் ஓய்வின்றிச் சஞ்சரிக்கின்றனவாயுள்ள சூரியன், சந்திரன், கிரகங்கள், நக்ஷத்திரங்கள், உற்கைகள் (meteors) தூமகேதுக்கள் (comets), முதலியவற்றைப்பற்றிக்கூறும் சாஸ்திரமே வானசாஸ்திரம் எனப்படுவது.

இந்தச் சாஸ்திரம், அவ்வஸ்துக்களைப் பற்றிக்கூறுங்கால், அவற்றின் பிறப்பு, பொது அமைப்பு, தற்கால ஸ்திதி, லயம் என்னும் விசேஷ விஷயங்களைக் கூறுமேயல்லாது, அவற்றின்கணுள்ள பகுதிப் பொருள்களைப்பற்றிக் கூறுவதில்லை. இதர சாஸ்திரங்களோ, பெரும்பாலும் சிறிய வஸ்துக்களைப்பற்றியே கூறுவன. ஏனெனில், அவைகள் எல்லாம் பூமியில் அடங்கியிருக்கும் பொருள்களையே விஷயமாய்க் கொண்டுள்ளன. உதாரணமாக: இரஸாயன சாஸ்திரம் (Chemistry) பூமியிலிருக்கும் மூலவஸ்துக்களையும் (elements), அவற்றின் பரஸ்பர சம்பந்தங்களையும் பற்றிக் கூறும்; பூதத்துவ சாஸ்திரம் (Geology) பூமி பிறந்ததன் பின் அடைந்துள்ள மாறுபாடுகளையும், அவற்றின் காலத்தையும், காரணங்களையும் ஆராயும்; பூகோள சாஸ்திரம் (Geography) பூமியின் வடிவத்தையும், அதிலுள்ள பிரதேசங்களையும் வருணிக்கும்; பிராணி சாஸ்திரம் (Zoology) பூமியிலுள்ள ஜந்துக்களைப்பற்றியும், ஓஷதி சாஸ்திரம் (Botany) புல் பூண்டு மரங்களைப் பற்றியும் அறிய முயலும்; சரித்திர சாஸ்திரம் (History) மனித வருக்கத்தாரின் சரித்திரத்தை அறிந்தவரையில் விஸ்தரிக்கும். இவ்வாறு மற்றச் சாஸ்திரங்களெல்லாம் பூமியைப் பெரிதாகக் கருதி, அதனுள்ளடங்கிய வஸ்துக்களையே கத்

தம் விசாரணைக்குரிய விஷயங்களாக எடுத்துப் பாராட்டுகின்றன. இவ்வஸ்துக்களைக் காட்டிலும் பூமி எவ்வளவோ பெரிதாயிருப்பினும், சூரியனைச் சுற்றியோடும் ஒரு சிறிய கிரகமே அது. நாம் வசிக்கும் பூமியைக் காட்டிலும் பதின் மூன்று லக்ஷம் மடங்கு பெரிதான சூரியனே, ஆகாயத்தில் சிதறிக் கிடக்கும் நக்ஷத்திரங்களுள் ஒரு சிறிய நக்ஷத்திரம் தான்; ஆகவே, பிரபஞ்சத்தின் மகிமையை அறிய முயலும் வான சாஸ்திரத்தின் மேம்பாட்டை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

ஆராய்ச்சியின் மேன்மையால் மட்டுமன்றி, காலத்தின் பழமையாலும், வானசாஸ்திரமே மற்றெல்லாச் சாஸ்திரங்களிலும் முதன்மைப் பட்டதென்பதனாலும் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஏனெனில், ஒருவன் ஏதாவது ஒரு பொருளைப் பரிசோதிக்கும் போது, கண்ணுக் கெதிர்ப்பட்டு மனத்தைக் கவரும் விஷயங்களையே முதலாவது கவனித்து, பின்னரே, சிறிய, நுண்ணிய விஷயங்களைக் கவனிப்பான். அவ்வாறே, இப் பிரபஞ்சத்தில் நமது கண்ணுக்குப் புலப்படும் வஸ்துக்களுள் எல்லாம் ஜாஜ்வல்லியமாய் கண்ணைப் பறிக்கும் காந்தியோடு கூடி, உலகெங்கும் ஒளி நிரப்பும் சூரியனையும்; எல்லாத் தேசத்தாராலும், எல்லாப் பாஷைபாராலும் எல்லாக் காலங்களிலும் அழகுக்கு உவமையாகக் கொண்டாடப்படும் சந்திரனையும்; ஆகாய முழுவதும் பிரகாசமாகவும், மங்கலாகவும், தனித்தனியாகவும், கூட்டம் கூட்டமாகவும் சிதறிக் கிடக்கும் எண்ணிறந்த நக்ஷத்திரங்களையு மல்லாமல், முதலாக நமது மனத்தைக் கவரக் கூடியவை வேறு யாவை?

இதர பதார்த்த விஞ்ஞான சாஸ்திரங்களுக்கும் (Physical sciences) வானசாஸ்திரத்துக்கும் மற்றொரு பேதமும் உண்டு: அஃதாவது, மற்றச்சாஸ்திரங்களெல்லாம்நாம்தொட்டு அறியக்கூடிய பொருள்களைப் பற்றியே ஆராய்வன; வான சாஸ்திரமோ, கண்ணுக் கெட்டாமல், மனத்தாலும் கிரகிக்க இயலாத தூரங்களுக் கப்பாலுள்ள வஸ்துக்களை ஆராய்கின்றது. அவ்வஸ்துக்களை நாம் தொட முடியாது; அவற்றின் பிரவர்த்திகளில் பிரவேசித்துத் தடை செய்ய முடியாது; அவைகளை நம்முடைய சோதனைச் சாலைகளில் (Laboratories) கொண்டு சேர்த்துத் திராவகமுதலியவற்றால் பரீக்ஷைசெய்ய முடியாது; பல் வேறு பாகங்களாக அவற்றைச் சேதித்து, சூக்ஷும

திருஷ்டிக் கண்ணாடியால் (Microscope) அப்பாகங்களைப் பரி சோதிக்கவும் முடியாது. ஆயினும், நம்மால் செய்யக்கூடிய தொன்றுளது: அவ்வஸ்துக்களின் சலனங்களை நன்கு கவனித்து, அதனால் நமது அறிவைப் பெருக்கிக் கொள்ளலாகும். அவற்றை அவ்வாறு ஆராயுங்கால், இப்பூமியில் நாம் அடைபட்டிருப்பதையும், அவை அவ்வளவு தூரங்களுக் கப்பாலிருப்பதையும்; நம்முடைய ஜீவ காலம் நீரிற்குமிழியளவு குறிய தென்பதையும், அவை கல்பங்களாக நிலை நிற்பனவென்பதையும், நாம் நினைப்போமாகில், அவற்றைப் பற்றிய விஷயங்களின் ஆராய்ச்சி நமது புத்திக்கெட்டாத அளவு அசாத்தியமானதென்று நமக்குத் தோற்றலாம்.

ஆகவே, "பண்டைக்காலத்தில் மனிதன் வானத்திலிருக்கும் சோதிகளைப்பற்றி நினைந்தனவெல்லாம் சரியல்ல" என்பது,ஓர் இழுக்காகாது. தானே ஈசுவர சிருஷ்டியில் யாவற்றினும் மேலென்றும், மற்றவையாவும் தனக்கு உபகரணங்களாகவே சருவ காருண்ணியமுள்ள சகதீசனால் உண்டாக்கப்பட்டவை யென்றும் மனிதன் ஆதியில் நம்பியிருந்தான்; ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளையும், நிலத்தில் வாழும் மிருகங்களையும், புல் பூண்டுகளையும், நீருள் ஜீவிக்கும் மீன்களையும் அருளிய கடவுள், அவ்வாறே தனது உபயோகத்திற்கென்றே, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலியவற்றையும் சிருஷ்டித் தருளினரென்று அவரைத் துதி செய்து கொண்டாடினன். [நக்ஷத்திரங்களை விண்மீன்களென்பது கவனிக்கத்தக்கது.] அக்காலத்தில், அவனுடைய சிற்றறிவால் அவற்றின் பெருமையைக் குறைத்தானெனினும், நாளுக்கு நாள் அவனுடைய அறிவு விருத்தியடையும்பொழுது,நக்ஷத்திரங்களின் உண்மையான மகிமை அவனுக்குப்புலப்படாமலிருக்கவில்லை. ஆகவே,அவை,அவன் எண்ணியிருந்த வண்ணம் அவனது உபயோகத்துக்காக உண்டாக்கப்பட்டன வல்ல என்பதை அவன் அறிந்த பொழுது, அதனால், கடவுளின் மகத்துவம் முன்னினும் அதிகப்பட்டதாகவே அவனுக்குத் தோற்றிற்று. ஏனெனில், நக்ஷத்திரங்களின் பெருமையைத் தெரிந்த பின்பு, பூமியின் சிறுமையையும், இச்சிறு பூமியிலுள்ள கோடானு கோடி உயிர்களுள் ஒன்றே யாகும் தன்னுடைய அற்பத்துவத்தையும் அவன் அறியாமலிருக்க முடியுமா? தன் சிறுமை புலப்பட்டதும், கடவுளின் பெருமை மனத்தாலும் சிந்திக்க இயலாத தன்மையது என்பதை அவன் நன்கு உணர்ந்தான்.

ஒரு காலத்தில், பிரமனும், விஷ்ணுவும், சிவபெருமானது உருவத்தின் பெருமையைக் கண்டு பிடிக்கத் தனித்தனியே முயன்றார்களென்றும்; அவ்விருவருள், பிரமதேவன், தனது வாகனமாகிய அன்னப் பறவையின் மேலேறி ஆகாய மார்க்கத்தில் அவ்வுருவம் எவ்வளவு தூரம் அளாவியதென் றறியுமாறு உயர உயரப் பறந்தும் அச்சொரூபத்தின் எல்லை அவனுக்குத் தெரியவில்லை யென்றும்; விஷ்ணு, ஒரு பெரிய பன்றியின் உருக்கொண்டு, நெருங்கிய பூதலத்தைத் துளைத்துத் துளைத்துச் சிவபெருமானது சரீரம் கீழ்ப் பக்கத்தில் எவ்வளவு தூரம் சென்றிருக்கிறதென்றறிய முயன்றும், அம் முயற்சி பயன்படவில்லை என்றும், ஒரு புராணக் கதை கூறும். அவ்வாறே, தற்காலத்திலும், பெரிது, மிகவும் பெரிது, அதனினும் பெரிது என்னும் அளவுள்ள சோதிகளையும் கோளங்களையுமுடைய பிரபஞ்சத்தை ஆராய்ந்தறியும் வான சாஸ்திரமும், சிறிது, மிகச் சிறிது, அதனினும் சிறிது என்னும் அளவற்ற மூல வஸ்துக்களையும் (elements) பரமாணுக்களையும் பரிசோதிக்கும் இரசாயன சாஸ்திரமும், பிரம விஷ்ணுக்களைப்போலத் தனித் தனியேயன்றி, ஒன்றோடொன்று கைகோத்து உழைத்தும், கடவுளின் பெருமையை இன்னும் ஒரு சிறிதேனும் அறிந்தபாடில்லையாயின், அவரது மகத்துவம் எத்தன்மையது!

கடவுளைப்பற்றிய விஷயங்களை அறிய முடியாவிடினும், அவரது சிருஷ்டிப் பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சி, பண்டைக்காலம் முதல், ஊக்கத்துடனும், கூரியபுத்தியுடனும், விடாமுயற்சியுடனும் நடத்தப் பட்டு வருகிறது. அவ்வாராய்ச்சியின் பயனாக, மனிதன் அறிந்திருக்கும் விஷயங்கள் பலவுள. அவற்றை வஸ்துக் கிரமமாகஒருவாறு ஒழுங்கு படுத்தித் தொகுக்கப்பட்ட அறிவே சாஸ்திரங்கள் எனப் படும்.

வான சாஸ்திர ஆராய்ச்சியில் நேரும் இடையூறுகளின் தன்மையை மனிதன் நன்கு உணர்ந்திருந்தும், அந்தச் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களை மற்றச் சாஸ்திர விஷயங்களைக் காட்டிலும் வியக்தமாகவும், ஐயத்திற் கிடமில்லாமலும் அறியப்பட்டவிஷயங்களென்று சொல்லக்கூடும் அளவு அவ்வாராய்ச்சியைக் கைவிடாமல்நடத்தியிருப்பது, மனிதனுடைய புத்தியின் கூர்மையையும், ஊக்கத்தையும்; விடா முயற்சியையும் நன்கு விளக்கும். அவ்வாறு வானசாஸ்திரப்பயிற்சியில்

மேம்பாடுற்றோர், பல காலங்களில் பலிருந்தன ரெனினும், அவர் எல்லோரையும் பற்றி நாம் இன்னும் அறிய முடியவில்லை. மிகப் பழமையான காலத்தில் ஆராய்ச்சி செய்தோர் இன்ன இனத்தார், அல்லது சாதியார், என்பது மட்டுமே நமக்குத் தெரிகிறது. பிற்காலங்களில் தாம், அவ்வினத்தாருள் ஒப்புயர்வற்ற அறிவுவாய்ந்தபெரியோர் சிலர் நமக்குத் தென்படுகின்றனர், இவ்வாறிருப்பது ஏனென்பது ஓர் உதாரணத்தால் எளிது விளங்கும்: உன்னதமான ஓரிடத்தில் நின்று கொண்டு, நாம் கடந்து சென்ற மார்க்கத்தைத் திரும்பிப் பார்த்தால், நாம் தாண்டிச் சென்ற ஒவ்வொரு வஸ்துவும் நமக்கு வெவ்வேறாகத் தெரிவதில்லை. அவ்வஸ்துக்களுள் பெரியனவே நமது கண்ணுக்குப் புலப்படுமென்று நினைத்து நோக்குகிறோமே யொழிய, சிறியன நமக்குத் தெரியுமென்று நாம் எண்ணுவதுமில்லை; பெரிதான வஸ்துக்களுள்ளும், வெகு தூரத்துக் கப்பாலுள்ளவை நமது கண்ணுக்குத் தோற்றுவதேயில்லை; சில பெரிய மரங்கள், தூரத்திலிருப்பதால், அடர்ந்த காட்டினுள் மறைந்து, அக்காட்டினின்றும் பகுத்தறிய முடியாமல், அஃதோடு லயித்துக் காண்கின்றன; அவ்வாறே, பெரும்பாறைகளும் மலைக்குள் மறைகின்றன; நமக்கு அருகிலிருக்கும் வஸ்துக்களே பெரியனவாயும், சிறியனவாயும், நாம் பகுத்தறிய இயலும் வண்ணம் வெவ்வேறாகப் புலப்படுகின்றன. இவ்வண்ணமே, இவ்விருபதாவது நூற்றாண்டிலிருக்கும் நாம், கடந்து வந்துள்ள பண்டைக்கால மென்னும் மார்க்கத்தைத் திரும்பி நோக்குங் கால், மிகப் பழமையான காலத்தில் நேர்ந்தவை யொன்றும் நமக்குப் புலப்படுவ தில்லை. அதற்குப் பிந்திய காலங்களில், வான சாஸ்திர சம்பந்தமான ஆராய்ச்சி செய்த சாதியார் இன்னார் என்பது மட்டும் தெரிகிறதே யொழிய, அவருள் யார் யார் என்ன என்ன ஆராய்ச்சி செய்தன ரென்று நமக்குத் தெரிவதில்லை. அதற்கும் பிந்திய காலங்களிலிருந்தே, ஆராய்ச்சி செய்த பெரியோர் இன்னவரென்று நாம் அறிகிறோம்.

ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய, சிறந்த அறிவும், அதிநுட்ப கவனமும், விடா முயற்சியும், அன்றி ஆலோசனை செய்யச் சாவகாசமும், அவசியம். இவை யெல்லாம் பொருந்திய மனிதர், நாகரிக முள்ளவராகவே இருப்பார் என்பது திண்ணம். இவ் வானசாஸ்திரமும், நாகரிகத்திற் சிறந்தோரே பயிலும் சாஸ்திரம்.

ஆகையால், பண்டைக் காலத்தில் நாகரிகத்தில் சிறந்தோரே இந்தச் சாஸ்திரத்தை முதல் முதல் அபிவிருத்தி செய்திருப்பார் என்று கூறல் எளிதாகும். பண்டைக்காலத்துக் கிரந்தங்களைப் பரிசோதித்தறிந்த மேனாட்டாரும் இவ்வாறே கூறுகின்றனர்.

ஆதியில், நாகரிகத்தில் சிறப்புற்றோர், நமது முன்னோராகிய இந்திய ஆரியர்களே. அவர்களிடமிருந்து நமக்கு வந்திருக்கும் நூல்களுள் வேதங்களே மிகவும் பழமையானவை. அவை அநாதியென்றே நம்மவர் கொண்டாடினும், மேனாட்டுச் சாஸ்திரிகள், அவை, சுமார் 6000 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டனவென்று கூறுகின்றனர். அவ்வேதங்களில், நக்ஷத்திரங்களைப் பற்றியும், சூரியன், சந்திரன் முதலியவைகளைப்பற்றியும், நம்முன்னோர்கள் கூறியிருப்பதைக் கவனிக்கலாம். அவ்வாரியர்கள், செய்ய வேண்டிய யாக முதலியவற்றின் பொருட்டுக் காலத்தையும் திசைகளையும் அறிதற்காக, ஆகாயத்திலுள்ள சோதிகளின் உதவியைத் தேடினார்களென்று தெரிய வருகிறது. பிறகு, ஜோதிஷ சாஸ்திரம் (Astrology), இதற்கு ஒரு கிளையாகப் புறப்பட்டது. இக்கிளையின் பொருட்டே மூல விருக்ஷமான வான சாஸ்திரம் அதிகமாக விருத்தியாக்கப்பட்டது. அக்காலம் முதலே, பருவங்களையும் (Seasons), மனிதர்களின் உயிர்களையும் நடவடிக்கைகளையும், அறிவுக்கெட்டாத ஏதோ விதமாக மாறுதல்கள் அடையச் செய்யும் சக்தி விண்ணுலகங்களுக்குண்டு என்றும், அதிகக் காலமாகக் கவனித்துப் பார்த்தால் இந்தச் சக்தியினுடைய போக்கை அறியலாமென்றும், அவ்வறிவால் அச்சக்தியை மாற்றவோ குறைக்கவோ இயலுமென்றும், அவர்களில் பலர் பூரணமாய் நம்பியிருந்தனர்.

வேதங்களுக்குப் பின்னர் வான சாஸ்திர விஷயங்களைப்பற்றிக் கூறுவது, "சூரிய சித்தாந்தம்" என்னும் கிரந்தம். நம்மவர்கள், 'இது சூரியதேவன் அருளியது, 2,165,000 வருஷங்களாக உள்ளது' எனினும், வீபர் (Weber) முதலிய ஐரோப்பிய சாஸ்திரஞ் ஞானிகள் இந்நூல் உண்டாக்கப்பட்டுச் சுமார் 4700 வருஷங்களே ஆயினவென்று கூறுகின்றனர். அஃதாவது, இந்நூல், சுமார் கி. மு. 2780-ம் வருஷத்திலுண்டானதென்பர். காஸினி (Cassini), பெய்லி (Bailly), ஜெண்டில் (Gentil), ப்லேபேர் (Playfair) முதலியோர், ஹிந்துக்கள், கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருஷங்களுக்கு முன்னரே வர்ண சாஸ்

திர ஆராய்ச்சி அதிகம் செய்திருந்தனரென்றும், அப்பொழுதே அவர்கள் அறிந்திருந்த விஷயங்கள் அனேகமாகப் பிழையற்றிருந்தனவென்றும, அபிப்பிராயப்படுகிறார்கள்.

பராசர முனிவர் என்னும் மகான் வானசாஸ்திரப் பயிற்சி செய்தது, கி. மு. 1391-ம் வருஷத்தில் என்று டேவிஸ் (Davis) சொல்லுகிறார்; ஹேளடன் என்பவரோ, கி. மு. 12-வது நூற்றாண்டிலென்று கூறுகிறார். இவர்கள் கூறுவதற்கு ஆதாரம் என்னவெனில், அப் பராசரர். கவனித்துக் குறித்த விஷயங்களே. அவற்றிலிருந்து, அவை குறிக்கும் காலமும் அதனால் பராசரருடைய காலமும் நிருணயிக்கப்பட்டிருக்கிறது. ஹம்போல்ட் (Humboldt) என்னும் ஐரோப்பியரால் கி. பி. 19-வது நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட அவஹரியவித்யை (Meteorology), இவரால் ப்ருஹற்பராசரமென்னும் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இவருக்குப்பின் வந்தவர் புலிசனோடு போட்டி போட்ட ஆரியபட்டர் என்பவரே. இவர் விக்கிரமாதித்தனென்று பெயர் பெற்ற அரசனுக்கு வெகு காலத்துக்கு முன்னால் பிறந்தவரென்று மாத்திரம் நமக்குத் தெரிகிறதேயன்றி, இவருடைய காலத்தை இப்பொழுது வரையறுத்து நிச்சயிக்க முடியவில்லை. இவர்தாம் பூமியினுடைய தினச்சுழற்சியையும் சூரிய சந்திரர்களுடைய கிரகணத்தின் வாஸ்தவக் காரணத்தையும் முதல் முதல் வெளிப்படுத்தியவரென்று சில ஐரோப்பியர் கூறுகின்றனர்.

இவருக்குப் பின்னரே கி. மு. முதலாவது நூற்றாண்டிலிருந்த வராஹமிஸ்ரர் என்பவர். இவர், சோதிஷ சாஸ்திரத்திலும் மிகுந்த பயிற்சி யடைந்திருந்தார். இவர், விக்கிரமாதித்தனுடைய சபையை அலங்கரித்த நவமணிகளென்று கூறப்படும் வித்துவான்களில் ஒருவரென்பது ஐதீகம். இவர் எழுதிய பிருஹத் சம்ஹிதை என்னும் நூல் மிகச் சிறப்புடையதென்று கற்றறிந்தோர் கொண்டாடுகின்றனர்.

கிறிஸ்துவுக்குப் பிந்திய காலங்களில் பொதுவாக இந்தியரின் முன்னேற்றம் பின்னடையவே, நமது தேசத்து வான சாஸ்திரிகளும் நமக்குத் தட்டுப்படுவதில்லை. ஆயினும், கி. பி. 12-வது நூற்றாண்டிலிருந்த பாஷ்கராசாரியர் என்னும் கணித சாஸ்திர நிபுணரான வானசாஸ்திரியும், ஜெயபுரத்தைச் சேர்ந்து அனேகம் நக்ஷத்திர

கணித சாலைகளை (observatories) நிர்மாணித்து, நக்ஷத்திர அட்டவணையும் இயற்றிய, கி. பி. 18-வது நூற்றாண்டிலிருந்த இரண்டாவது ராஜா ஜெய ஸிங் என்பவரும் நமது மதிப்பிற்குரியோராவர்.

இந்தியாவில் வான சாஸ்திரப் பயிற்சி ஆதி காலங்களிலேயே தொடங்கப்பட்டு வெகு விஷயங்கள் அறியப்பட்டிருந்தன வென்று கூறியிருக்கிறோம். ஐரோப்பிய சாஸ்திரஞ்ஞானிகளுள் சிலர், இந்தியாவுக்குரிய இப்பெருமையை மறுத்து, கிரேக்கர்களுக்கும், அராபியர்களுக்கும், எகிப்தர்களுக்குமே உரியது அப்பெருமை என்று கூறுவர். இவர் சொல்லுவது தவறென்று, தேசாபிமானத்தால் மட்டுமன்றி, வேதங்கள் முதலிய ஆதிக் கிரந்தங்கள் நமக்குக் கொடுக்கும் ஆதாரங்களாலும் நாம் கூறுவது சரியாகும். நம் முன்னோர்கள் அறிந்திருந்த விஷயங்கள் யாவையெனில்:—

(1) பூமி கோளவடிவமுள்ள தென்பது.

(2) அது நாளொரு முறை தன்னைத்தானே சுற்றிக்கொள்ளுமென்பது.

(3) அச் சுழற்சியால் இரவும் பகலும் ஏற்படுவன வென்பது.

(4) துருவங்களில் (Poles) ஆறுமாதகாலம் வியாபித்துள்ள இரவும் பகலும் உண்டென்பது.

(5) பூமியின் சுற்றளவு 4967 யோசனை; (1 யோசனை—5 மைல்) குறுக்களவு $1581\frac{1}{2}\frac{1}{4}$ யோசனை என்பது.

(6) ஒரேசமயத்தில், பொழுது வெவ்வேறு இடங்களில் வெவ்வேறாயிருக்குமென்பது.

(7) சூரியன் மிகுந்த ஆகர்ஷண சக்தியுள்ளதென்பது. [நியூடன் (Newton) என்னும் ஆங்கிலச் சாஸ்திரிக்கு வெகு காலத்துக்கு முன்பே, சித்தாந்த சிரோமணி என்னும் கிரந்தம், ஆகர்ஷணக் கோட்பாட்டைப் (Theory of gravity) பற்றி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.]

(8) பூமியைச் சுற்றி வாயுமண்டலமொன்று இருக்கிறதென்பது.

(9) சந்திரனும், கிரகங்களும், நக்ஷத்திரங்களும் [இது தவறு] சுய ஒளியற்றன வென்பது.

(10) கிரகணங்கள் இன்ன காரணத்தால் உண்டாவன வென்பது,

(11) சந்திரன் பூமியின்மேல் செலுத்தும் ஆகர்ஷண சக்தியி னால் ஏற்படுவனவே கடலின் ஏற்றமும் வற்றமும் Tides) என்பது. *

இவ்வாறு வான சாஸ்திரசம்பந்தமான பல விஷயங்களையும் ஆரா ய்ந்து, ஒவ்வொரு ஆராய்ச்சியிலும் முன்னேற்றம் அடைந்தவர் இந்திய ஆரியர்களே யெனில், அவருள் பெரியோரை, தெய்வீகமாகக் கொண் டாடுவது வியப்பன்றே.

(இன்னும் வரும்)

கடவுள் அருள்.‡

(1) சாகும் தறுவாயில், சஞ்சல இவ்வாழ்வு ஓய்ந்து,
நோகும் வியாதிகளால் அங்கமெலாம் நொந்து பட,
போகும் உயிர் தளர்ந்து, பொறிகள் அடை பொழுது,
ஏகன், எனை ஆளும் ஈசனே என் துணையே.

(2) வாழ் நாளில் கொண்ட இலக்கை மதி மறந்து,
தாழ்வாம் வசைசேர உள்ளம் தடுமாறி,
கீழ்வாழ்ந்த தன் பெயரே தான் அறியாக் கேடுறும் நாள்,
ஆள்வான் அருட்சக்தி என்னை அளித்திடுமே.

(3) கடைமூச்சு எறிந்து, கடைக் கண்ணீர் சோரவிட்டு,
அடைவாகப் பாடையின் மீது ஆக்கி, முகவாசை இட்டு,
'சடமாம் சவம், இது' எனத் தாரம், மகன், நீங்கிய பின்,
திடமாய் எனை ஈசன் தன் அடியில் சேர்க்குவனே.

(4) இன்பத்துள் ஏதும் உவட்டாதது என்றில்லை;
மன் பெரிய செல்வாக்கும் மாட்சிமையும் மாய்வுறுமால்;
அன்பர் அகம்கனியும் அன்பும் அழிவுறுமால்;
என் பெருமான் இன் அருளே எல்லாம் எனக்காமே.

அ. மா.

---

*From Har Bilas Sarda's "*HINDU SUPERIORITY*"

‡*Dominus Illuminatio Mea*—Anonymous.

மல ஜல நிவிர்த்தி.

[ம-ா-ா-ஸ்ரீ, டாக்டர் A. Y. நாராயணையர் L. M. & S. எழுதியது.]

(46-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடன், ஒருவன், தன் காலைக் கடன்களை முடிப்பதற்காக, வீட்டிலிருந்து சுமார் ஆறு பர்லாங்கு தூரம், மேற்கு முகமாக நடக்க வேண்டுமென்று இதற்குமுன் கூறியிருக்கிறோம். பட்டணங்களிலும், நகரங்களிலும், தற்காலத்தில் கிராமங்களிலுமேகூட, நவீன நாகரிக விஷயங்களைப்பற்றி ஏற்பட்டிருக்கும் எண்ணங்களால், எல்லோருக்கும் இது சௌகரியப்படாது; சாத்தியமுமல்ல. நகரப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களில் பெரும்பாலார், 'கக்குஸ்' என்று சொல்லப்படும் இடங்களுக்கே போக வேண்டியிருக்கிறது. தவிர, நகரங்களில் வசிப்போர் பலர், தாங்கள் செய்யும் உத்தியோக விஷயமாய் அதிகநேரம் ஓரிடத்திலேயே உட்கார்ந்திருப்பதாலும், தங்களைப்போன்ற நகரவாசிகளான ஐரோப்பியர் மாதிரி தேகப்பயிற்சி செய்யாததாலும், தாமதமில்லாமலும், கிரமமாகவும், தினசரி, மலவிஸர்ஜனத்தை முடிப்பதில்லை.

பாலியதசை கடந்த ஒருவனுக்கு, சாதாரணமாக, ஒரு நாளில் 50 ஔன்ஸ் மூத்திரம் வெளிப்போவதும் தவிர, ஒருதரமாவது தாராளமாக மல நிவிர்த்தியாக வேண்டும். சீதோஷ்ண ஸ்திதி, தேகப்பயிற்சி, குடிக்கும் தண்ணீர் முதலியவைகளில் ஏற்படும் வித்தியாசங்களுக்கிணங்க, ஒருவன் வெளிப்போக்கும் சிறு நீரின் அளவும் வேற்றுமைப்படும், குளிர்காலத்தில் யாவரும், தேகப்பயிற்சி இல்லாமல் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கும் வழக்கம் உடையோரும், வெளிப் போக்கும் மூத்திரத்தினளவு, கோடைகாலத்திலும், அதிக மாகத் தேகப்பயிற்சி செய்வோரும் வெளிப்போக்கும் சிறு நீரினளவை விட, அதிகப்படும். ஏனெனில், வெயிற்காலத்திலும், தேகப்பயிற்சி செய்வோர்க்கும், சரீரத்திலுள்ள துர் நீரானது, விசேஷமாய் மேல்தோல் வழியாக வெயர்வைரூபமாய் வெளிப்படுகின்றது. மேலும், பாலியதசை கடந்த ஒருவன், ஒருநாளில் சுமார் 4 முதல் 6 முறைகள் வரை ஜல நிவிர்த்தி செய்வான். சில வியாதிகளில், ஜல நிவிர்த்தி அதிகமாகவும், அடிக்கடியும், வேறு சில வியாதிகளில் இதற்கு விபரீதமாகவும் ஏற்படும் நோய் சம்பந்தமான விஷயங்களை நாம் இங்கே கவனிக்கவேண்டியதில்லை.

மல நிவிர்த்தியோ வெனில், தினம் ஒரு முறையாவது இருத்தல் வேண்டும். பலருக்குக் காலையும் மாலையுமாக இரு முறை நிகழ்தலும் உண்டு. ஒரு

முறைக்குக் குறைந்தாலும், இரு முறைக்கு மேற்பட்டு அகாலத்தில் நிகழ்ந்தாலும் இயல்பிற்கு விரோதமென்றே கருதப்படவேண்டும். காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடனே தான் மல நிவிர்த்திக்கு மிகவும் உத்தமமான காலம். மேற் சொல்லியபடி, அநேகர் இவ்வண்ணம் செய்யச் சக்தியற்றவராய், மலக்கட்டினாலுண்டாகும் வயிற்றுவலி, தலைவலி, ஒழுங்கான ஜீரணமின்மை, உணவின்மை இவைகளாலும், இவற்றினாலுண்டாகும் சரீர மெலிவாலும் பீடிக்கப்படுகின்றனர். மலச்சிக்கின் மூலமாக வரும் கஷ்டங்கள் பல, அவற்றால் பாதிக்கப்படுவோரும் பலராவர். அதனாலேதான், பார்வைக்குச் சாமானியமாகவே தோற்றும் இவ்வியாதியைப் பற்றி, நாம் இவ்வாறு எடுத்துரைக்கவேண்டியதாயிற்று. மலச்சிக்கின் காரணங்களை மூன்று தலைப்புக்களின்கீழ் விவரிக்கலாம், (1) குடலிலும், குடலோடு இணைக்கப்பட்ட இமைப்புக்களிலுமுள்ள பிசகுகள் (2) ஆகாரப்பிழைகள் (3) கெட்டவழக்கங்கள். அநேகரிடம் இம்மூன்று காரணங்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. குடலிலிருக்கும் சிரைகளும், தசைகளும் ஆரோக்கியக் குறைவுடனிருப்பதால், குடல் மந்தப் படுகின்றது. தேகப்பயிற்சியின்றி உட்கார்ந்தே நடை பெறும் வாழ்வு, பாரம்பர்யம், இயற்கையின் தூண்டுதல்களை அலக்ஷ்யம் செய்தல், இம்மூன்றுமே சாதாரணமாக இதற்குக் காரணங்களாகும். பெண்பாலாருள் மலச்சிக்கிற்குச் சாதாரணமா யேற்படும் ஒரு காரணம் என்ன வென்றால், பஹிஷ்டை சம்பந்தமான ஒழுங்கீனங்களினாலும், கருப்பையின் ரோகங்களினாலும், தேகத்தில் இரத்த புஷ்டியின்மையினாலும் குடலின் சுவர்களில் இரத்த ஓட்டம் குறைந்து, குடல் மெலிவடைவதே. ஆகாரப் பிழைகளாலுண்டாகும் மலச்சிக்கு, தனவான்களுக்குள், அவர்கள் மிகச்சத்துள்ள ஆகாரத்தைக் குறைவான அளவில் சாப்பிடுவதனாலாவது, போதுமான அளவு உணவுப் பொருளை உட்கொள்ளாத தாலாவது, அல்லது, ஜீரணிக்க முடியாத வஸ்துக்களில்லாத ஆகாரங்களைச் சாப்பிடுவதாலாவது ஏற்படுகிறது. பால் தேயிலை முதலிய சிலவகை ஆகாரங்கள் மலச்சிக்கை உண்டாக்கக்கூடியவை. நெய், பச்சைக்கறியாய் முதலியன மலத்தை நகட்டக்கூடியவை. அறியாமையாலும், சோம்பலாலும் உண்டாகும் கெட்ட வழக்கங்கள் சில, நகரவாழ்விலுள்ள அசௌகரியங்களால் அபிவிருத்தி யடைகின்றன. காரணங்களை நன்றாய் ஆராய்ந்து பார்த்தால், அந்த அந்த நிலைமைகளுக்குச் சரியான சிகிச்சைகளைச் சுலபமாய்ச் செய்து கொள்ளலாம். ஔஷத வைத்திய மூலமாகவோ, ரணவைத்திய மூலமாகவோ, வைத்தியம் செய்யவேண்டிய குடல் சம்பந்தமான அபாயகரமான வியாதிகளாலுண்டாகும் மலச்சிக்கை, நாம் மேற்கூறிய வகுப்பு முறையில் சேர்த்துக் கூறவில்லை. நம் விசாரணைக்குள்ளடங்கியிருக்கும் இவ்வியாதியின் வகுப்புகளைப்பற்றி பேசும்பொழுது, மல இளக்கத்தையோ அல்லது பேதியையோ உண்டாக்கக்கூடிய ஔஷதங்களை இடைவிடாது கொடுப்பதாலுண்டாகும் பெரிய அபாயத்தைப்பற்றி வற்புறுத்திக் கூறவேண்டியது முக்கியமானது. குடலின் ஒழுங்குக் கேடுகளை நீக்குவதற்காக அனுசரிக்க

வேண்டிய சுகாதார சாதனங்களுக்கு ஒத்தாசையாக, சிற்சில சமயங்களில் பேதியை உண்டாக்கக்கூடியஔஷதங்கள் கொடுக்கப்படலாம்; இடையிடையே எப்ஸம் ஸால்ட் (Epsom salt), அல்லது ஆமணக்கெண்ணெயை ஒருவேளை சாப்பிடுவதில் தீங்கொன்றுமில்லை. ஆனால், 'அலோயின்,' (Aloin), 'ஜாலப்', (Jalap), 'ரூபார்ப்' (Rhubarb), காலொமெல் (Calomel) முதலியவைகளும் இன்னும் இவற்றிலும் அதிக சக்தியுள்ள மருந்துகளும் அடங்கியிருக்கும் 'பேடென்ட் (Patent) மாத்திரைகளை வழக்கமாக உட்கொள்வதனால், எந்த ஒழுங்குக் கேடுகளின் தொந்தரைகளைக் குறைப்பதற்காக அவை உட்கொள்ளப்படுகின்றனவோ, அந்தத் தொந்தரைகளைவிட அதிகமான தொந்தரைகள் உண்டாகி விடுகின்றன. ஆமணக்கெண்ணெய், 'காம்பௌண்ட் லிகரீஸ் பௌடர் (Compound liquorice powder), 'ஸீட்லிட்ஸ் பௌடர்' (Siedlitz powder) இவைகளைப்போன்ற ஔஷதங்களோ, வைத்தியர்களைக் கேட்காமல் பாமரர் தீங்கின்றி வேண்டியபோது உட்கொள்ளத் தக்கவை. மலச்சிக்கிற்குச் சரியான பரிகாரம், குடலிலிருக்கும் நரம்புகளை ஆரோக்கியமான நிலைமைக்குக் கொண்டுவரக்கூடிய மாதிரி நடந்து கொள்வதேயாம்:—காற்றோட்டமான திறந்த வெளியில் ஒழுங்காகத் தேகப்பயிற்சி செய்தல்; முக்கியமாக் குடலிலிருக்கும் தசை நரம்புகள் பலமடையும்படிக் கவனித்தல்; கேழ்வரகு, தவிடு நீங்காத ரொட்டி முதலிய சக்கையுள்ள ஆகாரங்களை உண்ணுதல்; வாழைப்பழம், பச்சைக்கறிகாய், இவைகளை ஒழுங்காய்ச் சாப்பிடல்; சாப்பிடும் வேளைகள் தவிர மற்றை வேளைகளில், முக்கியமாய்ப் படுத்துக்கொள்ளும்பொழுதும், படுக்கையை விட்டு எழுந்திருக்கும்பொழுதும், போதுமான அளவு தண்ணீர் குடித்தல்; தூக்கம், வேலை, முதலியவைகளில் ஒழுங்கான வழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளல்; இவையன்றி, இவற்றிற்கெல்லாம் முக்கியமாய், ஒரு குறிப்பிட்ட வேளையில்—அதிகாலையே உத்தமம்-அவசரமின்றியும் தவறாமலும் மல நிவிர்த்திசெய்ய யத்தனித்தல், ;இவையே சரியான பரிகாரங்களாகும். நீடித்த கடுமையான மலச்சிக்கு வியாதிகளில், மேற்கூறிய சுகாதார முறைகளை விடாமல் அனுசரித்தும், சரியானபடி மலத்தை நகட்டும் மருந்துகளை உபயோகித்தும் சீர்படுத்த முடியாவிடின், அதிகாலையில் எழுந்து வெளியே குளிர்ந்தகாற்றில் நடந்துபோய், ஓர் ஏகாந்தமான இடத்திலோ, அல்லது கிராமாந்தரம் போன்ற இடத்திலோ காலைக்கடன்களை முடிக்க வேண்டுமென்னும் சாஸ்திர விதி, மிகவும் பயனுள்ளதாயிருக்கும். ஆகவே, நாகரிகமென மதிக்கப்பட்டுவரும் சுகங்களிலும், இயல்பிற்கு விரோதமான வழக்கங்களாலேற்படும் கட்டுப்பாடுள்ள ஆரோக்கியமற்ற வாழ்விலும் அருவருப்புற்று, தற்காலத்து நகரவாசி, "காடுகளுக்கே திரும்பிச் செல்வோம்" என்று கதற வேண்டியதாயிருக்கிறது.

ஸ்திரீ சுதந்தரம்.

[ஸ்ரீமதி M. லக்ஷ்மி அம்மாள் எழுதியது.]

(128-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

தற்கால நாகரிகமும் வாழ்க்கையும் கொள்கைகளும் பண்டைக்காலத்திய வற்றினின்றும் வித்தியாசப்படுவதின் முக்கிய காரணமென்னவெனில் ஜன சமூக, அரசாங்க, மத விஷயங்களைக்குறித்து, நம்முன்னோர்கள் கொண்ட அபிப்பிராயங்களுக்கெல்லாம் மூலாதாரமான பெருங்கொள்கை ஒன்றை, நாம் இப்பொழுது முற்றிலும் தவிர்த்துவிட்டதே "மாந்தரின் வாழ்க்கை நிலை அவரவரது பிறப்பினால் நிச்சயிக்கப்படும்; ஒவ்வொருவனும் தனக்குப் பிறப்பினால் ஏற்பட்ட பதவியிலேயே தன் ஆயுள் முழுவதையும் கழிக்க வேண்டும்" என்பதுதான், நம்முன்னோர்களின் 'கொள்கை. இது தவறென்றும், ஒவ்வொருவனும், தன் முயற்சியினாலும் காலநிகழ்ச்சியில் நேரும் அநுகூல சம்பவங்களினாலும் தான் விரும்பும் எப்பதவியையும் அடையப் பாத்தியமுடையவனென்றும், தற்காலத்தவர் சொண்டிருக்கின்றனர். இக்கொள்கைக்குத் தக்கவாறு மனித வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதே தற்கால நாகரிகத்தின் முக்கிய நோக்கம்.

முற்கால ஜன சமூகத்திலோ, ஒவ்வொருவனுடைய பதவியும் அவனவன் பிறப்பினாலேயே நிச்சயிக்கப்பட்டது. சிலர் வெள்ளைமேனியுள்ளவர்களாகவும், சிலர் கருமேனியுள்ளவர்களாகவும் பிறப்பதுபோலவே, சிலர் சுதந்தரவாளிகளாகவும், சிலர் அடிமைகளாகவும், சிலர் உயர்சாதியினராகவும், சிலர் கீழ்ச்சாதியினராகவும் பிறந்தனர். கீழ்ச்சாதியான் ஒருவன் ஒருக்காலும் உயர்ந்த சாதியினருக்குரிய சுதந்தரங்களைப்பெற முடியாது. அடிமை, தன் யஜமானன் தயவினாலொழிய, ஒருக்காலும் சுதந்தரம் பெறமுடியாது. இவ்வாறாக, ஜன சமூகத்தில், ஒவ்வொருவனுடைய பதவியும் பிறப்பினால் நிச்சயிக்கப்பட்டதன்றி, ஒவ்வொருவனுடைய தொழிலும் பிறப்பினாலேயே நிச்சயிக்கப்பட்டது. இன்ன வகுப்பார் இன்ன தொழிலைச் செய்தற்குரியர் என்றும், அவர்கள் அத்தொழிலை இன்ன கருவிகளைக்கொண்டே செய்யவேண்டும் என்றும் ஜன சமூகம் சட்டமிட்டது. வேறு தொழில்களிற் பிரவேசித்ததற்காகவும், புதிய கருவிகளை உபயோகித்ததற்காகவும் கைவினைஞர் பலர் தண்டனைக்குள்ளானது முண்டு. ஒவ்வொருவனையும், கூடியவரை எல்லா விஷயங்களிலும், விதிவிலக்குகளால் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், அன்றேல் ஜன சமூகத்துக்குத் தீமை விளையுமென்றும் முற்காலத்தவர் எண்ணி, இவ்விதக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர்.

இப்பொழுது முன்னுக்கு வந்துள்ள தேசங்களனைவற்றிலும், இவ்வெண்ணத்திற்கு நேர் விரோதமான அபிப்பிராயங்களே வழங்குகின்றன. ஒருவன் மற்றவருக்குத் தீமை செய்யாமற் காப்பதொன்றைத் தவிர, சட்டங்கள், வேறெவ்விதத்திலும், அவன் தன் வாழ்நாளைத் தன்னிஷ்டப்படி செலவிடுவதைத் தடுக்கக்கூடாது என்பதுதான் தற்காலத்துக் கொள்கை. இதன் கருத்து, அனைவரும் எத்தொழிலுக்கும் தக்கவர் என்பதல்ல; ஆனால், ஒருவிதக் கட்டுப்பாடுமில்லாத விடத்து, ஜனங்களுக்குள் போட்டி உண்டாகி, அவனவன் தன் திறமைக்குத் தக்க தொழிலையே மேற்கொள்வான் என்பதாகும். வலிய தோளானே கொல்லனாக வேண்டுமென்று சட்டமிட அவசியமில்லை; பலவீனர்கள், பலசாலிகளுடன் போட்டி போட்டுக் கொல்லர் தொழிலில் தமக்கு வேண்டிய அளவு சம்பாதிக்கமாட்டாமல், தாமே தம் திறமைக்கேற்ற எளிதான தொழில்களைத் தெரிந்து கொள்வார்கள்; ஆகவே, இன்னார் இன்ன தொழில்களைச் செய்வதற்கு அருகர், அருகரல்லர் என்று பிறர் முதலிலேயே நிச்சயிப்பது தவறு என்பது ஏற்படுகிறது.

ஜனசமூக சாஸ்திரத்தில் ஏற்படும் இக்கொள்கை உண்மையன்றெனின், ஒவ்வொருவனும் தானே தனக்கேற்ற தொழிலைத் தெரிந்துகொள்ளத் தக்கவன் என்பது தவறெனின், நாம், இக்கொள்கையை இன்றே தவிர்த்து, உடனே பழைய நிர்ப்பந்த வழக்கங்களை மேற்கொள்ளுதலே தகும். அன்றி, இக்கொள்கை சரியெனின், நாம் அதற்குத் தக்கவாறு நடக்கவேண்டும். வெள்ளைத்தோலுடனல்லாது கறுப்புத் தோலுடன் பிறப்பதோ, அல்லது, உயர் குலத்திலல்லாது கீழ்க்குலத்திற் பிறப்பதோ, (அவ்வாறு பிறந்தவர்களை வாழ்நாள் முழுவதும் நிர்ப்பந்தங்களுக்குள்ளாக்கும்படி) பிறவித்தோஷமாகாது என்று நாம் வற்புறுத்திக் கூறின், அதே நியாயப்படி, ஆணாகவன்றிப் பெண்ணாகப் பிறப்பது அவ்விதப் பிறவித்தோஷமாகாது என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். தற்காலத்தில் நாகரிகம் முற்றிய தேசங்களில், மாதரின் தாழ்ச்சி நிலைமையைத் தவிர, அரசபதவி ஒன்றுமட்டுமே பிறப்பினால் நிச்சயிக்கப்படுகிறது. அதனினும்கூட, இங்கிலாந்து முதலிய அநேக தேசங்களில், இவ்வேற்பாடு தற்காலக் கொள்கைகளுக்கு விரோதமானது என்பதை ஜனங்கள் உணர்ந்து, பெயருக்குமட்டும் அரசாங்கத்துக்குத் தலைவனாயிருக்கும் கௌரவத்தை அரசனுக்குக் கொடுத்து, அரச பதவிக்குரிய அதிகாரத்தைச் சாதாரண ஜனங்கள் தெரிந்தெடுக்கும் மந்திரிகளே செலுத்தும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாதரின் தாழ்ச்சி நிலைமை, தற்கால நாகரிகத்தின் கொள்கைகளுக்கும் நோக்கத்துக்கும் சிறிதும் ஒவ்வாது, எஞ்சித்தனித்து நிற்கும் பண்டைநாளை ஏற்பாடே என்பது துலங்குகிறது. இந்நிலைமை ஜனசமூகத்துக்கு நன்மை பயப்பதோன்றோ என்று நாம் ஆலோசித்தல் தகும். பெண்பாலர் ஆண் பாலருக்கு அடங்கி ஒழுகும் இவ்வொரு நிலைமையைத் தவிர, வேறுவித நிலைமை நமக்கு எக்காலத்தும் அநுபவமில்லாததால், இந்நிலைமையே அநுபவத்திற் கேற்பச் சிறந்ததென்று நாம் கூறமுடியாது. நாம்

சொல்லக்கூடியதெல்லாம், இவ்வேற்பாட்டில் மாந்தர் இதுவரை வாழ்ந்து, இப்போதுள்ள நாகரிகத்தை அடைந்திருக்கிறார்கள் என்பதே. இவ்வேற்பாடு நாகரிகத்திற்குத் தடையாகவிருந்ததோ, அநுகூலமாக விருந்ததோவென்று, நாம், இப்பொழுது அநுபவத்தால் கூறமுடியாது. ஆனால் நாகரிகம் பெருகப் பெருக, ஸ்திரீகளின் நிலைமை உயர்வடைந்ததென்பதும், இதனால், ஸ்திரீகள் ஒரு ஜனசமூகத்தில் வகிக்கும் ஸ்தானத்திலிருந்து, அச்சனசமூகத்தின் நாகரிகத்தை ஊகித்தறியலாம் என்று சரித்திராசிரியர்கள் சொல்வதும், நாம் அநுபவத்தில் தெரிந்த விஷயங்கள். இவற்றிலிருந்து, நாகரிகம் மேற்பட மேற்பட, ஸ்திரீபுருஷர்கள் சமசுதந்தரர்களாவார்கள் என்று நாம் நிச்சயமாய்ச் சொல்லமுடியாதெனினும், அவ்வாறு ஊகித்தலே பொருத்தமாகத்தோன்றுகிறது.

இயற்கையிலேயே, பெண்பாலார் குடித்தன வாழ்க்கைக்கும், ஆண்பாலார் உலகவியவகாரங்களை நடத்துவதற்கும் ஏற்றவர் என்று சொல்வது பொது வழக்கு. ஸ்திரீகள் இயற்கையில் எவ்வித வாழ்க்கைக்குத் தக்கவர் என்று நாம் இப்பொழுது கூற முடியாது. புருஷரும் ஸ்திரீகளும் ஏற்றத் தாழ்சியான நிலைமையிலிருக்கும் வரை, ஸ்திரீகள் தங்கள் இயற்கையை முற்றிலும் வெளிக்காட்ட இடமில்லை. அன்றியும், நாம் முன் கூறிய கொள்கைப்படி, ஸ்திரீகள் செய்யத்தக்க தொழில்கள் இன்ன, செய்யத் தகாதன இன்ன என்பதை ஸ்திரீகள் மட்டுமே நிச்சயித்தற்குரியர். ஒருவரோ, பலரோ, ஒரு காரியத்தைச் செய்து முடித்தல் இயலுமோ இயலாதோ என்பது, அக்காரியத்தைச் செய்து பார்ப்பதனால் நிச்சயிக்கப் படுமேயன்றி, அவ்விஷயத்தைக் குறித்து வாது செய்வதனால் நிச்சயிக்கப்படாது.

ஆனால் ஒன்றை மட்டும் நாம் தீர்மானமாய்க் கொள்ளலாம்: அஃதாவது, ஸ்திரீகள், தாங்களாகவே தங்கள் இயற்கைக்கு விரோதமான காரியத்தை ஒருக்காலும் செய்ய மாட்டார்கள் என்பதே. இயற்கை விதிகள் நிறைவேறாது நின்று விடுமோ வென்று பயந்து, மனிதர் அவற்றைப் பலாத்காரமாக நிறைவேற்ற வேண்டுவது முற்றிலும் அனாவசியம். இயற்கையில் சிலகாரியங்கள் ஸ்திரீகளால் செய்ய முடியாதன என்றிருப்பின், அக்காரியங்களை ஸ்திரீகள் செய்யாமல் தடுக்கப் பிறர் கட்டுப்பாடுகள் விதிப்பது வீண் தொந்தரவே. ஸ்திரீகளால் செய்யக்கூடும் வேலைகளை அவர்களைவிட மேலாகப் புருஷர் செய்வாராயின், அதுவே ஸ்திரீகளை அவ்வேலைகளிற் புகா வண்ணம் தடுத்து விடும்.

விவாகம் செய்துகொண்டு மக்களைப்பெறுதல் தான் ஸ்திரீகளின் இயற்கைக்கு இயைந்த வாழ்வு என்பது பொது ஜன அபிப்பிராயமாக எண்ணப்படுகிறது. ஆனால், ஜன சமூகத்தில் வழங்கும் கட்டுப்பாடுகளைக் கவனித்துப் பார்த்தால், அவை, இல்வாழ்க்கையே ஸ்திரீகளுக்கு இயற்கையில் ஒவ்வாத வெறுப்பான நிலைமை என்று ஜனங்கள் நினைப்பதாக நாம் ஊகிக்க இடந்தருகின்றன. 'ஸ்திரீகள், எத்தொழிலிலும் பிரவேசிக்கக்கூடாது; உலக வியவகாரங்களை ஆராய்ந்து, தங்கள் மனத்தை விசாலப் படுத்திக்கொள்ளக்

கூடாது; ஏனெனில், பிறகு அவர்கள் விவாகம் செய்து கொள்ள மாட்டார்கள்; தங்களுக்குரிய குடும்பக் கவலைகளைக் கவனிக்கமாட்டார்கள்" என்று ஜனங்கள் சொல்வதனால், வேறு எவ்விதப் போக்கும் இல்லாவிட்டால் தான் ஸ்திரீகள் தங்கள் இயற்கைக்கியைந்த வாழ்வு என்று கூறப்படும் இல்வாழ்க்கையிற் புகுவார்கள் என்று ஜனங்கள் நம்புவதாகவே, நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இதுவே ஆண்பாலாரின் பொது அபிப்பிராய மெனின், இதையாராவது பின்வருமாறு வெளிப்படையாய் எடுத்துக் கூறுதல் தகும்:— "ஸ்திரீகள் விவாகஞ் செய்து கொண்டு, மக்களையும் பெற்று வளர்க்க வேண்டுவது ஜனசமூகத்திற்கு அத்தியாவசியம். நாம் கட்டாயப் படுத்தினாலன்றி அவர்கள் விவாகம் செய்து கொள்ள மாட்டார்கள். ஆகவே, நாம் அவர்களை விவாகம் செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்த வேண்டும்." இப்படியாராவது வெளிப்படையாகச் சொன்னால், நாம் அந்த வழக்கின் சுய ரூபத்தைக் கண்டறியலாகும். இங்கிலாந்தில் பலாத்காரமாய் மனிதரை மாலுமித் தொழிலில் புகும்படிசெய்யும் ஏற்பாடு இதேமாதிரியான நியாயத்தை ஆதாரமாயுள்ளது:— "தேசக்காப்புக்கு மாலுமிகள் வேண்டியது அவசியம். ஆனால், ஜனங்கள் மாலுமிகளாக இஷ்டப்படுவதில்லை. ஆகவே, அவர்களைக் கட்டாயப்படுத்துவது அவசியம்." இதற்கு எதிர் வழக்கு, ஜனங்கள் வேறு தொழில்களிற் பெறுவது போலவே, மாலுமிகளாகவும் தங்கள் வேலைக்குத் தக்க கூலியைப் பெற்றால், அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டியிராது என்பதே. இவ்விஷயத்தில், இந்த நியாயத்தை இப்பொழுது எல்லா ஜனங்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஸ்திரீகளை விவாகத்திற்குக் கட்டுப்படுத்தும் விஷயத்திலும் நாம் இந் நியாயத்தை ஆராய்தல் பொருந்தும். வேறு எவ்விதமாயேனும் மானமாகப் பிழைக்கும் வழியிருந்தால் ஸ்திரீகள் இல்வாழ்க்கைக்கு உடன்படமாட்டார்கள் என்று நாம் கூறின், அவ்வழக்கு, இல்வாழ்க்கையின் தாழ்ச்சியையே வெளிப்படுத்தாநிற்கும். உண்மையில், இப்பயத்தின் காரணம், ஸ்திரீகள் இயல்பாக விவாகத்தைவெறுப்பவர்களென்பதல்ல;—அவ்வாறு இதுவரையாரும் நினைத்ததில்லை;—ஆனால் விவாகம் செய்து கொள்ளாமல் கௌரவமாய்ப் பிழைக்கும் வேறு வழிகள் ஸ்திரீகளுக்கு இருந்தால், அவர்கள், கணவனும் மனைவியும்ஒத்த உரிமைகளுடன் வாழும் விவாகத்திற்குமட்டும் உடன்படுவார்களே யொழிய, மனைவியைக் கணவனுக்கு அடிமையாக்கும் இப்பொழுதுள்ள ஏற்பாட்டிற்கு ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்கள் என்பதே. இஃது உண்மைதான். இந்த மட்டில் இப்பயம் நியாயமானதுதான். இந்தக் கஷ்டத்தைத் தீர்க்கும் வழிகள் இரண்டேயுள. ஒன்று, நாம் பெண் கல்வியை உடனே நிறுத்தி, ஸ்திரீகள் மனம் விசாலப்படாது என்றென்றைக்கும் அவர்கள் அடிமை நிலைமையிலேயே திருப்தியா யிருக்கும்படி, இப்பொழுதினும் அதிகமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்; அல்லது, ஸ்திரீ புருஷர்கள் சம சுதந்தரங்களுக்கு உரியவர் என்ற நியாயத்தை ஒப்புக்கொண்டு, அதற்குத்தக்கவாறு நடக்க வேண்டும்.

(இன்னும் வரும்.)

இந்தியா எம் அன்னையே*

---

(1) உன் பொருட்டியாம் என்ன செய்துளோம்?

இந்தியா, எம் அன்னையே!

உன் பொருட்டியாம் என்ன செய்கிலோம்?

இந்தியா, எம் அன்னையே!

பொருவில் இன் அருள் பொலியும் உன் விழி

மருவும் ஞானமும் மாண்பும் உன்மொழி,

'தருமமே ஜயம்! சத்யமே சுகம்!

மருமம் ஈது; அறிந்து உலகில் வாழ்' என,

இந்தியா, எம் அன்னையே!

(2) பூ தலத்திலே எந்தநாடு தான்,

இந்தியா, எம் அன்னையே!

நீ படைத்த நல் சீர் படைத்தது?

இந்தியா, எம் அன்னையே!

அற்றை நாள் முதல் இற்றை நாள்வரை

பெற்று நீ விடும் கொற்ற வீரரை,

உத்த மத்திறப் புத்தி மான்களை,

ஒத்த பேர்கள் வேறு எத்தலத்து உளார்?

இந்தியா, எம் அன்னையே!

(3) எதினும் மனம் ஈது தேறுமால்: —

இந்தியா, எம் அன்னையே !

யாது செய்யவும் யாம் உன் சொந்தமே,

இந்தியா, எம் அன்னையே!

---

* Apated from W. E. Henley's *England, My England*.

பரத கண்டமாம் புண்ய பூமியில்,
பிரசம் [1] என்னலாம் வாழ்க்கை இன்பமே;
மரணமோ பெரும் துன்பம்; ஆயினும்,
சரதம் [2] உன்பொருட்டு யாங்கள் சாகுவோம்!
இந்தியா, எம் அன்னையே!

(4) எண்மை கண்டு உனை ஏசுவார் சிலர்,
இந்தியா, எம் அன்னையே!
உண்மை ஞானமே ஓம்பும் [4] உன்னையே!
இந்தியா, எம் அன்னையே!
அகிலம்[5] எங்கும் அஞ்ஞானம் மூடு அந்நாள்,
மகிமை தங்கும் உன் சீர் மறப்பரே!
உலகம் முற்றுமே, விலகி மெய்ந்நெறி,
கலகம் முற்று இந்நாள், காப்பது உன்கடன்,
இந்தியா, எம் அன்னையே!

(5) சமயம் யாவும் உன் சரணம் ஆகுமே!
இந்தியா, எம் அன்னையே!
இமய ஓங்கல்[7] போல் இசை[8] படைத்துளோய்!
இந்தியா, எம் அன்னையே!
நன்மை குன்றினும், இன்மை[9] ஒன்றி[10] னும்,
புன்மை [11] ஒன்றி[10] டா மேன்மை பூண்டுளோய்!
திட உளத்திலே பக்தி சேர்ந்துளோய்!
கடவுளுக்குமே கண்மணி யனாய்!
இந்தியா, எம் அன்னையே!

அ. மா.

---

[1] மதன்; [5] நிச்சயம். [2] எளிமை. [4] பேணிக்காக்கும். [3] பூமி. [6] மதம். [7] மலை [8] கீர்த்தி. [9] தரித்திரம் [10] ஒன்றுதல்=பொருந்துதல். [11] இழிவு.

ஐரோப்பாவின் ஆதி சரித்திரம்.

[சென்னை பிரஸிடென்ஸி கலாசாலையில் சரித்திர போதகரான
ம-ள-ள-ஸ்ரீ தி. சே. சுப்பிரமணிய ஐயரவர்கள்
M.A., L.T., எழுதியது.]

ஐரோப்பிய மதச்சண்டைகள்.

(153-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

மேற்றிசை நாடுகளின் மேன்மைக்கும் நாகரிகத்திற்கும் கிறிஸ்தவமதமே முக்கியகாரணமென ஐரோப்பியர்கள் மகிழ்வுடன் சொல்லி வருகிறார்கள். கிறிஸ்து உதயமாவதற்குமுன் விக்கிரக ஆராதனையைக் கைக்கொண்ட பல மதக் கொள்கைகள் பல தேசங்களில் நிலைபெற்றிருந்தன. இவையெல்லாம், சூரியனைக்கண்ட பனிபோல், கிறிஸ்தவமதத்திற்கு முன் விலகிவிட்டன. சற்றேறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்குள், ஐரோபா முழுவதையும் கிறிஸ்தவ மதம் கவர்ந்து விட்டது. இம்மதத்தின் கொள்கைகளால் ஜனங்களின் ஒழுக்கமும் விவேகமும் ஒருவாறு சீர்ப்பட்டுப் பெருகி வந்தன.

ஆயினும், கஷ்டங்களுக்கும் தொந்தரவுகளுக்கும் குறைவில்லை. முதல் முதல் ரோமர்களின் சக்கரவர்த்திகளாலேயே தொந்தரவுகள் உண்டாயினவென்று முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். அக்காலத்தில் கஷ்டங்களுக்கும் மரணத்திற்கும் அஞ்சாதவர்களே கிறிஸ்தவ மதத்தைக்கைக்கொண்டார்கள். நாளடைவில், கான்ஸ்டென்டைன் நாள் முதல், கிறிஸ்தவ மதத்தைச் சக்கரவர்த்திகளே ஆதரிக்கையில், எல்லோரும் திரள்திரளாக இம்மதத்தைச்சார்ந்தார்கள். மதத்தவர்கள் பெருகப்பெருக, ஸாமான்ய ஜனங்களுக்குள் மூடபக்தி நிலைத்து, மதக்கோட்பாடுகளின் சரியான அறிவு குன்றியது. இக்காரணத்தைக் கொண்டே பல விவாதங்களும் மதச்சண்டைகளும் ஏற்பட்டன. இது, பின்வரும் கதையினால் நன்கு தெரியவரும்:—முன்னொரு காலத்தில் ஒரு மகான் சில சிஷ்யர்களுடன் அடர்ந்த காட்டில் தவம் செய்தார். அவர், எல்லாப் பிராணிகளிடத்தும் அன்புடையராயிருந்தார். அவர் தவம் செய்யும் பொழுது ஒரு பூனை அவர்மீது உராய்ந்து சென்று அவரது தியானத்தைக் கெடுத்தபடியால், தாம் தவம் செய்யும் காலத்தில் அப்பூனையைக் கட்டி வைக்க வேண்டுமென்று சிஷ்யர்களுக்கு அவர் கட்டளையிட்டார். குருவின் கட்டளைக்கு விரோதமின்றி இப்படியே வெகுகாலம் நடந்து வந்தது. நாளடைவில் தப ஜெப காலங்களில் பூனையை ஒழுங்காகக் கட்டி வைத்தார்களேயொழிய, அதற்குக் காரணம் மறந்துபோய் விட்டது.

ஆகவே, தப ஜெப காலங்களில் பூஜைக்குத் தொந்தரவு ஏற்பட்டதே யொழிய, தவமும் ஜெபமும் அதனால் அனுகூலத்தை அடையாமல், நாளடைவில் பக்தியும் சிரத்தையும் குன்றி வெறும் வேஷமாயின. இவ்விதமாகப் பூஜையைக் கட்டும் நிலைமை எல்லா மதத்திற்கும் பற்பல காலங்களில் ஏற்படுவதுண்டு. பின்பு மதங்களில் அநேகமாக அறிவும் பக்தியும் குன்றி, பூஜை கட்டுவதே, அஃதாவது மூடபக்தியே நிலைத்துவரும். மூடபக்தி ஓங்க ஓங்க வீணான மதச் சண்டைகளும் உண்டாகும். அமைதியென்பதே கிறிஸ்தவ மதத்தின் அடிப்படையான தருமம். ஆயினும், அதனது சரித்திரத்தில் அமைதியின்மையே பெரும்பாலும் வெளியாகின்றது. கிறிஸ்துவுக்குப்பின் சுமார் மூன்றாவது நூற்றாண்டு முதல் இக்காலம் வரையில் மதச் சண்டைகளுக்கு மேற்றிசை நாடுகளில் குறைவில்லை. இச்சண்டைகளைப் பலவாறாக நாம் பிரிக்கலாம். இவை (1) கொள்கைச் சண்டை (2) ஒழுக்கச் சண்டை (3) அதிகாரச் சண்டை (4) புண்ணிய பூமிக்காக ஏற்பட்ட சண்டை (Grusade) (5) சீர்திருத்தச் சண்டை (Wars of the Reformation) (6) வர்த்தகச் சண்டை முதலியனவாம். மேற்சொல்லிய பிரிவுகளின் பேர்களினாலேயே மதச்சண்டைகளின் காரணங்கள் ஒருவாறு புலப்படக்கூடும். ஆயினும், இவற்றைச் சிறிது விவரமாக எடுத்துரைப்பது பொருந்தும்.

(1) கொள்கைச் சண்டைகள்:—

இவ்வுலகின் பாவத்தை ஒழிக்கக் கிறிஸ்து அவதரித்தாரென்பது கிறிஸ்தவக் கொள்கை. அவர் மேரி யென்ற நிஷேதம் நிறைவேறாத கன்னிகையின் புத்திர ரென்றும் அவருக்குப் பிதா கடவுளே என்றும் கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். நிஜமான பக்திகுன்றி, பூஜையைப் பிடித்துக்கட்டும் நிலைமை கிறிஸ்து மதத்திற்கு வந்த காலத்தில், கிறிஸ்துவின் அம்சத்தைப்பற்றி விவாதம் உண்டாயிற்று. சிலர் கிறிஸ்துவின் அம்சமும் கடவுளின் அம்சமும் வேறு என்று கைக்கொண்டார்கள். பலர் இரண்டு அம்சங்களும் ஒன்றே என்று வற்புறுத்தினார்கள். இவ்விதம் சமய போதகர்களும், சாமான்ய ஜனங்களும் இருகட்சிப்பட்டு, அமைதிகெட்டு, மதத்தின் கொள்கைகளும் வேறுபட்டன. இச்சமயத்தில் ரோமர்களின் ராஜ்யத்தின் வடக்கேயுள்ள அநேக முரட்டு ஜாதியார்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தார்கள். மேற்சொல்லிய விவாதங்களால் இவர்களும் மதவிரோதங்களைக் கைக்கொண்டார்கள். ஆகையால், இவர்கள் ரோமராஜ்யத்தைக் கவர்ந்து கொள்ளும் காலத்தில், மதவிரோதத்தால் உண்டான ஆரவாரங்களுக்குக் குறைவில்லை. இவ்விதம் கிறிஸ்துமதம் அலங்கோலப் படுகையில், விரோதங்களுக்குக் காரணமாயுள்ள இம்மதத்தை ஏன் அணுகவேண்டுமென்ற எண்ணம் சில மனிதர்களுக்குள் மேலிட்டது; ஆதிகாலத்தில் க்ரீஸ், ரோம் முதலிய விடங்களில் ஏற்பட்டிருந்த மதங்களுக்குரிய பற்பல தேவதைகளையே மீண்டும் வழிபடும் விருப்பம் உண்டாயிற்று. ஆகையால், கி. பி. 355-ம் வருஷத்தில் ஜூலியன் என்ற சக்கரவர்த்தி பட்டத்திற்கு வந்தபோது, கிறிஸ்து மதத்தின்

பிராபல்யம் ஒருவாறு குன்றியது. அம்மத போதகர்களின் அதிகாரமும் ஒழிந்தது. ஆயினும், சுமார் 25 வருஷங்களுக்கெல்லாம் தியோடோஸியஸ் என்ற கிறிஸ்துவமத பக்தன் ரோமர்களின் சக்கரவர்த்தியாகவே, ஆதிகாலத்து மதங்களும் கொள்கைகளும் மீண்டும் ஒழிந்து, கிறிஸ்து மதம் நிலை பெற்றது. மறுபடியும் அரசர்களின் உதவி கிடைத்தவுடன் கிறிஸ்துவப் பாதிரிகளெல்லாம் பழையகாலத்து நாகரிகத்தையும்,கல்வியையும், விவேகத்தையும் கூட ஒழிக்க ஏற்பாடுகளைச் செய்தார்கள். நாகரிகப் பேற்றை அடைந்திருந்த கிரேக்கர்களின் சிறந்த கல்வியும், சிற்ப சாஸ்திரத்தேர்ச்சியும் இருந்த விடம் தெரியாமல் மறைந்தன. அநேக பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டன. கல்விமான்கள், பாதிரிகளுக்குப் பயந்து ஒளித்துக் கொண்டார்கள். ஆகையால் கிறிஸ்து மதம் நிலைபெற, கல்விப் பேறும், விவேக ஒளியும் குன்றின. சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு இவை ஐரோபாவுக்கும் உலகத்திற்கும் பயன்படாமலிருந்தன. இக்காரணம் பற்றி, இவ்வுலக சரித்திரத்தில் விவேகமும் கல்வியும் குன்றிய மேற்கண்ட காலத்தை இருள் மூடியகாலமென்றே (Dark Ages) கொள்ள வேண்டும். இக்காலத்தில் பாதிரிக் கூட்டங்களின் ஆரவாரங்களும், அவர்களது தலைவராகிய போப்களின் மேன்மையும் ஓங்கினவேயன்றி, பெருகிய மதக்கிளர்ச்சியினால் கல்வியும், விவேகமும் பல மடைந்து பரவவில்லை.

(2) ஒழுக்கச்சண்டைகள்.

பாதிரிக்கூட்டங்களின் அதிகாரமும், ஆரவாரமும் ஓங்க ஓங்க, கோயில்களும், திருவிழாக்களும் ஏற்பட்டு, விக்கிரக ஆராதனையும் எங்கும் பரவலாயிற்று. பாபத்தை அகற்றுவதும், பிறருக்கு நன்மை செய்வதுமே சிறந்த ஆராதனையென்று கிறிஸ்து வற்புறுத்தியிருந்த போதிலும், பரவிய விக்கிரக ஆராதனையால் பாதிரிக் கூட்டங்களின் அதிகாரம் நிலைபெற்று வந்த படியால், கிறிஸ்துவின் போதனைக்கு விரோதமான இப்புதிய பழக்க வழக்கங்களை ஒழிக்க இவர்களுக்கு மனமில்லை. ஆயினும், கி. பி. ஏழாவது நூற்றாண்டில் பாலைவனங்களடர்ந்த அரேபியா தேசத்தில் முகாமத் (Mahomet) என்ற ஒரு மகான் உதயமாகி, மகமதிய மதத்தை ஏற்படுத்தி, மகமதியர்களுக்கு முக்கிய பட்டணமாக மெக்கா வைச்செய்து, அராபியர்களை ஒன்று படுத்தி, தமது புதிய மதத்தை பரவச்செய்யத் தம்முடைய சிஷ்யர்களைத்திரள்திரளாக அயல் நாடுகளுக்கு அனுப்பினர். ஒரு பெரிய ஜீவநதியின் வெள்ளம்கரையை உடைத்துப் பெருகி, சுற்றுமுள்ள நாட்டை நொடிப் பொழுதில் கவர்ந்து கொள்வது போல, சுமார் நூறு வருஷங்களுக்குள், அத்லாந்திக் மகாஸமுத்திரம் முதல் ஸிந்து நதிக்கரை வரையில் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள நாடுகளை யெல்லாம் மகமதியர்கள் ஜெயித்து, தங்களுடைய மதத்தை நிலைநாட்டினது மன்றி, ரோமர்களோடு போர் புரியவும் ஆரம்பித்து விட்டார்கள். இக்காரணம் பற்றியே,கான்ஸ்டாண்டிநோபிலிலுள்ளரோம சக்கரவர்த்திக்குத் தம்முடைய இருப்பிடத்தைக்காத்துக் கொள்வதே பெரிய கவலையாகிவிட்டது;

ஆகையால், இத்தாலியா முதலிய விடங்களைப்பற்றி அவர் யோசிக்க முடிய வில்லை. இத்தாலியாவிலும் ரோமாபுரியிலும், பாதிரிக் கூட்டங்களும் போப் சளும் சிறிதேனும் தங்குதடையின்றி அதிகாரம் பெற்று, ராஜ்ய பரிபாலனத் திற்கு முக்கிய கருவிகளாக ஆகிவிட்டார்கள். ஆகையால், இவர்கள் வைத்தது சட்டமாகிவிட்டது. இவ்விதம் ரோம ராஜ்யத்தின் மேற்குப் பாகத்திற்கும் கிழக்குப் பாகத்திற்கும் சம்பந்தமின்றிப் போய்விட்டது.

மேலும், இப்பிரிவினைக்கு கிறிஸ்தவப் பாதிரிகளின் விக்கிரக ஆராதனை யும் ஒருகாரணமாகிவிட்டது:ரோம ராஜ்யத்தின்கிழக்குப்பாகத்திலுள்ளஜனங் கள் மகமதிய நாடுகளுக்கு அதிக ஸமீபத்திலிருந்த படியால்,விக்கிரக ஆராதனை யின் தீமையையும் ஒழுங்கின்மையையும் சீக்கிரம் தெரிந்து கொண்டார்கள். மகமதியர்களோ, விக்கிரகம், ப்ரதிமை, சித்திரம் முதலிய சின்னங்களில்லா மலே, கண்களை மூடிக்கொண்டு, மெக்காவை நோக்கி முழங்காலிட்டு, உள்ள மாகிய கோயிலில் பரஞ்சோதியாகிய கடவுளை அமைத்துத் தியானிக்கும் பக்தி மான்கள்.'விக்கிரகத்தைக் கழுவுவதால் பயனில்லை; மனத்தைக்கழுவிச் சுத்தப் படுத்தவேண்டும்' என்பது இவர்களது கொள்கை. ஆகையால், இவர்கள் விக் கிரக ஆராதனையில் கிடந்துழலும் ரோமர்களைக்கண்டு நகைத்தார்கள். இக்கார ணம்பற்றியே, கான்ஸ்டாண்டிநோபிலின் சக்கிரவர்த்தியாகிய லீயோ என்ப வர், விக்கிரக ஆராதனையை ஒழித்து, கிறிஸ்தவ மதத்தின் நல்லொழுக் கத்தைப் பரவச் செய்ய வேண்டுமென்று சட்டதிட்டங்களை உண்டாக்கி, நிஜமான மதக் கொள்கைகளை நிலைநாட்ட முயன்றார். பாதிரிகள் விவாக மில்லாமல் காலத்தைக் கழிப்பது இயற்கைக்கும் ஒழுக்கத்துக்கும் விரோத மென்று கண்டு, அவர்கள் விவாகம் செய்துகொண்டு, நெறியோடிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். ஆனால் இக்கொள்கைகளெல்லாம், இதாலி யாவிலும் ரோமாபுரியிலுமுள்ள பாதிரிகளுக்கு விரோதமாயிருந்தன. ஏனெனில், இவர்களது கௌரவத்துக்கெல்லாம் வெகு டம்பமான உத்ஸவங் களும், விலை யுயர்ந்த ஆடைகளும், வியக்கத்தக்க விக்கிரக ஆராதனை களுமே காரணமாயிருந்தன. விக்கிரக ஆராதனையை ஒழித்து, கிறிஸ்த வர்களும் மகம்மதியர்களைப் போல் உள்ள திலேயே கடவுளை தியானி க்க ஆரம்பித்து விட்டால், பாதிரிமார்களுக்கு இடமேது? ஆகையால், கிடைத்த பதவியையும், கௌரவத்தையும், செல்வத்தையும் விட மனமில்லாத மேற்குப் பாகத்திலுள்ள பாதிரிமார்களும் போப்சளும், கீழ் நாட்டில் பரவி வந்த கொள்கைகளை நிந்தித்து, அவற்றை நாடியவர்களிடத்துப் பகைமை பாராட்டினரா, அது வரை ஒன்றுபட்டிருந்த ரோமராஜ்யமும் அலங்கோல மடைந்து, இரண்டு பாகங்களாகப் பிளவுபட்டது. ஊரிரண்டு பட்டால் கூத் தாடிக் கெளிதாகையால், ராஜ்யத்தின் ஒற்றுமை குறைந்தவுடன், இரண்டு பாகங்களையுமே முரட்டு ஜாதியார்கள் கவர்ந்து கொள்ள யத்தனித்தார்கள். மகமதியர்களோடு சண்டை போட்டு, தமது பிரதான நகர மாகிய கான்ஸ்டாண்டிநோபிலைக் காப்பாற்றுவித்த கீழ்ப்பாகத்தின் சக்கர

வர்த்திகளுக்குப் போதுமான வேலையாகி விட்டது! மேற்கு நாடுகளோ, ஐரோபாவின் வடபாகத்தினின்றும் ஈசல் போல் புறப்பட்டு வெட்டுக்கிளியைப் போல் நாசம் செய்யக்கூடிய அநேக முரட்டு ஜாதியர்களின் வசமாயின. இந்நிலைமையில், மகமதியர்கள், ஆபிரிகாவை ஜெயித்த பின்னர், ஸ்பெயின் தேசத்தைக் கவர்ந்து கொண்டு, இதாலியாவுக்கு ஸமீபத்தில் கிறிஸ்தவர்களைத் தாக்க ஆரம்பித்தபொழுது, மேற்சொல்லிய முரட்டு ஜாதிகளில் பராங்கிகள் (Franks) என்ற கூட்டத்தாரின் தலைவனான சார்லஸ் என்பவன், அவர்களை முறியடித்துக் கிறிஸ்தவ லோகத்தைக் காப்பாற்றினனென்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வெற்றி ஏற்படாவிட்டால், உலகசரித்திரமே வேறுபட்டிருத்தல் கூடும்.

(இன்னும் வரும்.)

உலகமே! மேன்மையாய் ஒழுகு.*

உலகமே! அவள் பொருட்டு, ஒழுகு நீ மேன்மையாய்:
நாளும் உன்வயின் நடைபெறும் கொடுமையை,
வாளா மனிதர் வடிக்கு கண்ணீரை,
உள்ளவாறு உன்னிலே உணர்வாளாயின்,
பள்ளம் வீழ்புனலில், உள்ளம் பதைத்து,
நொந்து, வெள்குற்று, நொய்யளாம் அவள் தான்,
அந்தோ! உனக்கா உள்ளம் அழிவளே,
உலகமே! அவள் பொருட்டு ஒழுகு நீ மேன்மையாய்.

அமர்.

---

* From Laurence Binyon's
O World, be Nobler.

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள்.

நவீன சாஸ்திர நூல்கள் பெரும்பாலும் மேல்நாட்டுப் பாஷைகளில் எழுதப்பட்டிருக்கின்றன என்பதை இதற்கு முன்பே கூறியிருக்கிறோம். ஆகவே, நவீன சாஸ்திர ஞானத்தை நம்மவர்க்குத் தமிழ்மொழி வாயிலாகப் புகட்டுவது, அவ்வக்கலைகளில் கூறப்படும் பொருள்களையும், விஷயங்களையும் கருத்துக்களையும் வரையறுத்துத் தெளிவாய்க் குறிக்கவல்ல பிரதிபதங்கள் தமிழில் இருந்தாலன்றி முடியாது. அத்தகைய சொற்களோ தமிழில் இல்லை. புதிதாய்ச் சொற்களை அமைப்பதிலும் பிற பாஷைகளிலிருந்து கையாளுவதிலும் 'ஆன்றோர் வழக்கு' என்பதைக் கவனிக்க வேண்டாமெனினும், நவீன சாஸ்திர விஷயமாகத் தமிழில் எழுதும் ஒவ்வொருவரும், ஒருமித்த கட்டுப்பாடின்றி, அவரவர் இஷ்டம்போல் பிரதிபதங்களை உபயோகித்து விட்டால், முயற்சி நற்பயன்படாது, எல்லாம் குழப்பமாய் முடியும். இதைத் தடுத்து, தக்க சொற்களைத் தமிழில் அமைப்பதற்கென்றே, 1916ம் வரு அக்டோபர் மாதம் சேலத்தில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, ஒரு பத்திரிகை(Journal of the Tamil Scientific Terms Society) யும் பிரசுரிக்கப்பட்டது. நமது நண்பர்கள் மகா-ா-ா-ஸ்ரீ C. ராஜகோபாலாசாரியார் (B. A., B. L.,) K. G. வேங்கடசுப்பையர் (B. A., B. L.,) ஆகிய இருவருமே அப்பத்திரிகையின் ஆசிரியராகவும், மகா-ா-ா-ஸ்ரீ V. M. இராமநாதையர் (B. A; L. T.,) அச்சங்கத்தின் காரியதரிசியாகவும் ஏற்பட்டனர். வெளிவந்துள்ள நான்கு சஞ்சிகைகளில் அப்பத்திரிகை நல்லவேலை செய்துள்ளது; கணித சாஸ்திரம் (Arithmetic) ஒழிந்த மற்றச் சாஸ்திரங்கள் சம்பந்தமாய் அதன் வாயிலாக வெளிவந்துள்ள பிரதிபதங்களை, அப்பத்திராதிபர்களின் அனுமதியுடன், கீழே அச்சிட்டிருக்கிறோம். அப்பத்திரிகை செய்யப் புகுந்த வேலை நமது சங்க நோக்கத்துக்கு அதி முக்கியமான தென்பது கூறாமே விளங்கும். ஆகவே, இனி அந்த வேலையை மேல் நடத்தும்படி நமது சங்கத்தை அச்சங்கத்தினர் விரும்பினராக, நாம் அதற்கு மனமுவந்து ஒருப்படலானோம். இப் பகுதிமுதல், அந்த வேலையும் நமது பத்திரிகையின் பிரவர்த்திகளில் ஒன்றாகும். இம்

முயற்சியில் உள்ளபற்றுவாய்ந்த நண்பர்கள், சேலத்திலும் பிற இடங்களிலும் உள்ளோர் அனைவரும், இவ்விஷயமாக நமக்கு உதவி புரிந்து,நமது பத்திரிகையை ஆதரிப்பாரென்று நம்புகிறோம்:—

I BOTANY TERMS.

தாவர நூற் சொற்கள்.

Adventitious bud ஒட்டுக்குருத்து.
Adventitious root ஒட்டுவேர்.
Aerial root விழுது.
Alternate தனிச் சேர்க்கை.
Anther மகரந்தப்பை.
Aril, Caruncle or Strophiole } பீஜபுச்சம்.
Axil கணுவிடுக்கு.
Axile Placentation அண்டாசாய மத்யஸ்தம்பச்சேர்க்கை.
Axileary bud கணுக்குருத்து.
Basel Placentation அண்டாசயப் பீடச்சேர்க்கை.
Calyx புஷ்பகோசம்.
Compound leaf பின்னப்பத்ரம்
Cordate இரத்தாசயவடிவம்.
Cotyledons அங்குரதளங்கள்.
Cyme or centrifugal inflorescence } மத்தியாரம்பக் கொத்து.
Dichasium துவிருந்த மத்தியாரம்ப மஞ்சரி.
Dicotyledonows plant ஈராங்குரதள பீஜச்செடி.
Dioecious துவிலிங்கச் செடி.
Elliptic சமகோணாகாரம்.
Endosperm அங்குரச்சதனம்.
Endospermous seed அங்குரச்சதனமுள்ள விதை.
Exendosperomous seed அங்குரச்சதன மற்ற விதை.
Fig or Syconium விருந்தபரிணம சமுகக்கனி.
Filament கேசரத்தாள்.
Funicle பீஜபந்தகம்.
Head திரட்சி.
Incompletae அபூர்ணதளி.
Inferior ovary நீச அண்டாசயம்.
Inflorescence பூங்கொத்து.
Integuments அண்டத்தவக்கு.
Internode கணு மத்தியபாகம்.
Lamina or blade பத்ரம்
Lanceolate ஈட்டி வடிவம்.
Lateral roots கிளை வேர்கள்.
Leaf margin இலைவிளிம்பு
    Entire சமம்.
    Dentate பல்வெட்டு.
    Serrate இரம்பம் பல்வெட்டு
    Crenate வளையப் பல்வெட்டு.
Linear நீண்டவடிவம்.
Micropyle அண்ட விவரம்.
Monocotyledonous plant ஏகாங்குர தள பீஜச்செடி
Monoecious ஏகலிங்கச் செடி.
Monopetaleae சம்யுக்த தளி.
Net veined or reticulator veined } விஷமரேகா பத்ர இலை.
Node கணு
Nucleus அண்டப்பிரதானம்.
Oblong நீண்ட சதுரவடிவம்.
Opposite எதிர்முகச் சேர்க்கை.
Oval அண்டாகிருதி.
Ovary அண்டாசயம்.
Ovate தோளாகாரம்.
Ovule அண்டம்.

Palmately compound தாளபத்ர ஒழுங்குப் பின்னப்பத்திரம்.
Parallel veined leaf சமரேகாபத்ரம்
Parietal Placentation அண்டா சயச்சுவர்ச் சேர்க்கை.
Pedicel விருந்தம்
Peduncle விருந்தம்
Perisperm அங்குர பஹிச்சதனம்.
Petal தளங்கள்.
Petiole இலைக்காம்பு
Pinnately compound சிறகு ஒழுங்குப் பின்னப்பத்திரம்.
Pistil or gynaecium அண்டகோசம்
Pistillate flower பெண்பூ.
Placenta அண்டச் சேர்க்கையிடம்.
Pneumataphores or breathing roots } சுவாச வேர்கள்.
Pollen மகரந்தத்தூள்.
Pollen grain மகரந்தத் துணுக்கை.
Raceme குலை.
Root hairs வேர்த்துய்கள்.
Rotate சக்கிராகாரம்.
Rotund வட்டவடிவு.
Sagittate அம்புநுனி வடிவம்.
Seed விதை.
Seedling அங்குரம்.
Shoot பிரகாண்டம்.
Simple leaf ஏக பத்திரம்.
Simple ovary சாமான்ய அண்டாசயம்.
Spike கதிர்.
Stamens கேசரங்கள்.
Staminate flower ஆண்பூ.
Stigma சிலாக்ரம்.
Stipule கணுப்புச்சம்
Stomata பக்ர சூக்ஷ்மரந்திரம்.
Style சிலம்.
Superior ovary உச்ச அண்டாசயம்.
Syncarpous ovary இணைப்பு அண்டாசயம்.
Tap root ஆணிவேர்.
Terminul bud நுனிக்குருத்து.
Umbel கொத்து.

II CHEMISTRY TERMS.

இரசாயன சாஸ்திரச் சொற்கள்.

Aluminium ஸ்படம்.
Antimony அஞ்சனம்.
Argon ஆர்க்கனம்.
Arsenic தாலம்.
Bismuth ஸிமிளா.
Boron டங்கம்.
Bromine பிரமினம்.
Calcium கடிகம்.
Chlorine அரினம், பீதவாயு.
Chromium க்ரோமம்.
Cobalt கோபால்டம்.
Copper செம்பு.
Elements மூலப்பொருள்கள்.
Fluorine ப்லவம்.
Hydrogen. உச்சனம்
Iodine நைலம்.
Lead ஈயம்.
Magnesium மக்னம்.
Manganese மாங்கலம்.
Mercury பாதரஸம்.
Nickel நிகலம்.
Nitrogen நதரஜனம், யவஜதம்.
Oxygen அமலஜனம்.
Phosphorus ஸ்புரம்.
Platinum பிலாடினம்.
Potassium பொடாஷியம்.
Silicon சைலம்.
Tin வங்கம்.
Zinc துத்தநாகம்.

III PHYSICS TERMS.

பௌதீக சாஸ்திரச் சொற்கள்.

Absolute density சுத்தகனம்.
Acceleration வேகவிருத்தி.
Action கிரியை.
Adhesion ஆஸங்கம்.
Air காற்று.
Air pump காற்று றிஞ்சி
Amplitude விஸ்தாரம்.
Apparatus உபகரணம்.
Atmospheric pressure காற்று நிஷ்பீடனம்.
Atom பரமாணு.
Barometer காற்றுபாரமாணி.
Brittleness நொய்மை
Capillarity அபிஸர்ப்பணம்.
Centre of gravity குருத்வகேந்திரம்.
Centre of mass பிண்டகேந்திரம்.
Cohesion சம்ஹதி.
Column as of a liquid } ஸ்தம்பம்.
Compound சம்யோகப்பொருள்.
Compressibility அமுங்குந்தன்மை
Contraction ஆகுஞ்சனம், சுருங்கல்.
Cross-section அக்ஷசேதம்.
Density செறிவு (அணுவின் அடர்த்தி).
Derived unit உத்பவ மாத்திரை.
Direction- as of forces } திசை.
Displacement (motion) கதி.
Dissolve கரை.
Distillation அதஃபாதனம்.
Ductility தானவசக்தி.
Dyne டைன்.
Elasticity ஸ்திதி ஸ்தாபகம்.
Element மூலப்பொருள்.
Energy சக்தி, திறம்.
Equations of motion கதி சமீகரணங்கள்.
Equilibrant ஈடு.
Equilibrium சாமியம், சம நிலை.
Ether ஆகாயம்.
Expansion பிரசாரணம்.
Experiment சோதனை.
Foot-pound பவுனடி.
Foot-poundal பவுண்டலடி.
Force பலம், வன்மை.
Fundamental unit மூலமாத்திரை.
Gas வாயு
Grammer கிராம்.
Gravitation சர்வகுருத்துவம், மகாகர்ஷணம்.
Gravity குருத்துவம்,புவா கர்ஷணம்
Hardness கடினம்.
Heat உஷ்ணம்.
Horizontal திரியக்.
Horse power H. P. அ. சா. அச்வசாமர்த்தியம்.
Hydraulic press நீர்முக்குயந்திரம்.
Hydrometer திரவகனமானி.
Ion தன் மாத்திரை.
Inclined plane சாய்தலம்.
Inertia ஜடத்துவம்.
Instrument கருவி.
Kilogramme சஹஸ்ரக்ராம்.
Law of parallelogram of forces } பலங்களின் சமாந்தர வடிவு நியமம்
Law of parallelogram of velocities } வேகங்களின் சமாந்திர வடிவு நியமம்.
Level மட்டம்.
Liquefaction திரவீகரணம்.
Liquid திரவம்.

Machine இயந்திரம்.
Magnitude அளவு, பரிமாணம்.
Malleability தகடாகுந்தன்மை.
Manemoter விஷ்பீடனமானி.
Mass பிண்டம், விஷயம்.
Matter பொருள்.
Melt உருக்கு.
Mixture மிசிரப் பொருள்.
Molecule அணு.
Momentum விசை.
Motion [of all kinds oscillatory, changing place, etc.] } அசைவு, கவனம், கதி.
Opposite எதிர்முகம்.
Pendulum லம்பகம்.
Perpendicular இலம்பம், நிறுதிட்டலு
Plumbhline தூக்கு நூல்.
Point of application of a force } பலம் செலுத்தும் முனை.
Porosity இரந்திர முடைமை.
Power ஸஹஸ் (ஆற்றல்) சாமர்த்தியம்
Poundal பவுண்டல்.
Pressure பீடனம், அமுக்கு பீடனம்,
Quantity of heat உஷ்ண பரிமாணம்
Reaction பிரதிகிரியை.
Relative Density கனதாரதரம்.
Resultant லப்தம்.
Retardation வேகக்ஷயம்.
Shape [as in the shape of a solid] } ஆகிருதி.
Solid த்ருடம்.
Solution திராவகம்.
Space in equations of motion } தூரம்.
[V=வே;g = கு;t=கா;a = வி; s=தூ; m=பி;]
Specific gravity கனதாரதரம்.
Speed வேகம் (விரைவு)
State [as in states of matter] ரூபம். { த்ருட ரூபம், திரவ ரூபம், வாயு ரூபம்.
Strain விகாரம்.
Stress பீடனம்.
Sublimation ஊர்த்துவபாதனம்.
Surface தலம்.
Syphon வளை குழாய்.
Syringe பீச்சாங்குழல்.
Temperature உஷ்ண நிலை.
Tenacity தாரணைசக்தி.
Test-tube சோதனைக் குழாய்
Tool ஆயுதம்,
Tube குழாய்.
U-Tube பகரக்குழாய்.
Unequal அசமம்.
Unit [in Physics, quantiative } மாத்திரை.
Uneven விஷமம்.
Valve கபாடம்.
Vapour ஆவி.
Velocity வேகம்.
Verification நிரூபணம்.
Vertical
[upward] } ஊர்த்துவம் அதரம்.
[downward] } ஊர்த்துவாதரம்.
Vibration அதிர்ச்சி.
Viscosity ஸ்நிக் ததத்துவம்.
Volume கனபரிமாணம்.
Water-pump ஜலயந்திரம்.
Weight பாரம், எடை.
Work வேலை, க்ரியை, (செய்கை)
Abdomen உதரம்.
Alimentary Canal இரைக்குழாய்.

IV. PHYSIOLOGY TERMS.

சரீர சாஸ்திரச் சொற்கள்.

Anatomy அங்காதிபாதம்.
Artery தமனி.
Bladder மூத்திராசயம்.
Capillary தந்துகி.
Cartilage குருத்தெலும்பு.
Clavicle ஜத்ருகம்.
Coccyx புச்ச எலும்பு.
Frontal bone நெற்றி எலும்பு.
Flesh தசை.
Heart இருதயம்-இரிகம்
for forming compound terms
Intestines குடல்.
Kidneys விருக்கம்.
Liver ஈரல்.
Lungs சுவாசாசயம், பப்புசம்.
Mammal ஸ்தன்ய ஜந்து.
Mandible மோவாயெலும்பு.
Marrow மஜ்ஜை.
Muscle பேசி
Nasal bone நாசியெலும்பு.
Nerve நரம்பு.
Occipital bone பிடர் எலும்பு.
Parietal bone சிமந்த எலும்பு.
Physiology சரீர தர்மம்.
Pulse நாடி.
Rib பழு.
Sacrum த்ரிகம்.
Skeleton கங்காலம்.
Skull கபாலம்.
Spinal cord கசேருலதை.
Sternum நெஞ்செலும்பு.
Stomach இரைப்பை, ஜடரம்
Tendon தசைநார்.
Thorax நெஞ்சறை.
Valve கபாடம்.
Vein சிரை.
Vertbera கசேருமணி.
Vertebral column கசேரு.
Vertebrate கசேருஜந்து.
Vessel நாளம்.

V. ASTRONOMY TERMS.

வானசாஸ்திரச் சொற்கள்.

Aqueous vapour நீராவி.
Comet தூமகேது.
Eccentricity கேந்த்ரச் யுக்தி.
Jupiter வியாழன்.
Mars செவ்வாய்
Mercury புதன்.
Meteor உற்கை.
Neptune நெப்ட்யூன்.
Orbit வட்டம்.
Planet கிரகம்.
Pole த்ருவம்.
Satellite உபகிரகம்.
Saturn சனி.
Solar System சூரியமண்டலம்.
Spectroscope சாயாதர்சன யந்திரம்.
Vapour ஆவி.
Venus சுக்கிரன்.
Uranus யூரனஸ்.
Zodiac பவனசக்கரம், இராசிமண்டலம்.

தமிழ்ச்செல்வம்.

(146-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

நிலச்சுவான்களின் கடமை.

8. "செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்." திருக்குறள்.

நிலத்திற்கு உரியவன், அதன்கண் நாள் தோறும் சென்று பார்த்து வேண்டுவன செய்யாது சோம்பியிருப்பின், அந்நிலம், தன்னிடம் சென்று தான் வேண்டுவன செய்யாது கணவன் வேறிடத்தில் இருந்தபொழுது மனையாள் தன்னுள்ளே வெறுப்புற்று ஊடுமாறுபோல, அவனோடு ஊடிவிடும், என்பது இதன் பொருள். இக்காலத்தில் நிலச்சுவான்களாயிருக்கும் பலரைப்போல, தனது நிலத்தைக் கண்காணிக்கும்படி பிறரை ஏவியிராது தானே செல்லவேண்டு மென்பதையும்; அங்ஙனம் செய்யாக்கால், தன் மனைவியைக் கவனியாத கணவனைப்போல, நிலச்சுவானும் போகம் இழப்பான் என்பதையும் நன்கு விளக்கும்படி, திருவள்ளுவர் இக்குறள்வெண்பாவில் கையாண்டுள்ள உவமை சாலப் பொருத்தமுடைத்து.

பெண் மக்கள்.

9. "பலவுறு நறும் சாந்தம், படுப்பவர்க்கு அல்லதை,
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

10. "சீர்கெழு வெண்முத்தம், அணிபவர்க்கு அல்லதை,
நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்?
தேருங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

11. "ஏழ்புணர் இன்இசை, முரல்பவர்க்கு அல்லதை,
யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?
சூழுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.,,

கலித்தொகை—9வது பாட்டு

பெண்மக்கள், பிறந்த குடியிலன்றி, புகுந்த குடியில்தான் விளங்கிப் பயனுறுவர் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வுண்மையைக் கூறும் இம் மூன்று கலிப்பாட்டுக்களும், பெண் மக்களை, முறையே, மலையில் விளைந்தாலும்

காட்டில் அதனை அரைத்துப் பூசிக் கொள்ளுபவருக்கே மணத்தைத் தரும் சந்தனமும், கடலில் விளைந்தாலும் ஊரில் அதனை அணிவாரையே அழகு செய்யும் முத்தும், யாழில் பிறந்தாலும் முரல்பவருக்கே இன்பத்தைத் தரும் இசையொலியும் ஆகிய மூன்று சிரேஷ்டமான பொருள்களுக்கு ஒப்பிட்டிருப்பது சால அழகிது.

கல்வி.

12. "தவலரும்[1] தொல்கேள்வித் தன்மை உடையார்,
இகலிலர்,[2] எஃகுடையார்,[3] தம்முள் குழீஇ[4]
நகலின் இனிதாயில், காண்பாம், அகல்வானத்து
உம்டர்[5] உறைவார் பதி." நாலடியார்.

போகங்களுக்குள் சிறந்ததை, 'தேவபோகம்' 'இந்திரபோகம்' என்று புகழ்வது உலக வழக்கு. இந்த வெண்பாவிலே, மகாரவிகனுன ஒரு கவி, அத்தகைய தேவபோகத்தையும இழித்துக் கூறியிருக்கிறான். 'சிறந்த அறிவும், ஒத்த உணர்ச்சியும், கூரிய மதியும் உடைய கல்விமான்களோடு கூடி அளவளாவி அனுபவிக்கும் கல்வி யின்பத்தை விடத் தேவபோகம் என்பது இனிப்பாயிருக்குமாயின், அப்பொழுது அதைப்பற்றி ஆலோசிப்போம்' என்று, இக்கவி இறுமாப்புடன் கம்பீரமாய்க் கூறுவது பொருந்தகதென்று, அத்தகைய இன்பத்தை அனுபவித்துள்ளார் எவருமே மறுக்கார்.

மனைவி.

13. "உண்ணும் ஆரமுதுமாய், மெய் உறவுமாய், உயிரும் ஆகி,
கண்ணுமாய், கருத்துமாய், செய்கருமமாய், கருமம் தன்னால்
நண்ணும் மாநிதியுமாய், அந்நல்நிதிப் பயனுமாய், என்
எண்ணு ஆம் உன்னை நீங்கி யான் எவ்வாறு உய்வேன் என்றான்."

மெய்ஞ்ஞான விளக்கம்.

தன் மனைவியை இழந்தான் ஒருவனது கூற்றாகும் இச்செய்யுள் மிகவும் உருக்கமானது.

அ. மா

1. குற்றமில்லாத. 2. தம்முள் மாறுபடுதல் இல்லாராகி. 3. கூரிய புத்தியினர். 4. கூடி. 5. தேவர்.

பால விநோதக் கதைகள்.

(ஒரு தாதா எழுதியன.)

3. காக்கையும் வேடனும்.

காவிரி நதி பார்த்தது உண்டா? தமிழ் நாட்டில் உள்ள ஆறுகளில் எல்லாம் அதுதான் பெரிது. சோழ நாட்டின் செழிப்புக்கு அதுதான் காரணம். அதன் இருகரையும் பூஞ்சோலைகளும் பழச்சோலைகளும் அடர்ந்து இருக்கும். ஸ்ரீரங்கம் பக்கத்தில் உள்ள காவிரிக் கரையில், ஒரு பெரிய சோலை இருக்கிறது. அதில் அநேகம் பக்ஷிகள் வாழ்ந்து வந்தன. அவற்றுள் ஒரு காக்கையும் தன் குஞ்சுகளுடன் இருந்தது. தினம்தோறும், காக்கை, வெளியே சென்று, இரைதேடி வந்து, தன் குஞ்சுகளின் வாய்களில் கொடுக்கும். "காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்று கேட்டதில்லையா? பக்ஷிகளின் குஞ்சுகள், மிருகங்களின் குட்டிகளைப்போல, தாயின் பால் குடிப்பது இல்லை என்பது, உனக்குத் தெரியுமே. தானே பறந்து போய் இரைதேடிப் பிழைக்கும் சக்தி உண்டாகும் வரை, பக்ஷிக் குஞ்சுகளுக்கு, தாய்ப் பக்ஷிகள் தாம் இரை கொண்டு வந்து கொடுக்கும்; அப்படி இல்லாவிட்டால், குஞ்சுகள் இரை இன்றிச் செத்துப்போம்.

அந்தக் காகம், வழக்கம் போல் ஒரு நாள், தன் குஞ்சுகளை கூட்டில் விட்டுவிட்டு, வெளியே இரை தேடப்போயிற்று. மாமிசம் தின்பவரும் கூட, சாதாரணமாய், காக்கையைப் புசிப்பதில்லை; அதனால், யாரும் காக்கை வேட்டை ஆடுவதில்லை. ஆனால், குறவர் மட்டும் காகத்தையும் வலை போட்டு, கண்ணி வைத்துப் பிடித்து, தின்பதுண்டு. அப்படியே, ஒரு குறவன் வைத்திருந்த வலைக்குள், காக்கை சிக்கி விட்டது. அவன், அதைப பிடித்து, தன் கூடைப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டான். தன் குடிசைக்குப் போன பின்பு, கொன்று கறிசமைத்துத் தின்ன நினைத்திருந்தான். இது நிற்க:

ஆற்றங்கரைத் தோப்பில் கூட்டில் இருந்த குஞ்சுகள், சாயுங்காலம்வரை தாய் வராமையால் தவித்து, பசியால் வருந்திக் கொண்

டிருந்தன. தாய் வலையில் சிக்கிச் செத்தால், தாமும் சாக வேண்டியது தான் என்று, குஞ்சுகளுக்குத் தெரியும். ஆகவே, அவை, தாயை எதிர் நோக்கித் தத்தளிக்கும் வேளையிலே, குறவன்,



வேறு இரைகளைத் தேடிக் கொண்டு, அந்தச் சோலைக்கே வந்து சேர்ந்தான். கூடைப் பெட்டிக்குள் இருந்த காகத்துக்கு இடம் தெரியவே, அது, தன் குஞ்சுகளை நினைந்து, சுவாமியை வேண்டிக் கொள்வது போல, "கா! கா! கா!" என்று கதறிற்று. தாயின் குரலைக்கேட்ட குஞ்சுகள், கூட்டிலிருந்து எட்டிப் பார்த்தன. தாய்க் காகம் குறவன் கூடைக்குள் இருப்பது, அவைகளுக்குத் தெரிந்தது. உடனே அக்குஞ்சுகள், துக்கம் பொறுக்க மாட்டாமல், புலம்பி அழத் தொடங்கின:

"ஆயா, நீ, அம்மா, நீ, ஆகாயம் போனாயோ ?
மாயக் குறவன் வந்து வழி மறைத்துக் கொண்டானோ ?
தட்டி மறைத்தானோ ? பெட்டியிலே போட்டானோ ?
வட்டிலிலே கஞ்சி விட்டு, மக்களையும் சூழவைத்து,
மாந்தோப்பில் வைத்து வளர்ப்பாரும் இல்லையே !"

இதைக் கேட்டவுடன், குறவனுடைய கொடிய மனமும் இளகி விட்டது. அவனுக்கு நாலு குழந்தைகள் உண்டு. தன் பெண்சாதி இறந்துவிட்டால், தன் குழந்தைகள் எப்படித் தவிக்கும் என்று எண்ணிப் பார்த்தான். உடனே காக்கையின் குஞ்சுகளின் மேல் அவனுக்கு இரக்கம் வந்துவிட்டது. தன் கூடையைத் திறந்து, காகத்தை வெளியே விட்டுவிட்டான். காக்கை, சந்தோஷமாய்ப் பறந்துபோய், தன் குஞ்சுகளுடன் சேர்ந்து கொண்டது.

" 'குழல்[1] இனிது, யாழ்[2] இனிது' என்பவர், தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்."
"அமிழ்தினும் ஆற்ற[3] இனிதே, தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்."
"மக்கள் மெய்[4] தீண்டல் உடல்கு இன்பம்; மற்று அவர் தம்
சொல் கேட்டால் இன்பம் செவிக்கு.'

திருக்குறள்.

1. வேய்ங்குழல். 2. வீணை. 3 அதிகமாக. 4. உடம்பு.

மதிப்புரை.

"குணம்நாடி, குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி, மிக்க கொளல்."—திருக்குறள்.

அரிச்சந்திரன்:—[நல்லூர் வீரகவிராஜரது அரிச்சந்திர புராணத்தைத் தழுவி, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் உதவித் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ ஊ- சா- வேங்கடராமையரால் எழுதப் பட்டது. 146- பக்கங்கள். 10 அணா) **நளன்சரிதம்**:—[நைடதம், நளவெண்பா என்னும் நூல்களைத் தழுவி ம-ா-ா-ஸ்ரீ T. P. நாராயணசாமிப் பிள்ளையால் எழுதப்பட்டது- 286- பக்கங்கள்-ஒரு ரூபா] கும்பகோணம் ஹிந்து எடுகேஷனல் டிரேடிங் கம்பெனியார் பிரசுரித்துள்ள இவ்விரண்டு வசன நூல்களும் நமக்குவந்துள. இவற்றுள், அரிச்சந்திரன் நல்ல தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது; நாம் பார்த்த வரையில, பிழைகளுமில்லை. அநீதி பாகத்தோற்றும் விசுவாமித்திரர் செயலுக்கும் (38-ம்பக்கத்தில்), ஒருவிதந்யாயங்கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. நளன் சரித்திரத்தின் தமிழ்நடை நயமாகவில்லை; அதில் பிழைகளும் உள.

கம்பராமாயணச் சுருக்கம்- பாலகாண்டம்:—புதுச்சேரியில் கம்ப நிலையத்தில் வாழும் ம-ா-ா-ஸ்ரீ V. V. சுப்பிரமண்ய ஐயரவர்கள் பிரசுரம் செய்தது- விலை ரூ-ா 2. கம்பராமாயணத்தில் சிறந்த செய்யுள்களாகத் தோற்றுபவைகளை மட்டுமே தெரிந்தெடுத்து, கதைத் தொடர்ச்சி சிதைவுறாமல் பதிப்பிக்கப்பட்டது. செய்யுள்களைச் சந்திவிகாரங்களின்றி அச்சிடுவதுடன், அருஞ்சொல் அகராதி, அரும்பொருள் விளக்கம், முதலிய அநுபந்தங்களையும், பதிப்பாசிரியர், படிப்போர்க்கு உதவியாகச் சேர்த்துப் பதிப்பித்துளர். தமிழில் விசேஷப் பயிற்சியில்லாதார்க்கு, சங்கிரகமாயுள்ள இவ் அரும்பொருள் விளக்கம் போதாதென்று தோற்றுகின்றது. பின்னைய காண்டங்களின் பதிப்புகளில் இக்குறையை நிரப்பின் நன்றாகும். இப்புத்தகத்தின் விலை சிறிது அதிகமாகத் தோற்றுகின்றது. கம்பராமாயணத்தைப் பலர் வாங்கிப் படிக்கும்படி செய்ய, இதன் விலையைக் குறைக்க வேண்டும். கம்பர் உருவப்படமாக இதில் சேர்க்கப்பட்டிருப்பதைப் பின் பதிப்புக்களில் நீக்கிவிடலாமென்றும் தோற்றுகின்றது.

பத்திரிகைகள்:—பின்வரும் பத்திரிகைகளின் பிரதிகள் நமக்குக் கிடைத்துள:- ஞானபிமானி; பிரஜானுகூலன்; தமிழன்; ஆனந்த போதினி; பேராசிரியன்; ஜனோபகாரி; விவேகோதயம், வர்த்தகமித்திரன்.

இரண்டாம் களம்.

இடம்:—தண்ட காரணியம்: சரபங்கர் ஆச்சிரமத்துக்குச் செல்லும்வழி.

காலம்:—முற்பகல்.

பாத்திரங்கள்:—இராமர், இலக்ஷ்மணர்; சீதை.

[இராமர் சீதை இருவரும் சேர்ந்தும், இலக்ஷ்மணர் அவர்களைத் தொடர்ந்தும் செல்கின்றனர்.]

இராமர்:—(இலக்ஷ்மணரை நோக்கி,) விராதன் மகா பலசாலி. அவன் தன்னுடைய சாப உருவத்தை நீக்கி, கந்தருவ உருவம் கொண்ட பொழுது எவ்வளவு அழகாகத் தோன்றினன். ஆனால், அதற்கு முன் அவன் செய்த கொடுஞ் செயல் என் மனத்தை மிகவும் புண்படுத்தியது. அவன் செய்த துஷ்டச் செய்கையால், சீதை எவ்வளவு துக்கமும் பயமும் அடைந்தாள். விராதனை நாம் சந்தித்த அந்த இடமே மகா பயங்கரமாயிருந்தது. அவ்விடத்தை விட்டு விலகி வந்தது நல்லதாயிற்று. அங்கிருந்தால் இன்னும் என்ன என்ன சங்கடங்கள் நேர்ந்திருக்குமோ? (சீதையை நோக்கி,) சீதா! 'வனத்தில் இராக்ஷஸர் முதலியவர்களால் ஆபத்துக்களுண்டாகும்' என்று அயோத்தியில் உனக்கு நான் சொன்னது இப்போது நிதரிசனமாயிற்றல்லவா?

சீதை:—எனக்கு வந்த ஆபத்தைப் போக்குவதற்கு நீங்கள் இருவரும் இருந்தீர்கள். என்னை அயோத்தியில் விட்டு வருகிறேன் என்றீர்களே. அப்படி நீங்கள் வந்திருந்தால் இப்பொழுது நேரவிருந்தது போன்ற ஆபத்து ஏதேனும் உங்களுக்கு நேர்ந்திருந்தால் அது எனக்குத் தெரிய இடமுண்டா? நான் அதை அறிந்து கொள்ளவும் முடியுமா? ஆபத்தானாலும் சம்பத்தானாலும் நாம் இருவரும் சேர்ந்தனுபவிப்பது நல்லதல்லவா?

இராமர்:—சீதா, அன்பின் மிகுதியால் நீ அவ்வாறு சொல்கிறாய். சம்பத்தானால் நாமிருவரும் சேர்ந்தனுபவிப்பது நல்லதுதான். ஆபத்தானால் அப்படியல்ல. ஏனெனில், நான் ஆடவன்; ஆபத்துக்கு அஞ்சாது எதிர்த்து நிற்பேன். நீயோ பெண்பால். அந்தப்புரத்தில் சீரும் செல்வமுமாக இருக்கவேண்டியவள். ஆபத்

துக்கு அஞ்சுவாய்; துன்பத்துக்குத் துயருறுவாய். இக்கருத்துடனேயே நான் உன்னை அயோத்தியிலேயே இருக்கும்படி கூறினேன்.

சீதை:—நாதா, கற்புடை மகளிர்க்கு நாயகனோடிருப்பதே இன்பம்; நாயகனைப் பிரிந்திருப்பதே துன்பம். அல்லாமல், வேறு இன்பமும் துன்பமும் உண்டோ?

இலக்ஷ்மணர்:—(இராமரையும் சீதையையும் நோக்கி) வில்லும் கையுமாய் நான் இருக்கும் வரையில் உங்களிருவர்க்கும் ஓர் ஆபத்தேனும் துன்பமேனும் உண்டாகுமோ?

இராமர்:—இலக்ஷ்மணா!

1. மூவகை யமரரும், உலகம் மும்மையும்
மேவரும் பகையெனக் காக மேல்வரின்
ஏவரே கடப்பவர்? எம்பி! நீயுளை
ஆவதே வலி. இனி அரணும் வேண்டுமோ?

தம்பி! எனக்குப் பகையாக மும்மூர்த்திகளும் மூவுலகத்தாரும் திரண்டு வந்தாலும் என்ன? அவர்களில் ஒருவராவது என்னை வெல்வாரோ? நீ அருகிலிருப்பதே எனக்குப் பெரியதொரு வலிமையன்றோ? வேறு காவல் எனக்கேன்? (சீதையை நோக்கி) சீதா, சுமத்திரை அன்னையார் எனக்குச் செய்த பெரிய நன்மை, இலக்ஷ்மணனை எனக்குத் தம்பியாகப் பெற்றுக் கொடுத்ததேயல்லவா?

சீதை:—ஆம் நாதா, இவ்விஷயத்தில் தாங்கள் பாக்கியஞ்செய்தவர்களே. தங்கள் பாக்கியத்தில் எனக்கும் பங்குண்டல்லவா?

இராமர்:—என்னிடம் இவ்வளவு பேரன்பு படைத்த மனைவியும் தம்பியும் என் சமீபத்தில் எப்பொழுதும் பிரியாமல் இருக்கும் பொழுது எனக்கென்ன குறை? நான் பாக்கியவன்தான். அதிருக்கட்டும், மகாத்மாவாகிய சரபங்கருடைய ஆச்சிரமம் இங்கிருப்பதாகக் கேள்விப்பட்டோமல்லவா? அது இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறதோ?

இலக்ஷ்மணர்:—ஆ, இந்த இடம் எவ்வளவு மனோரம்மியமாயிருக்கிறது! இதுதான் சரபங்கர் இருப்பிடமாயிருக்கலாமென்று நினைக்கிறேன்.

---

1. (உரை) மேவு அரும் பகை-இட்டுதற்கு அருமையான பகை; உளை-இருக்கின்றாய்; அரண்-காவல்.

சீதை:—(இராமரை நோக்கி,) பிராணபதீ! அதோ பூமிக்கு மேலே சிறிது தூரத்தில் அழகிய குதிரைகள் பூட்டிச் சூரியதேஜஸோடு விளங்கும் ஒரு திவ்ய ரதம் நிற்கின்றதே. என்ன அது? வெகு ஆச்சரியமாயிருக்கிறதே !

இலக்ஷ்மணர்:—(இராமரை நோக்கி,) ஆம் அண்ணா. அவ்விடம் தேவேந்திர சபைபோலவிளங்குகிறதே. முற்றுந் துறந்த முனிவர்களுக்கு இருப்பிடமான இவ்வனத்தில் இரதமும் குதிரைகளும்; யாழொலியும் இன்னிசையும் எப்படி வந்தன! அதோ பார்த்தீர்களா? ஒரு மகரிஷி தமது ஆச்சிரமத்தில் வீற்றிருக்கிறார். அவருக்கருகில் திவ்ய தேஜசுடைய யாரோ ஒரு மகா புருஷன் நிற்கின்றான். முனிவர்கள் பலர் அம்மகரிஷியைச் சூழ்ந்து உபசரித்துக்கொண்டு நிற்கின்றனரே. ஒருகால் அந்த மகரிஷிதான் சரபங்கரா யிருப்பாரோ?

இராமர்:—ஆம். அவர்தான் சரபங்கர் என்று தோன்றுகிறது. ஆ, அந்த மகரிஷி என்ன ஞானதேஜசுடையவராய்த் தோற்றுகிறார்! சாக்ஷாத் பரப்பிரமம்போல் விளங்குகின்றாரே! அவர்க்கருகே பயபக்தியுடன் நிற்பவன் தேவேந்திரன்போலிருக்கிறது. தேவர்களும் தேவமாதர்களும் சூழ்ந்திருக்கின்றனர், கந்தருவன் ஒருவன் வெண்கொற்றக்குடை கவிக்கின்றான். சுந்தரமான அந்த ரதம் தேவவிமானம். ஆ, அது எவ்வளவு பிரகாசத்துடன், மத்தியான சூரியன் போல் விளங்குகிறது! தம்பீ! அதோ பார், தேவேந்திரன் நம்மை நோக்கி வருகிறான்.

இலக்ஷ்மணர்:—ஆம், அண்ணா, அவரைப் பார்த்தால் தேவேந்திரன் போலத்தான் தோற்றுகிறது. தாம் மட்டும் தனியே வருகிறாரே, ஏன்?

இராமர்:—என்ன விசேஷமோ தெரியவில்லை. இதோ நெருங்கி வந்து விட்டான். சற்றுப்பொறு, எல்லாம் தெரிந்துவிடும்.

[தேவேந்திரன் இராமர் எதிரே வந்து கைகூப்பி,]

தேவேந்திரன்:—வருக, வருக. தாசரதீ! வருக. உம்மைக்கண்டு நான் கிருதார்த்தனானேன்.

* கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதீ!

* புண்டரீக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே!
திண்டிறலால் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்!

* தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே! தயரதன்றன்
மாமதலாய்! மைதிலிதன் மணவாளா!

* பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேயருளி
ஆராவன் பிளையவனோ டருங்கானம் அடைந்தவனே!

* சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானம் அடைந்தவனே!
அற்றவர்கட் கருமருந்தே! அயோத்திநகர்க் கதிபதியே!

* தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!
யாவரும்வந் தடிவணங்க அரங்கநகர்த் துயின்றவனே!

1. திருக்கலந்து சேருமார்ப! தேவதேவ தேவனே!
இருக்கலந்த வேதநீதி யாகிநின்ற நின்மலா!
கருக்கலந்த காளமேக மேனியாய நின்பெயர்
உருக்கலந் தொழிவிலா துரைக்குமா றுரைசெயே.

இலக்ஷ்மி மணவாளா! தேவாதி தேவா! வேதகாரணா! நின்மல சொரூபா! நீலவண்ணா! உம்முடைய திருநாமத்தை அடியேன் என்றென்றும் மறவாது ஜபிக்க அருள்செய்யும்! எந்தாய்! மூவடியால் உலகளந்த முதல்வா! என் ஆவியும் அமுதமுமான மெய்யா! உமது திவ்ய மங்கள சொரூபத்தைத் தவிர நான் பிறிதொன்றைத் தியானியேன். ஐயனே!

தேர்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற
சுடரே! தொடக்கறுத்தோர் சுற்றமே! பற்றி
நீந்த அரிய நெடுங்கருணைக் கெல்லாம்
நிலையமே! வேத நெறிமுறையின் நேடி
ஆய்ந்த உணர்வின் உணர்வே! பகையால்
அலைப்புண் டடியேம் அடிபோற்ற அந்நாள்
ஈந்த வரமுதவ எய்தினையே, எந்தாய்!
இருநிலத்தவோ நின் இணையடித் தாமரைதாம்!

---

* நாலாயிரம்.

1 நாலாயிரம். (அ-ரை) திரு-இலக்ஷ்மி; இருக்கலந்த-இருக்கு (வேதம்) கலந்த.

2 (அ-ரை) தொடக்கறுத்தோர்-பற்றறுத்தோர்; நேடி-தேடி; ஆய்ந்த-ஆராய்ந்த.

ஐயனே! எல்லாப் பொருள்களிலும் கலந்தும் கலவாது நிற்கும் ஞானச்சுடரே! சோதியுருவே! பற்றற்ற ஞானியர்க்குப் பற்றான பரம் பொருளே! கரையற்ற கருணைக்கடலே! அருளாலயமே! வேதநெறியால் தேடிக்காண்பார்க்குத் தெரிய நிற்கும் தத்துவ ஞான சொரூபமே! பகைவர்களால் துன்புறுத்தப் பட்டு யாங்கள் உமது திருவடியைத் துதித்தோம். தேவரீர் எம்மைக் காப்பதாக வரமளித்தீர். அவ்வரத்தை முற்றுவிக்க இவ்வுலகில் அவதரித்தருளினீர். ஆயினும் உமது திருப்பாதாரவிந்தங்கள் நிலத்திற் படத்தக்கனவோ?

மேவார்தா ரில்லை; மேவினரும் இல்லை;
வெளியோ டிருளில்லை; மேல்கீழும் இல்லை;
மூவாமை இல்லை; மூத்தமையும் இல்லை;
முதலிடையோ டறில்லை; முன்னொடு பின்னில்லை;
தேவா இங் கிவ்வோர் சென் றநிலை என்றால்,
சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிகள் நோவக்
காவா தொழியிற் பழிபெரிதோ! அன்றேற்
கருங்கடலிற் கண்வளராய்! கைம்மா றுமுண்டோ!

தேவாதி தேவா! திருப்பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் ஆதி நாராயணா! உமக்குப் பகைவருமில்லை, நட்பினருமில்லை; ஒளியுமில்லை இருளுமில்லை; மேலும் இல்லை, கீழுமில்லை; இளமையும் இல்லை, முதுமையும் இல்லை; ஆதியும் இல்லை, நடுவும் இல்லை, அந்தமும் இல்லை; முன்னும் இல்லை பின்னும் இல்லை! இவ்வாறு நிர்க்குண சொரூபமாய் உள்ள தேவரீர் கோதண்டத்தைக் கையில் ஏந்தி, செந்தாமரைத் திருவடிகள் வருந்த இக்காட்டில் நடந்துவந்து எம்மைக் காவாமற்போனால் என்ன? பெரும்பழி உண்டாமோ? அல்லது, எம்மிடத்து எதிர்பார்க்கும் பிரதியுபகாரம் ஏதேனும் உண்டோ? பாற்கடற் சயனத்தை விட்டுப் பார்மீது வர இசைந்தது தேவரீர் எம்மிடத்திற் கொண்ட கருணை மிகுதியாலன்றோ!

1 நாழி நவைதீர் உலகெலாம் ஆக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவும் நின்றளந்தால் ஒன்றும்
உலவாப் பெருங்குணத்த உத்தமனே! மேனாள்

1. (அ-ரை) நாழி-அளவு கருவி; நவைதீர்-குற்றமற்ற; நளினம்-தாமரை; உலவா-கெடாத.

தாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
வாழி கடைந்தமுதம் எங்களுக்கே ஈந்தாய்
அவுணர்கள்தாம் நின்னடிமை யல்லாமையுண்டோ?

ஹே, பரம கருணாநிதி! உமது நாபிக் கமலத்தில் தோன்றிய சர்வாண்ட சிருஷ்டி கர்த்தனாகிய பிரமனே இவ்வண்டங்களை யெல்லாம் அளவு கருவியாகக் கொண்டு, உம்முடைய திருக் கல்யாண குணங்களை அளந்தாலும், அளவில் அடங்காத பெருங் குணங்களை யுடைய உத்தமரே! தேவரீர் முன்னாள் இவ்வுலகமே தாழியாக, பாற்கடலே தயிராக, மந்தர மலையே மத்தாக, வாசுகியே நாணாகக் கொண்டு தாமரைக்கை நோவக் கடைந்தெடுத்த அமுதத்தை எங்களுக்கே கொடுத்தருளினீர். எங்களோடு பாற்கடல் கடைந்த அசுரர் ஒன்றும் பெற்றிலர். ஆதலால், அவர்கள் உம் ஏவல் வழி நிற்கும் ஊழியரே யன்றோ?

ஒன்றாகி, மூலத்துருவம் பலவாகி,
உணர்வும் உயிரும் பிறிதாகி, ஊழி
சென்றாச றுங்காலத் திசிலைய தாகி
சிறந்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே! எங்கள்
நவைதீர்க்கும் நாயகமே! நல்வினையே நோக்கி,
நின்றாரைக் காத்தி; அயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையும் நீதந்த தன்றே!

ஆதிகாலத்தில் ஒன்றாயிருந்து, பின்னர் பல்வேறு உருவங்களாய், உணர்வும், உயிரும், உடலுமாகி விரிந்து இயங்கி; ஊழியிறுதியில் விரிந்த வெல்லாம் குவிந்தொடுங்கி மீண்டும் ஒன்றாகி, மீண்டும் நானாவகையாய் விரிந்து இங்ஙனமே ஊழூழி தோறும் விரிந்தும் ஒடுங்கியும் மாறி மாறி வரும் அற்புதத் திருவிளையாடல் புரிந்தருளும் ஞானக் கொழுந்தே! எங்கள் குறைதீர்க்கும் தலைமைத் தேவே! நல்வினை செய்வாரைக் காத்தருளுகின்றாய். தீவினை செய்வாரைக் கோபித்துத் தண்டிக்கின்றாய். இது நியாயமோ? தீவினையும் நீ தந்ததேயன்றோ? உன்னையன்றி உள்ளதெது? ஆதலின் எளியேம் அறியாமையால் தீவினை ஏதேனும் செய்திடினும், அதைப் பாராட்டாது எம்மைக் காத்தருளல் வேண்டும். அடியேன் சரபங்க மகா முனிவ

ரைத் தரிசிக்க வந்தேன். அவரைத் தரிசித்த புண்ணிய விசேஷத்தால் தேவரீர் தரிசனமும் எனக்குக் கிடைத்தது. சரபங்கர் எனக்கு விடை கொடுத்துவிட்டு நிஷ்டை கொண்டார். நான் வானுலகம் செல்லச் சித்தமாயிருந்தேன். அப்போது தங்களைக் கண்டேன். திருப்பாதங்களைத் தரிசித்துச் செல்லலாமென்று வந்தேன்.

இராமர்:—தேவேந்திரா! உனக்குச் சரபங்க முனிவர் தரிசனம் கிடைத்தது பற்றிச் சந்தோஷிக்கிறேன். ஆண்டிருக்கும் அருந்தவர் சரபங்கர் தானோ என்று ஐயமுற்றேன். அவ் வையம் உன்னால் நீங்கிற்று. நல்லது நீ செல். நான் என் தர்மபத்தினியோடும் தம்பியோடும் முனிவர் பெருமானைத் தரிசித்துச் செல்கின்றேன்.

(தேவேந்திரன் போய்விடுகிறான்.)

மூன்றும் களம்

இடம்:—தண்டகாரணியம்; சரபங்கர் ஆச்சிரமம்.

காலம்:—முற்பகல்.

பாத்திரங்கள்:—சரபங்கர், முனிவர்கள், தேவேந்திரன், தேவஸ்திரீகள் முதலியோர்: இராமர், இலக்ஷ்மணர், சீதை.

[அழகிய ஆச்சிரமம் ஒன்றில், புலித்தோல் ஆசனத்தில் யோகதண்டத்தின் மேல் கையை ஊன்றி சரபங்கர் நிஷ்டைகொண்டிருக்கிறார். அவரெதிரே யாககுண்டம் ஒன்றில் ஓமாக்கினி கொழுந்து விட்டெரிகிறது. முனிவர்கள் பலர் சரபங்கருக்கெதிரே ஓமகுண்டத்தின் இருபுறத்திலும் அமர்ந்து மந்திர உச்சாரணஞ் செய்து, நெய் பெய்து ஓமாக்கினியை வளர்த்துக்கொண்டிருக்கின்றனர். ஆசிரமத்தருகே குதிரைகள் பூட்டிய தேவவிமானம் ஒன்று நிற்கிறது. அதில் தேவந்திரன் வீற்றிருக்கிறான். அவனுக்கு ஒரு கந்தருவன் சந்திர வட்டக்குடை பிடித்துக்கொண்டிருக்கிறான். தேவஸ்திரீகள் இருவர் அவனுக்கு இருபுறத்திலும் நின்று வெண்சாமரை வீசுகின்றனர். வேறு சில தேவமாதர் வீணை வாசித்துக்கொண்டு

இன்னிசை பாடிக்கொண்டும் இருக்கின்றனர். இராமர், இலக்ஷ்மணர், சீதை மூவரும் வருகின்றனர். தேவ விமானம் ஊர்ந்து செல்லுகிறது. தேவஸ்திரீகள் முதலியோர் அந்தத் தொடர்ந்து செல்கின்றனர்.]

சீதை:—(இராமரை நோக்கி,) நாதா! தேவவிமானம், திடீரென்று மறைந்தது, மத்தியான சூரியன் திடீரென மறைந்தது போலிருக்கிறதே.

இராமர்:—ஆம். (சீதையையும் இலக்ஷ்மணரையும் நோக்கி) அரவப் படாமல் வாருங்கள். முனிவரின் நிஷ்டை கலைந்து விடும்..

[மூவரும் சரபங்கர் எதிரே சென்று கைகூப்பி நிற்கின்றனர். யாககுண்டத்தைச் சூழ்ந்து வீற்றிருந்த முனிவர்கள் இராமரைக்காணவும் தம் இருக்கைகவிட்டு எழுந்து,]

முனிவர்கள்:—வருக, வருக. இராமச்சந்திரமூர்த்தி, வருக

* வன்பெருவா னகமுய்ய அமரர் உய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிதருய்ய

துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச்
சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ

அன்பொடு தென் திசைநோக்கிப் பள்ளிகொள்ளும்
அணியரவன் திருமுற்றத்து அடியார் தங்கள்

இன்பமிகு பெருங்குழவு கண்டியாமும்
இசைந்துடனே என்று கொலோ இருக்குநாளே!

ஒளியாகி உலகாகி நீவிரிந்தா யென்கோ!
உலகெலாம் நின்னொளியின் உள்ளடங்கிற் றென்கோ!

அளியார உலகம் நீ ஆள்கின்றா யென்கோ!
அமருலகுதான் நின்னதடியடைந்த தென்கோ!

விளியாத மெய்ப்பொருளை நீவிரித்தா யென்கோ!
நீவிரித்த வாறேமெய்ப் பொருள்விரிந்த தென்கோ!

தெளியாமை யில்லைநின் திருவடிகண் மெய்மை!
தெளிந்தாலுஞ் செவ்வனே தெரிந்துரைக்கலாமே!

---

* நாலாயிரம். † சூளாமணி.

தமிழர் கல்விச்சங்கம்.

முதலாவது வருஷாந்தக் கூட்டம்.

24-3-18 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை, நமது அக்கிராசனாதிபதி திவான்பகதூர் கனம். ஜஸ்டிஸ் தி. சதாசிவ ஐயரவர்களின் தலைமையின் கீழ், ஷை சபை மைலாப்பூரில் கூடிற்று. ஆங்கு வந்திருந்தவர்களில், ஸ்ரீமதி மங்களம்மாள், சகோதரி சுப்புலக்ஷ்மியம்மாள் (B. A., L. T.), சகோதரி பாலம்மாள், மகா மகோபாத்யாய பண்டிதர் உ. வே. சாமிநாதையர், திவான்பகதூர் எ. கிருஷ்ணசாமி ஐயங்கார் (B. A.; I. S. .O), ராவ்பகதூர் கெ. பி. இராமநாதையர் (M. A.; B. L; L. T;), ராவ்பகதூர் ச. பவானந்த பிள்ளை (M. R. A. S; F. R. H. S.), ராவ்சாகிப். பி. கே. சுப்பையர் (B. A.), எம். வி. எஸ். அனந்தபத்மநாபராவ் (M. A; L. T.), தி. சே. சுப்பிரமணிய ஐயர் (M. A; L. T.), ஹைகோர்ட்டு வக்கீல்கள் வி. பி. இராமசுவாமி ஐயர், டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார், டி. வி. கோபாலசாமி முதலியார், டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், எஸ். முத்தையா முதலியார், டி. எஸ். இராமசுவாமி ஐயர், பி. என். அப்புஸ்வாமி ஐயர், டி. வி. முத்துகிருஷ்ண ஐயர், வி. எஸ். கோவிந்தராஜ முதலியார்; டி. வி. கோபாலசாமி ஐயர்(B. A.), அ. மாதவையர் (B.A.), பண்டிதர் எம். பி. ஈசுவரமூர்த்தியாபிள்ளை, "ஹிந்து" பத்திராதிபர் எஸ். கஸ்தூரி ரெங்கையங்கார் (B. A; B. L.), "சுதேசமித்திரன்" மானேஜர் வி. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் (B. A.), எ. வி. சுப்பிரமணிய ஐயர் முதலியோர் காணப்பட்டனர்.

முதலில் காரியாந்தக்கூட்டங்கூடி, நிர்வாகசபையாரின் அறிக்கை விவரணப் பத்திரம் படித்து அங்கீகரிக்கப்பட்டது. பிறகு ம-ா-ா-ஸ்ரீ என். ராஜகோபாலையர் (பாரிஸ்டர்) அடுத்த வருஷத்துக் கௌரவக் கணக்குப் பரிசோதகராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பிறகு, அ. மாதவையரால் கொண்டுவரப்பட்ட பின்வரும் நான்கு பிரேரணைகளும் உறுதிபெற்றன:—(1) சங்கத்தின் 26-27-வது விதிகளில் '20' என்பதை '12' என்று குறைக்கவேண்டும். (2) சங்கத்தின் நிர்வாக சபை அங்கத்தினர் எவரேனும், ஷை சபையின் தொடர்ச்சியான நான்கு கூட்டங்களுக்கு வரத் தவறினால், அதனால், ஷை சபையில் தமக்குள்ள ஸ்தானத்தை இழப்பர்; எனினும், அவரை மீண்டும் நிர்வாக சபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கலாம், (3) ஒரே சமயத்தில் ரூ. 500க்குக் குறையாமல் சங்கத்துக்கு நன்கொடை

அளிப்போர், அந்தப் பணத்தை நிர்வாகசபையார் ஏற்றுக்கொண்ட பின், "சங்கத்தின் போஷகர்" என்னும் கௌரவ பட்டத்தைப் பெறுவர். சங்கப் போஷகர்களுக்கு, சங்கப் பிரசுரங்களின் பிரதி ஒன்று, விலையின்றிக் கௌரவமாக அனுப்பப்படும். (4) ஆண்டு தோறும் மார்ச்சு மாதத்தில் கூடும் சங்கத்தின் வருஷாந்தரப் பொதுக் கூட்டத்தின் முன்பு பிரேரணைகள் செய்யவிரும்பும் அங்கத்தினர், தாம் கொண்டுவர விரும்பும் பிரேரணைகளைப்பற்றி, முந்திய பெப்ரவரி மீ 15உக்கு முன்னரே, சங்கத்தின் கௌரவ காரிய தரிசிக்கு எழுத்து மூலமாய்த் தெரியப்படுத்த வேண்டும்; ஆயினும், அப்பொதுக் கூட்டத்தில் பெரும்பான்மையோர் அனுமதி கொடுத்தால், முன் அறிக்கையின்றி, அப்பொழுதே பிரேரணைகள் செய்யலாம்.

காரியாந்தக் கூட்டம் முடிந்தவுடன், பகிரங்கமான பொதுக் கூட்டம் ஆரம்பித்தது. "தேசபக்தன்" பத்திராதிபரான பண்டிதர் டி. வி. கலியாண சுந்தரமுதலியாரின் பிரசங்கம் முதலில் நடைபெற்றது. அவர், பண்டைத் தமிழர்களையும், அவர்களின் கல்வி முறை இலக்கிய முறைகளையும், தற்காலத்தில் இப்படிப்பட்ட சங்கங்களின் ஆவசியகத்தையும், தமிழர் நேசன் பத்திரிகை செய்து வரும் நல்ல வேலையையும் பற்றி விவரமாக எடுத்துப் பேசினர். பிறகு, 'விவேகோதயம்' என்னும் பத்திரிகையின் ஆசிரியரான சகோதரி வி. பாலம்மாள், தற்காலத்தில் மேனாட்டுச் சாஸ்திர ஞானம் நமக்கு இன்றியமையாமலிருப்பதையும், அதன் பொருட்டு நாம் செய்ய வேண்டிய முயற்சிகளையும், ஆங்கிலம் தெரியாத தமிழர் யாவர்க்கும், முக்கியமாய்ப் பெண்பாலார்க்கு, இச்சங்கத்தினால் பிரசுரிக்கப்படும் தமிழர் நேசன் பத்திரிகை எவ்வளவு பேருதவியாகும் என்பதையும், ஆடையாபரணங்களில் அளவின்றிச் செலவிடும் ஸ்திரீகளில் ஏழைகளாயிருப்பவருமே பத்து ரூபாய் கொடுத்து ஒரு பங்கேனும் கொண்டு இச்சங்கத்தை ஆதரிக்க வேண்டிய கடமையையும் பற்றிப் பேசினர். பிறகு அக்கிராசனாதிபதியின் முடிவுரையும் காரியதரிசியின் வந்தன மொழிகளும் நிகழ, சபை கலந்தது.

இதனிடையில், நம் நாட்டுத் தேசபக்தர்களில் சிறப்புற்று விளங்கும் ஹைகோர்ட்டு வக்கீல் ஸி. பி. இராமசுவாமி ஐயர், சங்கத்தில் பத்துப் பங்குகள் கொண்டு, உடனே நூறு ரூபா நோட்டும் கொடுத்து விட்டனர். வேறு சிலரும் உதவிபுரிவதாக வாக்களித்தனர்.

ஒரு கடிதம்.

சிவமயம்.

21-3-18

ஐயா,

நமது தமிழர் கல்விச் சங்கத்துக்காக பங்கு இருபத்தைந்துக்கு ரூ 250 (இருநூற்றைம்பது) தங்கள் பேருக்கு மணியார்டர் செய்திருக்கிறது: வந்து சேர்ந்தபின் கீழ்க்கண்ட விலாசங்களின் பேரால் ரசீதுகளை எமக்கனுப்ப வேண்டியது :—

(1) ரா. ம. சு. ரா.ம. இராமன் செட்டி, புதுவயல், இராமநாதபுரம். } பங்கு ஐந்துக்கு ரூபா 50.

(2) நா. பழ. வீர. முத்தையா செட்டி, சொக்கலிங்கம்புத்தூர், இராமநாதபுரம். } பங்கு ஐந்துக்கு ரூபா 50

(3) அள. கு. சித. இராமன் செட்டி, புதுவயல், இராமநாதபுரம், } பங்கு ஐந்துக்கு ரூபா 50.

(4) கா. ப. ரா. ம. இராமன் செட்டி, ஓ. சிறுவயல், இராமநாதபுரம். } பங்கு ஐந்துக்கு ரூபா 50,

(5) செ. பழ. அளகப்ப செட்டி, காடத்தான் பட்டி, புதுக்கோட்டை. } பங்கு ஐந்துக்கு ரூபா 50.

மேல்கண்ட ஐந்து விலாசங்களின் பேரிலும், இனம் 1-க்கு

தமிழர் கல்விச் சங்கத்து நிர்வாக சபையாருக்கு :-

(23, எறபாலுசெட்டித் தெரு, சென்னை.)

ஐயா,

தங்களுடைய சங்கத்தில் எனக்கு   பங்குகள் உதவும்படி வேண்டுகிறேன். பங்கு ஒன்றுக்கு ரூ. 10 விகிதம், இத்துடன் ரூ.   அனுப்பி யிருக்கிறேன். பாக்கித் தொகையைச் சங்கத்தின் விதிகளின்படி குறிப்பிடும் தவணைகளில் கேட்கும்போது கொடுத்துவிடுகிறேன்.

இங்ஙனம் தங்கள் உண்மையுள்ள,

விலாசம்:—

தேதி:—

கையெழுத்து.

பங்கு 5 ஆக, இனம் 5-க்குப் பங்கு 25-க்கு ரூசீதனுப்புவதுடன்,

(1) ரா. ம. சு. ராம. இராமன் செட்டி, Neikban P. O. Henzada (Via) Rangoon என்று "தமிழர்நேசன்" பத்திரிகை ஆரம்பமுதல் வி. பி. பி. யில் அனுப்பவேண்டியது.

(2) மு. மு. கா. ப. இராமன் செட்டி, இன்சாடா, என்று ஒரு பத்திரிகையும் (3) அள. கு. சித. இராமன்செட்டி, இன்சாடா என்று ஒரு பத்திரிகையுமாக, பத்திரிகை 3 மேலேகண்ட விலாசங்களுக்கு ஆரம்ப முதல் வி. பி. பி. யில் இரண்டு இரண்டு ரூபாய்க்கு அனுப்பி, விபரம் தெரியச் செய்யவேண்டியது.

இங்ஙனம், தங்கள்,

ரா. ம. சு. ரா. ம. இராமன் செட்டி, நெய்க்பான், இன்சாடா ஜில்லா.

குறிப்பு:—தமிழபிமானத்தையும் தேசபக்தியையும் ஒருங்கு விளக்கும் இதுபோன்ற கடிதங்கள் இன்னும் தேவை.

கௌரவ காரியதரிசி, தமிழர் கல்விச் சங்கம்.

இந்தக் கீழ்பாதியை மட்டும் கிழித்துப் பூர்த்திசெய்து, கையொப்பத்துடன் காரியதரிசிக்கு அனுப்பிவிடலாம்.

தமிழர் கல்விச் சங்கம்.

[1860-ம் ௵ 21-வது சட்டப்படி பதிவு செய்யப்பெற்றது.]

நிர்வாக சபையாரின் முதலாவது (1917) வருஷத்து
அறிக்கை விவரணப் பத்திரம்.

1917-௵ டிசம்பர்மீ 31-ம் தேதியுடன் (பிங்கள-௵ மார்கழி மாதம் 17-ம் தேதி) முடிவான முதலாவது ஆண்டின் இறுதியில் நமது சங்கத்தின் நிலைமையையும் அபிவிருத்தியையும் குறித்துப் பின்வருமாறு அறிக்கை செய்கிறோம்:—

சங்கத்தின் உற்பத்தி:—நள ௵ ஸரஸ்வதி பூஜை தினத்தன்று (5-10-1916) காலையில், ம-ா-ா-ஸ்ரீ A. அரங்கசாமி ஐயங்காரும், A. மாதவையரும் பின்னவர் வீட்டில் சந்தித்தபொழுது, அதற்கு முன்னரே நடந்திருந்த சம்பாஷணையின் தொடர்ச்சியாக, தமிழமக்களுக்கு நவீன சாஸ்திர ஞானத்தைப் புகட்ட வேண்டியதன் முக்கியத்தையும் அத்தியாவசியத்தையும் பற்றி மீண்டும் யோசித்து, அவ்விஷயத்தில் உற்சாகமும் ஊக்கமுமுடைய மற்ற நண்பர்களுடன் கலந்துபேசி மேல்நடத்துவதென்று தீர்மானித்து, அதன்பொருட்டு ஒரு லிகிதத்தையும் உடனே தயாரித்தனர். அந்த லிகிதத்தில் வேண்டிக்கொண்டபடி, 21—10—1916 ஸ்திரவாரத்தன்று மாலையில், இப்பொழுது நிர்வாக சபையிலுள்ள எழுவர், சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் கூடி ஆலோசனை செய்தனர். பிறகு, அவ்வெழுவரில் ஒருவரான ம-ா-ா-ஸ்ரீ T. R. வேங்கடராம சாஸ்திரியார் வீட்டில் சில கூட்டங்களும் ஆலோசனைகளும் நிகழ்ந்தன. இவ்வாறு சேர்ந்து முயன்றுகொண்டிருந்த நண்பர்களில்சிலர், இவ்விஷயத்தை முன்னிட்டு, கனம். திவான்பகதூர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரவர்களை அணுகியவுடன், அவர்கள், சங்கத்தின் அக்கிராசனத்தை வகித்துத் தம்மால் இயன்ற அளவு பலவாற்றாலும் உதவிசெய்ய, மனமுவந்து ஒப்புக்கொண்டனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய கனம். இராமநாதபுரம் ராஜா அவர்களும் உப அக்கிராசனத்தை வகித்து, நன்முயற்சியை ஆதரிக்க இசைந்தனர். ஆகவே, நமது தமிழர் கல்விச் சங்கம் 26-3-1917 அன்று பதிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் அபிவிருத்தியும் நிலைமையும்:---இந்த முதலாவது அறிக்கைப் பத்திரம், சங்கத்தின் வாழ்நாளில் முதல் ஒன்பது மாதங்களையே குறிப்பதாகும். நிர்வாகசபையார் 5-4-1917 அன்று முதலில் கூடி,

அது முதல் மாதந்தவருமல் தலைஞாயிறு தோறும் கூடி வந்திருக்கின்றனர். கௌரவக் கணக்குப் பரிசோதகரால் தயாரிக்கப்பட்ட இந்த முதலாவது ஆண்டின் வரவு செலவு விவரக் குறிப்பும் கணக்குப் பாக்கியைக் காட்டும் பட்டியும், இஃதுடன் சேர்க்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் கண்டபடி, முதல் ஒன்பது மாதங்களுக்குள், **42** பேர்கள் எடுத்துக் கொண்ட **126** பங்குகளே சேர்க்கப்பட்டன; நிர்வாக சபையாரின் தீர்மானத்தின்படி, ஆண்டில் ஆறு சஞ்சிகைகளுக்குக் குறையாமல் வெளிவரும் தமிழர் நேசன் என்னும் பத்திரிகையும் ஆவணி மாதமுதல் பிரசுரிக்கப்பட்டுவருகிறது. இப்பத்திரிகையின் வருஷச் சந்தா, சங்கத்தின் அங்கத்தினர்க்கு 2-ரூ. என்றும், சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் பத்திரிகையை வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும், பிறர்க்குச் சந்தா ஆண்டுக்கு 3-ரூ. என்றும், தனிப்பிரதியின் விலை **8** அணா என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இச் சங்கத்தின் உத்தேசங்களில் இப்பத்திரிகை ஒன்றே ஒழுங்காய் நடைபெற்று வருகின்றது. சங்கத்தின் பங்காளிகளின் தொகையைப் பெருக்கிப் பணம் சேர்த்துக் கொண்டே மற்ற முயற்சிகளில் தலையிட வேண்டியதாயிருக்கிறதனாலும், பத்திரிகையை வெளியிடும் செலவுக்குப் போதுமான சந்தாத்தொகை இன்னும் சேராததனாலும், சங்கத்தின் அங்கத்தினர் பலரும், தமிழபிமானமும் தேசாபிமானமு முள்ள இதர கனதனவான்களும் சீமாட்டிகளும், இலாபத்தைக் கருதாது பரோபகாரமாக உழைத்து வரும் இச்சங்கத்தில் பங்குகள் கொண்டும், பத்திரிகையை ஆதரித்தும், பிறரை அங்ஙனஞ் செய்யத் தூண்டியும், பேருதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம். சங்கத்தின் நிர்வாகசபையாரில் ஒருவராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் L. D. சுவாமிகண்ணுப் பிள்ளை அவர்கள் தமது ஸ்தானத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டதனால், அவருக்குப்பதிலாக ஸ்ரீமதி மங்களம்மாள் அவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இச் சங்கம் ஏற்பட்டது முதல் இதற்கு இடம் உதவியும் வேறு வழிகளில் இதனை ஆதரித்தும் வரும் சுதேசமித்திரன் பத்திராதிபருக்கும், நிர்வாக சபையார் மாதந்தோறும் கூடுவதற்குத் தமது வீட்டில் இடங்கொடுத்துவரும் நமது அக்கிராசனாதிபதிக்கும், தமிழர் நேசன் பத்திரிகைக்கு விஷயதானம் செய்துவரும் தேசபக்தர்களான மேதாவிகளுக்கும், சங்கத்தின் முதலாவது வருஷக் கணக்குகளை ஊதியமின்றிப் பரிசோதித்துதவிய ம-ா-ா-ஸ்ரீ N. இராஜகோபாலையருக்கும் (Bar-at-law & Certificated accountant) சங்கத்தாரின் வந்தனங்கள் உரியன.

T. V. கோபாலசாமி முதலியார்.

தமிழர் கல்விச் சங்கத்தின் காரியதரிசி.

தமிழர் கல்விச்சங்கம்—சென்னை.

1917-ம் ஸு டிசம்பர் மீ 31உ முடிவான முதலாவது ஆண்டின் வரவு செலவு விவரக் குறிப்பு.

வரவு	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	செலவு	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
பங்குகளினால்	1255	0	0				எழுது கருவிகள் (ஸ்டேஷனரி)	3	1	0			
பத்திரிகைச் சந்தா	260	0	0				ஸ்டாம்பு, செக் புஸ்தகம்	53	6	1			
வட்டி	7	9	3				சில்லறைச் செலவு	26	1	1			
							துவிசக்கர வண்டி	75	0	0			
							அச்சுக்கூலி	347	8	0			
							பிரயாணச் செலவு	10	12	6			
							குமாஸ்தா சம்பளம்	120	0	0			
							ஏஜண்டு சம்பளமும் பிரயாணச் செலவும்	198	3	6			
							சங்கத்தைப் பதிவு செய்ய	50	0	0			
							பாங்கியில் இருப்பு	338	0	3			
				1522	9	3	கையில் ரொக்கம்	300	8	10	1522	9	3
மொத்தம். ...	1522	9	3	1522	9	3	மொத்தம். ...	1522	9	3	1522	9	3

பரிசோதித்துப் பார்த்ததில் கணக்குச் சரியாயிருக்கிறது.

T. V. கோபாலசாமி
கௌரவ காரியதரிசி.

20—2—18

N. ராஜகோபாலன்
கௌரவக் கணக்குப் பரிசோதகர்.

1917-ம் ௵ டிசம்பர் ௴ 31௳ முடிவான முதலாவது ஆண்டின் கணக்குப் பாக்கிப்பட்டி.

கடன் (Liabilites)	ரூ.	அ.	பை.	சொத்து (Assets)	ரூ.	அ.	பை.
நிதியின் மொத்த மூலதனம் (நாமமாத்திரம்)				பாங்கியில் கையிருப்பு	338	0	3
				கையில் ரொக்கம் இருப்பு	300	8	10
50 ரூபாய் பெறுமான 2000 பங்குகளுக்கு	100000	...	...	துவிசக்கரவண்டி	75	0	0
கையொப்பமிட்ட மூலதனம்				சங்கத்துக்கு வரவேண்டிய பாக்கி	66	0	0
50 ரூபாய் பெறுமான 126 பங்குகளுக்கு	6300	...	...				
செலுத்தப் பட்ட மூலதனம்				பத்திரிகைப் பிரதிகள் (மதிப்புக் கிரையம்)	50	0	0
முதல் தவணை 10 ரூபாய் பெறுமான 125 பங்குகளுக்கு	1250	...	...	பாக்கி (Excess of liabilities over assets)	625	6	11
ஒரு பங்குக்குரிய 10 ரூபாயில் வரவு	5	...	...				
சந்தாவுக்காக முன் பணம்	200	...	...				
மொத்தம்.	1455	...	...	மொத்தம்.	1455	...	...

பரிசோதித்துப் பார்த்ததில் கணக்குச் சரியாயிருக்கிறது.

T. V. கோபாலசாமி
20—2—18
கௌரவ காரியதரிசி.

N. ராஜகோபாலன்
கௌரவக் கணக்குப் பரிசோதகர்.

THE SWADESAMITRAN.